பதிவு இலக்கம் : 105267

வார இதழ்

# தீபம்

12.07.2020 தீபம் – 233

இணையப் பதிப்பு



## திருக்கோணேஸ்வரம் எமதே!
## நல்லூரும் எமதே ! அனைத்தும் எமதே !!

எல்லாவல மேத்தானந்தா

இராமாயணத்தின் நாயகன்
இராமனைக் கைவிட்டு
மந்திரியைக் கொண்டாடும்
கம்பவாரிதி

## வடக்கு – கிழக்கு
## தொல்பொருளியல் வன்முறையும்

மாற்று அரசியற் பார்வையின்
முக்கியத்துவமும்




## நாடாளுமன்றத் தேர்தலும் தமிழினமும்

## ஒன்றரைக் கட்சிகளின் கூட்டமைப்பு

- குருபார்வை -

கட்சி அரசியலுக்கப்பால் மக்கள் அரசியலைப் பேசும் தமிழருக்கான ஒரே வார இதழ்




**இலங்கை நிலவரம்**

| தொற்றாளர்கள் | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் |
|---|---|---|
| 2631 | 639 | 1981 |

# இடர்காலப் பதிவுகள்

- கணபதி சர்வானந்தா -

“நாட்டை மீளவும் திறக்கிறோம்” என்று அரசு சொன்ன போது வைத்தியர்கள் அதை முட்டாள்தனமான நடவடிக்கை என்றனர். நாட்டை வழமைக்குத் திருப்பாமல் ஒன்றையும் நகர்த்த முடியாதென்று அரசு வாதிட்டது. கணக்கு மறைக்கப்பட்டதோ, என்னவோ தெரியவில்லை. அதன் பின்னர் நோய்த்தொற்றுக் குறைந்துவருவதாக ஊடகங்கள் செய்திகளை வெளிக்கொணர்ந்தன. சிறிது சிறிதாக மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பினார்கள் என்று சொல்ல மாட்டேன். திருப்பப்பட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆரம்பத்தில் மக்கள் பீதியோடுதான் இருந்தார்கள். எவரும் அவசியமின்றி வெளியே நடமாடுவதில்லை. தலைநகரில் கூட பெருந்தெருக்கள் நெருக்கடிகள் அற்றுக் காணப்பட்டன. போக்கு வரத்திலும் மக்கள் நெருக்கடிகளை ஏற்படுத்தவில்லை. தொலை தூரப் போக்கு வரத்தில் மக்கள் நெருக்கடியின்றிப் பயணித்தனர். “இப்போது பயமில்லை” என்று வாய்வழிச் செய்திகள் பரப்பப்பட்டன. மக்கள் இயல்பாக நடமாடத் தொடங்கிய வேளையிலேயே . பேரிடியாய் கொரோனத் தொற்றின் இரண்டாவது அலைபற்றிய பேச்சுத் தொடங்கியது. அது பற்றிய எச்சரிக்கையும் தற்போது வந்துவிட்டது ???

மக்கள் இயல்பாக நடமாடுவதை அவதானித்த மருத்துவ உலகம் மக்களை எச்சரித்துக் கொண்டே இருந்தது. “நோய் இன்னும் கட்டுப்பாட்டுக்குள் வர வில்லை. எனவே அவதானமாக இருங்கள்” என அவர்கள் தெளிவாகச் சொல்லி மக்களை எச்சரித்திருந்ததை பலரும் அறிவர், அப்படி இயல்புக்குத் திரும்பும் மக்களுக்குப் பொது வெளியில் நடமாடுவதைப் பற்றியும், சமூக இடைவெளியைப் பேணுவது பற்றியும் பல விதமான ஆலோசனைகளைச் சொல்லி விளம்பரப் பதாதைகளையும், சுவரொட்டிகளையும் சுகாதாரத் திணைக்களம் மக்கள் பார்வைக்கு வைத்தது. நிபந்தனைகளுடனும், விசேட அறிவிப்புடனும் குறிப்பாகச் சிகை அலங்கார நிலையங்களும், உணவுச் சாலைகளும் திறக்க சுகாதாரத் திணைக்களம் அனுமதி அளித்தது. ஆனால் அவர்களின் நிபந்தனைகளை இவர்கள் செவிமடுத்துச் சரிவர அவற்றைப் பேணினார்களா என்பது கேள்விக்குரிய விடயமே?

கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் ஆலோசகராகப் பணிபுரிந்த ஒருவருக்கும், அவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் கொரோனத் தொற்று உறுதிப்படுத்தப் பட்ட செய்தி வந்தது. அதனைத் தொடர்ந்து பாடசாலைகளை வரும் திங்கள் தொடக்கம் ஐந்து நாட்களுக்கு முடக்குவதாகக் கல்வி அமைச்சு இன்று அறிவித்திருக்கிறது. இது ஒரு ஆராக்கியமான சமிக்ஞை அல்ல என்று வைத்திய நிபுணர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.




போர்க்கால் செய்திகள்போலத் தொடர்ந்தும் கொரோனாச் செய்திகள் வந்தவண்ணம் இருக்கிறது. சமூக வளைத்தளங்களில் எல்லாம் ஒரே அமளியாக இருப்பதாக எனது நண்பர் ஒருவர் தகவல் சொன்னார்.

கொரோனாத் தொற்றின் இரண்டாவது அலையின் முதற்படி ஆரம்பித்த நிலையில். வடக்கிலும் தொற்று அதிகரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு என்று எச்சரிக்கை விடுத்துள்ள யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் "மக்கள் இது தொடர்பில் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்" என்றும் மக்கள் ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே நோயைக் கட்டுப்படுத்துவது சாத்தியம் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இந்த இரண்டாவது அலை பற்றிய செய்தி வந்ததில் இருந்து திட்டமிட்ட பல நடவடிக்கைகளில் மாற்றங்கள் ஏற்படும் என எதிர்வு கூறப்படுகிறது. விமான நிலையம் திறக்கவிருந்த திகதி பிற்போடப்பட்டிருப்பதாக அறிவிப்புக் கிட்டியிருக்கிறது. இது போன்ற பல நிகழ்வுகள் பிற்போடப்படலாம். அதே சமயம் தேர்லுக்கு என்ன நடக்கும்? என்று ஏக்கப் பெருமூச்சு விடுகிறார் ஒரு தேர்தல் ஆர்வலர்.

கொரோனா வைரஸ் தொற்றுநோயின் முதல் அலையே இன்னும் முற்றாக முடிவுக்கு வரவில்லை. அதற்குள் அதன் 2-வது அலையா? என விழியைப் பிதுக்கிக் கொள்பவர்கள் அமெரிக்காவில் நடக்கவிருப்பதைக் கேட்டால் என்ன செய்வார்கள்?

இரண்டாவது அலை அமெரிக்க நாட்டில் தாக்குதல் நடத்தும் எனப் பரபரப்புத் தகவல் வெளியாகி உள்ள நிலையில்.. இதுபற்றி அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் நோய்த் தடுப்பு மைய இயக்குனர் ராபர்ட் ரெட்பீல்டு, வாஷிங்டன் போஸ்ட் நாளேட்டுக்கு அளித்த பேட்டியின்போது கூறியதாவது:- அமெரிக்காவில் ஒரே நேரத்தில் காய்ச்சல் தொற்றுநோயும், கொரோனா வைரஸ் தொற்றுநோயும் இருக்கும். இது அமெரிக்க சுகாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி ஆகும். அதிர்ஷ்டவசமாக அமெரிக்காவில் வழக்கமான காய்ச்சல் காலம் முடிகிற நிலையில் கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவத்தொடங்கியது. அமெரிக்காவில் வரும் குளிர்காலத்தில் கொரோனா வைரஸ் தொற்றுநோயின் இரண்டாவது அலை தாக்கும். இது தற்போது பரவி வருகிற கொரோனா வைரஸ் தொற்றுநோய்த் தாக்கத்தை விடக் கடுமையானதாக இருக்கும். கொரோனா வைரஸ் தொற்றுநோய்க்கு மத்தியில் இரண்டு விதமான சுவாசக் கோளாறும் ஏற்படும். இது கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு இருக்கும். என்று அவர் கூறியது அமெரிக்க மக்களிடையே பெரும் பீதியைக் கிளப்புவதாக அமைந்துள்ளது.

இரண்டாவது அலை உக்கிரமாக இருக்கும் என்கின்றனர் ஒரு சாரார். இல்லை முன்னையவிட வீரியம் குறைந்ததாகத்தான் வரும். எனவே அது தொடர்பாகப் பயப்படுவதில் அர்த்தமில்லை என்கின்றனர் மறுசாரார். அது மட்டுமல்ல, “இரண்டாவது அலை தாக்கும் போது மக்கள் கொரோனாவுக்கு மத்தியில் வாழப் பழகியவர்களாக இருப்பர். ஆதலால் அது தொடர்பாக அதிகம் அச்சப்படத் தேவை இல்லை என்றும், தனிநபராகவும், கூட்டாகவும் தொற்றுக்கு எதிராக என்ன நடவடிக்கைகளை எடுக்க உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்துகிறதோ, அதனைத் தொடர்ந்தால் போதும்” என்றும் அறிவுரை சொல்லப்படுகிறது.

இவ்வளவு அறிவுறுத்தியும் ஏன் வருமுன் காப்போராக நாம் இல்லை.! அது வந்து வீட்டுக் கதவைத் தட்டும்போதுதான் அது பற்றிச் சிந்திக்கிறோம்? கொரோனாவில் மட்டுமல்ல, எந்தவிடயத்திலும் நாம் அப்படித்தானே நடந்து கொள்ளுகிறோம்.எமது சூழலில் யாருக்காவது இந்நோய் வருமானால், சில நொடிகள் போதும் அது வந்து எம்மை அடைவதற்கு.

“நோய் வந்தால் அது மாறலாம்!” என்பது வேறு கதை.. அதற்கிடையில் சின்னாபின்னப்படப்போகும் நாம்.. எமது வாழ்க்கை, எமது உறவுகள், எமது சமூகம் என்று எண்ணும்போது. சமூகப்பொறுப்பு என்ன என்பது தெரிய வேண்டுமே!

பதிவு இலக்கம் : 105267
வார இதழ்
தீபம்
12.07.2020 தீபம் - 233
இணையப் பதிப்பு

# சம்பந்தர் பின்னால் வன்முறையா? சுமந்திரன் பின்னால் மென்முறையா?

“திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன். வன்முறையில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஒரு வன்முறையாளன் தான் உங்களைப் பிரநிதித்துவப்படுத்த வேண்டும் என்று விரும்பினால் தயவு செய்து எனக்கு வாக்களிக்க வேண்டாம். என்னைத் தோற்கடியுங்கள்.” தென் மாராட்சியில் நடை பெற்ற கூட்டமொன்றில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சட்டத்தரணி சுமந்திரன் மேற படி வசனங்களை மக்கள் முன்வைத்துத் தன்னை ஒரு அஹிம்ஸாவாதியாகக் காட்டிக் கொண் டார். ஒரு இலட்சம் வாக்குகளால் வெற்றி கொள்வேன் என்று அந்நேரத் தேர்தல் கள நிலவரத் தைக் கணக்கிலிட்டு அமைதியாகவும், புளங்காகிதத்தோடும் அறிக்கைவிட்ட அவரால் தொடரும் தோல்விகளைத் தாங்க முடியவில்லை. கடைசி அஸ்திரமாக அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவி ஏற்பது பற்றிப் பரப்புரை செய்யத் தொடங்கி இருக்கிறார். அதுவும் தமிழ் இளைஞர்கள் எதிர்காலத்துக் கென வாக்காலத்து வாங்குகிறார்.

இச் சமயத்திலே கடந்த வருடம் அதாவது 01.07.2019 அன்று வெளிவந்த வலம்புரி நாளேட்டை எனது கரங்கள் புரட்டுகின்றன. தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் ஆயுதம் ஏந்திப் போராடுவது பற்றி சிந்திக்க வேண்டிவரும். - இரா சம்பந்தன் எச்சரிக்கை. ஏன்ற தலைப்பில் எழுதப்பட்ட செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்ததை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட் பாளர்களுக்கும், உறுப்பினர்களுக்கும். குறிப்பாக அவர்களை நம்பி வாக்களிக்கப்போகும் தமிழ் வாக்காளர்களுக்கும், விசேடமாகச் சட்டத்தரணி சுமந்திரனுக்கும் அறிவிக்கக் கிடைத்ததை யிட்டு மகிழ்ச்சி.

“யாழ்ப்பாணம் - ஆயுதம் ஏந்திப் போராடினால்தான் அரசியல் தீர்வு குறித்து ஆக்கபூர்வ மான கருமங்களைப் பெறமுடியும் என்றால், அது குறித்துச் சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்” என அச்செய்தி தொடர்கிறது. இத்தருணத்தில் பல வருடங்களுக்கு முன்னர் தமிழரசுக் கட்சியின் தலைவர் தந்தை செல்வநாயகம் அவர்கள் சிங்களப் பேரினவாத அரசுக்குச் சொன்ன ஒரு விடயத்தை ஞாகப்படுத்திக் கொண்டு தொடரலாம் என்று எண்ணுகிறேன்.

எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள நாம் நேர்மையானதும், தர்மமுமான வழி களைத் தேர்ந்தெடுத்துப் போராடி வருகிறோம்.ஆனால் அத்தகைய போரட்டங்களுக்கு நீதியான வழியில் பதில் தராது ஆயுத முனையில் அதனை அடக்க முனைகிறீர்கள்.இந்த நிலை இப்படியே தொடருமானால் எமது அடுத்த தலைமுறையினர் நீங்கள் பதில் தரக் கையாளும் முறையிலேயே உங்களுக்குப் பதில் தருவது தவிர்க்க முடியாததொன்று என அறிக்கையிட்டார். ஆதன் பின்னர் எமது போராட்ட வரலாற்றில் அவர் சொன்னதைப்போல விடயங்கள் அரங்கேறின. மிக அண்மையில் சம்பந்தன் அவர்கள் மீண்டும் மேற்கண்டவாறு அதனை வலியுறுத்தியிருந்தார். எனவே சம்பந்தன் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் தான் ஒரு வன்முறையாளனான மாறுவது சாத்தியமே என்றதை வலியுறுத்தியிருந்தார்.

ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரன் தனக்கு வன்முறையில் நம்பிக்கை இல்லை என்று குளறுகிறார். வன்முறையில் நம்பிக்கை கொண்டவர்கள் தனக்கு வாக்களிக்க வேண்டாம் என்றும், தன்னைத் தோற்கடிக்கலாம் என்றும் சொல்லுவதிலிருந்து, பின்வருவனவற்றைத் தெளிவாக்க வேண்டியது அவரது பொறுப்பும், கடமையும் என்று மக்கள் நம்புகின்றனர்.

அப்படி ஒரு சூழ்நிலை ஏற்படுமாயின் சட்டத்தரணி சுமந்திரன் சம்பந்தரின் தலைமையை ஏற்றுக் கொள்வாரா? அல்லது நிராகரித்து விட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகு வாரா? என்பதை மிகவும் கண்ணியமாக சுமந்திரன் வெளிப்படுத்த வேண்டும் எனத் தமிழ் சமூகம் எதிர்பார்க்கிறது.

சம்பந்தருடைய கொள்கையை ஏற்றுக் கொள்பவர்கள், அவர் தலைமையை ஏற்றுக் கொண்டு இருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சுமந்திரனுக்கு வாக்களிக்க முடியாது என்றும் அதேசமயம் சுமந்திரன் பேச்சைக் கேட்டு அவர் பின்னே செல்பவர்கள் சம்பந்தனுக்கு வாக்களிக்க முடியாது என்பதும் தெட்டத் தெளிவாகிறது.

சம்பந்தர் பின்னால் சென்று வன்முறைப் போராட்டமா? சுமந்திரன் பின்னால் சென்று சாத்வீகப் போராட்டமா? மக்கள் வாக்களிக்க முன்னர் சிந்திக்க வேண்டியதே இதுவே!!

- கம்சன் -



தமிழர்களுக்கு தீர்வு கிடைக்காவிட்டால்

வலம்புரி (01.07.2019)

ஆயுதம் ஏந்தி போராடுவது பற்றி

சிந்திக்க வேண்டி வரும்

இரா.சம்பந்தன் அரசுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆயுதம் ஏந்திப் போராடினால் தான் அரசியல் தீர்வு குறித்து ஆக்கபூர்வமான கருமங்களைப் பெறமுடியும் என்றால் அதுகுறித்து சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## கொரோனா இரண்டாவது அலையும், பொதுத் தேர்தலும்.

கொரோனாவின் இரண்டாம் அலை இலங்கையில் திடீரென தீவிரம் கொள்ளத் தொடங்கியுள்ளது. இது மக்கள் மத்தியில் மீண்டும் அச்ச உணர்வை அதிகரிக்க செய்துள்ளதுடன் குழப்ப நிலையையும் தோற்றுவித்துள்ளது.

கொரோனா இரண்டாவது அலை தொற்று சமூகத்திற்குள் பரவாதபடியால் நாடு மீண்டும் முடக்க நிலைக்குள் செல்லும் அபாயம் இல்லையெனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன அவர்கள் தெரிவித்துள்ள அதேவேளை இந்த இரண்டாவது அலையானது நாட்டிற்குப் பேராபத்தை ஏற்படுத்தப் போகிறது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அபாயச் சங்கை ஒலித்துள்ளமையானது மக் களைக் கடுமையாக யோசிக்க வைத்துள்ளது.

அதாவது சுகாதார அறிவுறுத்தல்களை முறையாகவும், கடு மையாகவும் கடைபிடிக்காவிட்டால் கொரோனாவின் இரண்டாம் அலை இலங்கைச் சமூகத்தில் மீண்டும் பரவுவதைத் தடுக்க முடியாது என எச்சரித்துள்ள ஜீ.எம்.ஓ.ஏ. என்ற அந்த அமைப்பினர், இது மிக வும் மோசமான சூழ்நிலையை உருவாக்கிவிடும் எனவும் அறி வுறுத்தியுள்ளனர்.

மருத்துவ அதிகாரிகள் சங்கம் விடுக்கும் செய்திகள் மேற் கண்டவாறு இருக்க கொரோனா தடுப்புக்கான செயலணி ஒன்றை அறிவித்துள்ள அரசின் செயற்பாடானது, கோவிட் 19 எனும் கொரோனா என்ற வைரஸ் தொற்றுக் குறித்து அச்சம் இப்போதைக்கு முடிவுறப் போவதில்லை என்ற செய்தியைச் சொல்லாமல் சொல்லி யுள்ளது என்றே கூற வேண்டும்.

அரசு உருவாக்கும் செயலணிகள் எல்லாமே இப்போது ஏகப் பட்ட சந்தேகத்தையும்,அச்சத்தையும் உருவாக்குவதாகவே உள்ளது. கொரோனா இரண்டாவது அலை குறித்து அச்சப்படத் தேவையில்லை எனப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ள அதேசமயம் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா அவர்கள், கொரோனா மீண்டும் சமூகத் தொற்றாக மாறு மேயானால் பொது மக்களுக்கு முன்னறிவித்தல் கொடுக்காது நாட்டை முடக்க நிலைக்கு கொண்டு வரமாட்டோம் என்று கூறியுள்ள மையானது கொரோனா இன்றைய நாளில் நாட்டில் எத்தகைய வீரி யத்துடன் இருக்கிறது என்பது குறித்த தீர்க்கமான எந்த கருத்து நிலைப்பாட்டிலும் இல்லை என்ற செய்தியை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

மறுபக்கம் சுகாதார சேவைப் பணிப்பாளரும் விசேட வைத் திய நிபுணருமான அனில் ஜெயசிங்க அவர்கள் கொரோனாவின் அடுத்த தாக்கம் கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு மையத் தில் இருந்தே ஆரம்பமாகியுள்ளது. இந்தத் தொற்றை சமூகத்தினுள் பரவவிடாமல் தடுக்கும் பொறுப்பு மக்களிடமே உள்ளது என்றும் “உங்கள் பாதுகாப்பு உங்களிடமே“ என்ற தொனிப்பட அறிவிப் பொன்றை விடுத்துள்ளார். கொரோனாவின் இரண்டாம் தாக்குதலை அவர் உறுதி செய்துள்ள நிலையில் மக்களிடையே கொவிட் -19 என்ற நோய் சமூகத் தொற்றாகி விடுமோ என்ற அச்சம் ஏற்படுவது தவிர்க்க முடியாததே!

ஓயாத அலையாக உலகெங்கும் அலையும் கொரோனா அலையுடன் தேர்தல் அலையும் மக்களை மேலும் அலைய வைப்பது தான் கொடுமை...!

மக்கள் இன்று பல வழிகளிலும் பாதுகாப்பற்ற ஒரு சூழ் நிலையில் இருக்கையில் தேர்தல் பிரச்சாரகர்களும் வேட்பாளப் பெருந்தகைகளும் அவர்களை மேலும் குழப்பத்தற்கும் அச்சத்திலும் இயங்கும் வகையில் நாளொரு கருத்தும் பொழுதொரு அறிக்கை யுமாக சமூகப் பொறுப்பற்றவர்களாக நடந்து கொள்வதுதான் வேத னையான விடயம்.

ஒரு தேர்தல் பிரசார கூட்டத்தில் கொரோனா இரண்டாவது அலைக்கு முழுப்பொறுப்பு அரசாங்கமே என்று விளாசியிருக்கிறார் ஒரு பெரும்பான்மை இனத் தலைவர். அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூட கொரோனாவுக்கே சீனாதான் பொறுப்பு என்று கூறியதும் நினை விருக்கலாம். எல்லாப் பிரச்சினைக் கும் மற்றவர்கள் மேல் பொறுப்புப் போட்டுத் தமக்குள்ள பொறுப்பை தட்டிக்கழித்துத் தப்பிவிட முயலும் ஆட்சியாளர்களும், அரசியல் வாதிகளும் உலகில் இருக்கும் வரை கொரோனா தனது இரண்டா வது அலையை மட்டுமல்ல, நூறாவது அலையையும் மக்கள் மீது பாயவிடும் என்பதே உண்மை.

மக்களே மிக அவதானம் - உங்கள் பாதுகாப்பு உங்கள் கைகளிலேயே என்ற சுகாதார சேவைப் பணிப்பாளரின் எச்சரிக்கை அர்த்தமுள்ள ஒன்றேயாகும். கொரோனாவுக்கு மட்டுமல்ல தேர்தலுக் கும் பொருந்தும்.

# 400 ஆவது ஆண்டு நிறைவு

# யாழ்ப்பாண நகரத்தின் வரலாற்றுச் சுவடுகள்

## ஒல்லாந்தரின் யாழ்ப்பாண வெற்றி

இ. மயூரநாதன்



ஒல்லாந்தருக்கு எதிரான சதியில் ஈடுபட்டோருக்கான தண்டனைகள்

ஒல்லாந்தருக்கு எதிரான சதியும் பூதத்தம்பி கதையும் தவறுக்கு வருந்துகிறோம். சென்ற இதழில் இக்கட்டுரையின் ஆரம்ப வரியிலுள்ள ஆண்டுகளை "1640 களில் இருந்தே இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சியில் இருந்த நகரங்கள் படிப்படியாக ஒல்லாந்தரிடம் வீழ்ச்சியடையத் தொடங்கிவிட்டன. 1656 ஆம் ஆண்டில் கொழும்பும் வீழ்ச்சியடைந்தது." என்று படிக்கவும். தட்டச்சுச் செய்வதில் ஏற்பட்ட கோளாறுக்கு வருந்துகிறோம். வாசகர்களே!"


----------------------------

பின்னர், ஒல்லாந்தரின் கவனம் யாழ்ப்பாணத்தின் மீது திரும்பியது.ஒல்லாந்தர் யாழ்ப்பாணக் கோட்டையை 1658 யூன் மாதத்தில் கைப்பற்றிச் சில வாரங்களில், இந்தப் படை நடவடிக்கையில் பங்குகொண்ட பெரும்பாலான ஒல்லாந்தப் படையினர் நாகபட்டினத்தைக் கைப்பற்றுவதற்காயாழ்ப்பாணத்தில் இருந்து திருப்பி அழைக்கப்பப்பட்டனர். யாழ்ப்பாணக் கோட்டையின் பாதுகாப்புக்குக் குறைந்த அளவு படையினரே இருந்தனர். முன்னைய அரசில் பணிபுரிந்த போர்த்துக்கேயர் சிலரும் ஒல்லாந்தருக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் பணியாற்றினர். 1658 ஆம் ஆண்டு செப்டெம்பரில் இவர்களில் ஒரு பகுதியினரும், உள்ளூரைச் சேர்ந்த சிலரும் சேர்ந்து ஒல்லாந்தருக்கு எதிராகச் சதித் திட்டம் ஒன்றை வகுத்ததாக பல்தேயஸ் பாதிரியார் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். தேவாலயத்தில் வழிபாடு நடைபெறும் நேரத்தில், கோட்டையில் இருந்த எல்லா உயர் அதிகாரிகளையும், காவலர்களையும் கொன்றுவிட்டுக் கோட்டையைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதே மேற்படி குழுவினரின் திட்டமாக இருந்தது என்றும் அவர் கூறுகின்றார். எனினும், வழிபாடு நடந்துகொண்டிருக்கும்போது, ஒரு தற்செயல் நிகழ்வாக, படைத் தலைவனும், முதலியாரும் சிங்கள இனத்தைச் சேர்ந்தவனுமான டொன் மனுவேல் அந்திராடோ என்பவன் தனது 18 உதவியாளர்களுடன் தேவாலயத்தின் வாயிற் பகுதியில் நின்றதால், இந்தத் திட்டம் வெற்றி அளிக்கவில்லையாம். ஆனாலும், அச்சமயத்தில் போர்த்துக்கேயர் சிலர் வாளில் கையை வைத்துக்கொண்டு தேவாலய வாயிற்பகுதியில் நின்றதாகவும், அது அந்திராடோவுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது என்னும் குறிப்பும் பல்தேயசின் நூலில் காணப்படுகின்றது.

சில நாட்களுக்குப் பின்னரே இத்திட்டம் குறித்துக் கட்டளைத் தளபதியான ஜேக்கப் வான் டெர் றீ அறிந்துகொண்டதாகவும், அதன் பின்னர் கோட்டையின் பாதுகாப்பு இரட்டிப்பாகப்பட்டு, கோட்டை வாசற் கதவுகளும் மூடப்பட்டதுடன், சதித் திட்டத்துடன் தொடர்புபட்ட அனைவரும் பிடிக்கப்பட்டதாகவும் தெரிகின்றது. இவ்வாறு பிடிபட்ட 15 பேர்களில், மூவர் சதிக் குழுவின் தலைவர்களாக அடையாளம் காணப்பட்டனர். ஒருவன் மன்னாரைச் சேர்ந்தவன் என்றும், இன்னொருவன் டொன் லூயிஸ் என்றும், மூன்றாமவன் ஒரு போர்த்துக்கேயன் என்றும் பல்தேயசின் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. பிடிபட்டவர்களுள் யேசுசபையைச் சேர்ந்த கத்தோலிக்கக் குருவானவரான கல்தேரா என்பவரும் அடங்கியிருந்தார். ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர், கத்தோலிக்கப் பாதிரிமார் அனைவரும் யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்றபோது, உடல்நலமின்மை காரணமாக இவர் செல்ல முடியவில்லை. இவருக்குச் சதியுடன் நேரடியான தொடர்பு இல்லாவிட்டாலும் இது குறித்து அவர் முன்னரே அறிந்திருந்தார் என்றும், அதை அறிவிக்கத் தவறினார் என்பதே இவர்மீதான குற்றம் என்றும் தெரியவருகின்றது. தலைவர்களாகக் கருதப்பட்ட மூவருக்கும் குரூரமான முறையில் தண்டனை வழங்கப்பட்டது. அவர்களை சக்கரத்தில் அல்லது சிலுவையில் பொருத்திக் கழுத்திலும், மார்பிலும் கோடரியால் வெட்டிக் கொன்றனர். பின்னர் இவர்களது தலைகளை ஈட்டியில் குத்தி பொதுச் சந்தையில் பார்வைக்கு வைத்தனர். கத்தோலிக்கப் பாதிரியாரின் தலையை வெட்டி அவரைக் கொன்றனர். ஏனைய பதினொருவரும், தூக்கில் இடப்பட்டனர். இந்தக் கொடுமையான தண்டனையைக் காட்டும் படம் ஒன்றை பல்தேயஸ் பாதிரியார் தனது நூலில் தந்துள்ளார்.

மேற்படி நிகழ்வுகளே யாழ்ப்பாணத்தில் பெரிதும் அறியப்பட்ட பூதத்தம்பி கதையின் அடிப்படையாகும். சதிக் குழுவின் தலைவர்களில் ஒருவராகக் குறிப்பிடப்பட்ட டொன் லூயிஸ் என்பவனே பூதத்தம்பி. இவன், சதித் திட்டத்தை முறியடித்தவனாகச் சொல்லப்படும் அந்திராடேக்கு இணையான பதவி வகித்தவனும், முதலியாரும் ஆவான். ஒருமுறை பூதத்தம்பி, அந்திராடோவைத் தனது வீட்டுக்கு அழைத்து விருந்து கொடுத்தபோது பூதத்தம்பியின் அழகான மனைவியைக் கண்ட அந்திராடோ அவள்மீது ஆசை கொண்டானாம். இதன் காரணமாக ஏற்பட்ட பகைமையின் விளைவாக, பொய் ஆவணம் ஒன்றைத் தயாரித்த அந்திராடோ, அதன் மூலம் பூதத்தம்பியைச் சதித்திட்டக் குற்றச்சாட்டில் சிக்க வைத்து அவனது மரணத்துக்குக் காரணமானான் என்பதே பூதத்தம்பி கதையின் சுருக்கம். பூதத்தம்பி கதை முதன் முதலாக யாழ்ப்பாண வைபவ மாலையில் காணப்படுகின்றது. யாழ்ப்பாண வைபவமாலை, மேற்படி நிகழ்வு நடந்து ஏறத்தாழ 130 ஆண்டுகளுக்குப் பின் எழுதப்பட்டது. எனவே, வைபவமாலை ஆசிரியர் செவிவழிக் கதைகளை ஆதாரமாகக் கொண்டே இக்கதையை எழுதியிருக்கவேண்டும் என யாழ்ப்பாணச் சரித்திரம் எழுதிய ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை போன்ற சிலர் கருதுகின்றனர்.

20 ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் பூதத்தம்பி கதை தொடர்பில், சர்ச்சைகள் நிலவியதாகத் தெரிகின்றது. யாழ்ப்பாண வரலாற்றாளர்களும், வரலாற்று ஆர்வலர்களும், இவ்விடயத்தில் இரண்டு குழுக்களாகப் பிரிந்திருந்ததாகத் தெரிகின்றது. யாழ்ப்பாண வைபவ கௌமுதி ஆசிரியர் க. வேலுப்பிள்ளை, யாழ்ப்பாணம் தொடர்பான குறிப்புக்கள் (Notes on Jaffna) என்னும் நூலைத் தொகுத்த யோன் எச். மார்ட்டின் போன்றவர்கள் பூதத்தம்பி கதை உண்மைக்குப் புறம்பானது என்னும் கருத்தைக் கொண்டிருந்தனர். இது தொடர்பான சர்ச்சைகளில் ஈடுபட்ட பலர், மதம், சாதி, இனம் என்பவை தொடர்பில் தத்தமது நிலைப்பாடுகளுக்கு ஏற்ப, பூதத்தம்பியையோ, அல்லது அந்திராடோவையோ நியாயப்படுத்த முயற்சித்தனர் என்பது தெளிவு. பூதத்தம்பி கதை, நீண்ட காலமாகவே யாழ்ப்பாணத்தில் நாடகமாக நடிக்கப்பட்டு வருகின்றது. கதையாகவும், நாடகமாகவும், இசை நாடகமாகவும் நூல்களாகவும் வெளிவந்துள்ளது. எனவே, சுவாரசியத்துக்காகக் கற்பனைகள் கலந்திருக்கக்கூடும் என்பதோ, அவ்வக்காலச் சமூக, அரசியல்




நிலைமைகளுக்கு ஏற்ப அதில் பல்வேறு விடயங்கள் சேர்க்கப்பட்டிருக்கக்கூடும் என்பதோ உண்மையாக இருக்கலாம். பூதத்தம்பி கதை உண்மையல்ல என வாதிடுவோர் பல்தேயஸ் பாதிரியார் குறித்த நிகழ்வுகள் நடைபெற்ற காலத்தில் அங்கு இருந்தவர் என்பதால் ஆவரது கூற்று உண்மையானது என்னும் நிலைப்பாட்டில் இருந்ததும் தெளிவாகின்றது. ஆனாலும், அந்திராடோவின் சந்தேகத்தைத் தவிர, சதிமுயற்சி தொடர்பான வேறு சான்றுகளையோ, முறையான விசாரணைகள் நடைபெற்றது தொடர்பான தகவல்களையோ பல்தேயஸ் பாதிரியார் தரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுவடுகள் தொடரும்...

தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது. அரசியல் கட்சிகள் தீவிர பரப்புரையில் இறங்கியுள்ளன. மக்கள் கடந்த காலங்களில் நடந்தவைகளை மறந்து விடுவார்கள் என்று நினைப்பில் கட்சிகள் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றன.தமிழினம் அறவழியிலும் , ஆயுத வழியிலும் போராடியதால் தான் தமிழ் மக்களின் பிரச்சினை இன்று உலக அரங்கிற்குச் சென்றுள்ளது என்ற உண்மையை ஒரு பகுதியினர் மறைக்கின்றனர். அரசியல் களத்தில் உள்ள நமது அரசியல்வாதிகள், ஒரு புறம் போராளிகளின் புகழைப் பாடிக்கொண்டும், மறுபுறம் அவர்கள் சர்வாதிகாரிகள், கொள்கைகளில் இருந்து இறங்கி வராதவர்கள் விட்டுக் கொடுக்காதவர்கள், பயங்கரவாதிகள், சிறுவர்களைப் படையில் சேர்த்தவர்கள், இனச் சுத்திகரிப்புச் செய்தவர்கள் என்றும் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். இந்நிலையில் தான் பஷீர் காக்க அண்ணா ஒரு செய்தியாளர் சந்திப்பை 2020.07.03 அன்று வெள்ளிக்கிழமை கூட்டியிருந்தார். அந்தச் சந்திப்பில் கூறிய ஆழமான கருத்துகளைத் தமிழ் மக்களுக்குக் கொண்டு செல்ல வேண்டிய சில ஊடகங்கள் தமிழ்த் த்சியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகிறார். இவர் கூட்டமைப்பின் எந்தக் கட்சி உறுப்பினர் என்பது எவருக்கும் தெரியாது. அவர் எங்கிருந்த வந்தார் அல்லது புகுத்தப்பட்டார் என்பதும் தெரியாமலே நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார். ஆனால் இவரின் பெயர் தேர்தலுக்கு முன்னர் ஐக்கியதேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் இருந்தது என்று கூறுகிறார்கள். அதன் பின்னரே தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரும் , உப தலைவருமான பேராசிரியர் சிற்றம்பலத்தின் பெயரைத் தேசியப் பட்டியலில் இருந்து நீக்கிவிட்டு இவரை ரணிலின் வேண்டுதலை ஏற்றுச் சேர்த்ததாகக் கூறினர். சுமந்திரனின் அரசியல் நடவடிக்கைகள் அவற்றை உறுதிப்படுத்துகின்றன. எனவே தான் சுமந்திரனின் முக்கிய ஐந்து நடவடிக்கைகள் தமிழ் மக்களின் அடிப்படைகளுக்கு எதிராக அமைந்துள்ளன என்று சுட்டிக்காட்டியுள்ளார் காக்கா அண்ணர். கிளிநொச்சியில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த நீதிமன்றக் கட்டிடத் தொகுதி தற்போது கைமாறியதும் அங்கு நடை பெற்ற வழக்கொன்றில் டின்னரில் கலந்து கொள்ளும் நான் உங்களது விடுதலையைச் சாத்தியமாக்குவேன் எனவும் புழுகினார். அரசியல் கைதிகளின் குடும்பத்தினரின் வறுமையைத் தேர்தல் செலவுக்குப் பணமில்லாத விடயத்துடன் ஒப்பிட்டவர் இவர். உண்மையில் அரசியல் கைதிகளின் விடயத்தில் தலைகீழாகவே செயற்பட்டார். "கட்டாய ஆட்சேர்ப்பு விடயத்தில் உண்மை வெளிக்கொணரப்படுவது முக்கியம், அப்படியென்றால் தான் உண்மையான நல்லிணக்கம் வரும்" என்று நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார். இதேவேளை உண்மையைக் குழி தோண்டிப்புதைக்கவே ஜெனிவாவில் முயன்றார்.யுத்தத்தில் நிகழ்ந்தது "இனப்படுகொலையே" என வடக்கு மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றிய தைத் தொடர்ந்து ஏற்பட்ட சதி முயற்சிகளில்- அரசியல் குழப்பங்களின் கதாநாயகன் இவரே. இது யு. எஸ் ஹோட்டலில் நடந்த விடயங்கள் தொடர்பாக விந்தன் கனகரத்தினம் வெளியிட்ட தகவல்கள் மூலம் தெரியவருகிறது. உண்மையில் இவர் எவருடைய தரப்பாகச் உயிரைக்கொடுத்து நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தின் - தேசியத்தின் பெயரால் கிடைத்த வாக்குகளால் , தேசியப் பட்டியலில் உறுப்பினர் பதவி கிடைத்தது என்பதை மறந்து நன்றி கெட்டவராகப் பேசுகிறார். நேர்மையானவராக இருந்தால் இப்போது சொல்லும் கருத்துகளை இவர் விசுவாசிக்கும் ரணிலின் கட்சி சார்பில் தெரிவித்து அரசியலில் இறங்கியிருக்கலாமே! இவ்வாறு கூறிய காக்கா அண்ணர் இவரைத் தோற்கடிக்கச் சாத்தியமான சகலதையும் செய்ய வேண்டும்.மாவீரர் அறிவிழியின் அப்பாவாக தான் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன் என்று கூறியுள்ளார். விடுதலைப் புலிகளின் முதல் மாவீரர் சங்கர் உட்பட இந்தப் போராட்டத்தில் ஆகுதியாகிய வடக்கு-கிழக்கு மற்றும் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாவீரர்கள் , தளபதிகளின் உணர்வுகளைப் புரிந்தவன் என்ற வகையில் மாவீரருக்குச் செய்யும் கௌரவமாக சுமந்திரனின் எதிர்பார்ப்பைத் தோற்கடிக்கும் பணியில்

பகுதி - 5

# நாடாளுமன்றத் தேர்தலும் தமிழினமும்

## சுமந்திரனுக்கு வாக்களிக்கக் கூடாது..! பஷீர் காக்கா அண்ணர்

- மாசிலான் -




அவரது கூற்றில் பாதியளவுக்கு மேல் மறைத்து விட்டே வெளியிட்டுள்ளன. இது ஒரு கவலை தரும் செய்தியாகும். ஊடக தர்மம் என்று நியாயம் பேசும் செய்தி ஏடுகள் ஏன் அவரது கூற்றை முழுமையாகப் போடாமல் மறைத்தன என்பதற்கான காரணங்கள் என்னவென்று தெரியவில்லை. நேற்று அரசியலுக்கு வந்து "தாம் தமிழ் மக்களுக்காகப் பாடுபடுகிறோம்" என்று கூறி அரசியல் செய்வோருக்குக் கொடுக்கும் பங்கில் சிறிதளவாவது கடந்த நான்கு, ஐந்து தசாப்தங்களாகத் தம்மை ஒறுத்துத் தமிழ் மக்களுக்காக உழைத்துத் தனது மகனையும் மாவீரராக்கியவரின் ஊடகச் சந்திப்பில் கூறியனவற்றை முழுமையாகப் போடாததன் பின்னணியில் வேறு சக்திகள் இருக்கின்றனவா என்ற ஐயமும் ஏற்படுகிறது. மிகவும் மூத்த போராளியாக இருந்து, புனர்வாழ்வு பெற்று வந்து, அமைதியாக வாழ்ந்து வருபவர்தான் பஷீர் காக்கா என்றழைக்கப்படும் மு. மனோகர். அவரது இயக்க வரலாற்றுப் பங்களிப்பு எத்தகையது என்பது இங்கு நோக்கப்படவில்லை. ஆனால் அவர் கூறிய ஒவ்வொரு சொல்லும் இந்த நாட்டில் தமிழினம் எவ்வாறு மிடுக்குடன் இருந்தது. இன்று அதனை எவ்வாறு தமிழ்த் தலைமைகள் சீரழித்துக் கொண்டிருக்கின்றன என்பதன் உள்ளக் குமுறலாகவே அவரது ஊடகச் சந்திப்பைப் பார்க்க வேண்டும்.

அவர் கவனமாகவும், பக்குவமாகவும் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் நடந்தவற்றைக் கூறுகிறார் . மூன்று கட்சிகள் தமிழ்த் தேசியம் என்று கூறிவருகின்றன என்றதைச் சுட்டிக்காட்டியவர், எந்தக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்று கூறாது விட்டுவிட்டார். ஆனால் யாருக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்கக் கூடாது என்று கூறியவர் , அதற்கான வலுவான ஐந்து காரணங்களையும் கூறியிருக்கிறார். அவர் வாக்களிக்கக் கூடாது என்று கூறுவதை ஒரு மாவீரரின் பெற்றோருக்கான உள்ளக் குமுறலின் வெளிப்பாடாகவே கருதலாம். முன்னரும் மாவீரர் நாள்களைத் தங்களின் அரசியல் நலனுக்காகப் பயன்படுத்தக் கட்சிகள் முயன்று குழப்பம் செய்தபோது அவர் மாவீரர்களை மதிக்க வேண்டும், அவர்களின் ஈகத்தை தாழ்த்தக் கூடாது என்று மன நெகிழ்ச்சியுடன் கேட்டிருந்ததையும் கவனித்தே ஆக வேண்டும். அதே மனக் குமுறல்தான் இன்றும் மக்கள் யாருக்கு வாக்களிக்கக் கூடாதென்ற வேண்டுகோளிலும் காணப்படுகிறது. அவர் தனது ஊடகவியலாளர் சந்திப்பில் சுமந்திரனின் அரசியல் நடவடிக்கைகளின் உண்மையான விம்பத்தை மக்கள் முன் கொண்டு வந்திருக்கிறார். 2009 வரை எங்கிருந்தார் என்று தெரியாத சுமந்திரன் திடீரெனத் போராளிகளைப் பயங்கரவாதிகள் எனக் குறிப்பிட்டவர் சுமந்திரன்.ஒரு தரப்பினருக்காக வாதிட்ட இவர் மறு தரப்பினரை இவர்கள் பயங்கரவாதிகளுடன் தொடர்புபட்டவர்கள் எனக் குறிப்பிட்டார். போரளிகளைப் பற்றிய இத்தகைய கருத்துக் கொண்ட ஒருவரைத் தமது வாழ்வையே அர்ப்பணித்த அன்ரன் பாலசிங்கம் அண்ணாவுடன் ஒப்பிடுவது சகிக்க முடியாததாகும். இதனைப் பாலா அண்ணாவை அவமதிக்கும் முயற்சியாகவே கருத வேண்டியுள்ளது. இனப்படுகொலை பற்றிய தீர்மானம் குறித்து ஏனையோர் குறிப்பிடும் போது உள்ளூர் விசாரணையே போதும் என விடாப்பிடியாக நின்றவர் சுமந்திரன். இவரை மீறிக் காரியங்கள் நடந்தபோது அரசுக்குக் கால அவகாசம் வழங்கும் முயற்சிக்காகக் கடுமையாக உழைத்தவர்.இனப்படுகொலை என்ற தீர்மானத்தைக் கொண்டு வருவதற்குப் போதியசாட்சியங்கள் இல்லை எனக் கருத்துரைத்தவர்.இவர்.சாட்சியங்களை,ஆதாரங்களைத் தேடும் பணி மக்களின வாக்குகளைப்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே உரியது. அந்தக் கடமையைச் செய்யத் தவறியதுடன் , அரசை எப்படிக் காப்பாற்றுவது என்பது பற்றிய சிந்தனையுடன் செயலாற்றியவர் சுமந்திரன். இனப்படுகொலை விவகாரத்தை நீர்த்துப் போகச் செய்வதில் இவரது பங்கே கூடுதலானது. ஜெனீவாவில், "அரசுக்கு எதிராகச் செயற்பட மாட்டோம்," என இவர் கூறும் காணொளி சமூக வலைத் தளங்களில் உலா வருகிறது.

மூஅரசியல் கைதிகள் விவகாரத்தை இவரிடமே ஒப்படைத்தது கூட்டமைப்பு. இவரது முயற்சியால் எந்தவொரு முன்னாள் போராளியாவது விடுதலை செய்யப்பட்டாரா எனத் தெரியவில்லை.மாறாகத் தான் அரசுத் தரப்புடன் கிரிக்கெட் விளையாடியமை தனது இராசதந்திரமே என்றும், கோத்தபாயாவுடன் செயற்படுகிறார் என்பதை விளக்க இந்த உதாரணங்கள் போதும்.

மூஉண்மையில் தமிழரின் ஆயுதப் போராட்டத்தை மட்டுமே ஏற்காத இவர்.இன்றுவரை தாம் ஆயுதம் ஏந்தியது தவறு என்று கூறாத ஜேவிபி யினரின் வழிமுறைகளை ஏற்கிறார்.தமிழரின் அடிநாதமான வடக்குக் கிழக்கைத் தகர்த்தவர்கள் ,சுனாமிக் கட்டமைப்பை நொருக்கியவர்கள் என்ற வரலாறு ஜேவிபிக்கு இருக்கிறது. இக்கட்சியின் தலைவர் ரோஹண விஜயவீராவின் கொள்கைகளில் ஒன்று மலையக மக்கள் இந்தியாவின் கைக்கூலிகள் என்பது. இந்த வரலாற்றை எல்லாம் தெரிந்து கொண்டே அவர்களுடன் சிவப்புச் சட்டை அணிந்து "மே" தின நிகழ்வில் கலந்து கொண்டவர் இவர். மந்திரிப் பதவியைத் தவிர எந்த அரசியல் முன்னேற்றத்தையும் இவரால் காண முடியாது என்ற யதார்த்தத்தை நன்கு தெரிந்து கொண்டே இவர் மக்களை ஏமாற்ற முயல்கிறார். வடக்குக் கிழக்கு இணைப்பு, சுனாமிக் கட்டமைப்பு விவகாரங்களில் தமிழர் தரப்புக்காக நீதிமன்றில் வாதிட முன்வராத இவர் ஜேவிபி யின் நிலைப்பாட்டுடனேயே உள்ளார் எனக் கருத வேண்டியுள்ளது.

மூ.ஆயுதப் போராட்டத்தின் வடிவ மாற்றத்தை தீர்க்கதரிசனமாக தலைவர் அறிந்திருந்தார் என்பது களத்தில் நின்ற போராளிகளுக்கும் போராட்ட மண்ணில் நின்ற பொது மக்களுக்கும் நன்கு தெரியும். தனது துரோகத்தையும், தவறுகளையும் சுட்டிக்காட்டுவோரை ஆயுதப் போராட்டம் தொடர வேண்டும் என விரும்புவர்களாகச் சித்திரிக்க முயல்கிறார் சுமந்திரன். அத்துடன் "அவர்கள்மீது ஒரு கண் வைத்திருங்கள்." என மறைமுகமாகச் சைகை காட்டுகிறார் படைத் தரப்புக்கு. உணர்வுபூர்வமாக கைகோர்க்கும்படியாக அன்புடனும் , உரிமையுடனும் வேண்டுகிறேன் என்று கூறியுள்ளார். எமது மாவீரர்கள் சுமந்திரன் கிளிநொச்சி நீதி மன்றில் குறிப்பிட்டது போன்று பயங்கரவாதிகள் அல்லர் என்பதைக் கூட்டாக அவருக்கு உணர்த்த வேண்டும். இது எமது வரலாற்றுக் கடமை.துயிலும் இல்லத்தில் சுடர் ஏற்றுவதற்கு ஒப்பானது என்று கூறி முடித்துள்ளார் காக்கா அண்ணர்

அவர் ஒரு விடயத்தைக் கூறியுள்ளதை இங்கு கவனித்தே ஆக வேண்டும் .எமது தேசியத் தலைவரால் அடையாளப்படுத்தப் பட்ட கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு . சரியோ பிழையோ அதற்கு வாக்களிப்பது என்பது தமது கடமை எனக் கணிசமானோர் கருதுகின்றனர் எனத் தெரிகிறது. இவ்வாறானவர் களுக்காகவே அவர் சுமந்திரனுக்கு வாக்களிக்காதீர்கள் என்ற வேண்டுகோளை விடுத்துள்ளார். இது மக்களின் மன நிலையைப் பற்றிய கூற்றாகும். "மக்கள் தலைவர்தானே கூட்டமைப்பை உருவாக்கினார். ஆகவே அதற்கு வாக்களிக்க வேண்டும்" என்ற எண்ணத்தில் அல்லது மனோ நிலையில் பலர் இருக்கிறார்கள் என்பதைத் தான் புரிந்து கொண்டு "தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பது என்று நீங்கள் முடிவெடுத்தால் சுமந்திரனுக்கு வாக்களிக்காது வேறு மூன்று பேருக்கு வாக்களியுங்கள்" என்று சொல்வது என்பதை சுமந்திரனின் தேசியத்துக்கு எதிரான நிலைப்பாட்டிற்கான வாக்களிப்பாகக் கருத வேண்டும்

இனப்படுகொலைகளுக்கான சாட்சியங்களையும் , ஆதாரங்களையும் திரட்டும் பணி மக்களைக்களைப் பெற்ற தமிழ்க் கூட்டமைப்புக்கே உரியது என்றால், அந்தக் கடமையைச் செய்யத் தவறியது சுமந்திரனின் தவறா? அல்லது அதைக் கண்டுகொள்ளாத கூட்டமைப்பின் மேல் தவறா? இதை வைத்துக்கொண்டு அவர் கூட்டமைப்புக்கு வாக்களிக்காதீர்கள் என்று மக்களுக்குக் கூறியிருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. அவர் தனது நடுவு நிலைமையை மீறாமல், யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று கூறாமல் , சுமந்திரன் மீது விரலைக் காட்டி "இவருக்கு வாக்களிக்காதீர்கள்" என்று கூறியுள்ளார். சுமந்திரனை நம்பிக் கூட்டமைப்பு ஒப்படைத்ததாகக் கூறும் அத்தனை விடயங்களையும் முற்றிலும் தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே அவர் கொண்டு சென்றுள்ளார் என்பதே உண்மையாகும். எனவே சுமந்திரனின் செயல்களுக்குக் கூட்டமைப்புத்தான் பொறுப்புக் கூறவேண்டும். வாக்களிக்க முன் இதனை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

# ஒன்றரைக் கட்சிகளின் கூட்டமைப்பு


- குருபார்வை -







அண்மைக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் தொடர்பான கருத்துப் பரிமாறல்கள் பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் அவ்வமைப்புத் தோற்றம் பெறத் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவுப் பின்புலம் தான் மூல காரணம் என்பதில் எவரும் முரண்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் என்பது அது தோற்றம் பெற்ற கால கட்டத்தின் வரலாற்றுத் தேவையாக இருந்தது என்பதை அரசியல் அறிந்தோர் அறிவர்.
ஸ்ரீ லங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நோர்வே அனுசரணையுடனான சர்வதேச மட்டத்திலான பேச்சு வார்த்தைகள் ஒரு முக்கியமான கட்டத்தை எட்டியிருந்த சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் இயக்கத்தை அங்கீகரித்து அடையாளப்படுத்த கூட்டமைப்பின் உருவாக்கம் தவிர்க்க முடியாத தேவையாகவும் இருந்தது.
அரசியல் தீர்வுக்காய் அஹிம்சை வழியில் - பேச்சுவார்த்தை மூலம் நகர்வுகளை மேற்கொண்டு பின்னடைவுகளையே சந்தித்துச் செயலற்றுப் போயிருந்த தமிழ் அரசியற்கட்சிகளும், ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க முயன்ற பல்வேறு அமைப்புகளும் நோர்வே அனுசரணையுடனை பேச்சு வார்த்தையின் போது விடுதலைப்புலிகளுக்கு தம் ஆதரவுப் பின் புலத்தை வழங்க வேண்டிய காலத்தேவையை உணர்ந்த போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் தளம் கொண்டது.
விரும்பியோ விரும்பாமலோ தமிழ் தேசியம் குறித்துப் பேசிக் கொண்டிருந்த அனைத்துத் தரப்பினருடனும் தொடர்புகளை மேற்கொண்டு நடாத்திய பேச்சுவார்த்தைகளின் பெறுபேறே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கமாகும்.
அன்று கூட்டமைப்பு உருவாகதிருந்திருப்பின் பின்னர் அதில் அங்கம் வகித்த கட்சிகளும், அமைப்புகளும் தமிழருக்கான அரசியல் தளத்தில் இன்றுவரையிலான தமது இருப்பின் அடையாளத்தை இன்றுள்ள அளவுக்குத் தக்க வைத்திருக்க முடியாது என்பதும் உண்மையேயாகும்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் கைகோர்த்துக் கொண்ட இலங்கைத் தமிழரசுக்கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம் போன்ற முக்கிய அமைப்புகள் ஒன்றிணைந்து பேச்சுவார்த்தைக் காலத்தில் அதாவது 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் விடுதலைப்புலிகளின் ஆதரவுடன் தமிழரசுக் கட்சியின் "வீடு" சின்னத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் போட்டியிட்டு வடக்கிலும், கிழக்கிலும் பெரு வெற்றி பெற்றது வரலாறு.
இந்தக் கூட்டமைப்பில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து கொள்ளவில்லை அல்லது இணைத்துக் கொள்ளப்படவில்லை. அதற்கான காரணிகள் வேறு.
ஆக விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பேராதரவு என்ற அனுசரணையுடனும், தலைவர் பிரபாகரனின் அங்கீகாரத்துடனும் உருவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இன்றுவரையிலான முகவரி என்பது "மேஃபா தமிழீழ விடுதலைப்புலிகள்" என்பதுதான் என்றதை தமிழ் மக்கள் அனைவரும் அறிவர்.
இன்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் ஐயா, அவரால் வன்முறையாளர்கள் என்றும், இனச் சுத்திகரிப்பாளர்கள் என்றும் வர்ணிக்கப்பட்ட விடுதலைப்புலிகளால் அமைக்கப்பட்ட கூட்டமைப்பு "வீட்டின்" குடியிருப்பாளர்களில் ஒருவராக இருந்து அரசியல் வாசம் செய்கிறார்.
இது அரசியலில் அவரது இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள அவசியமானதும், தவிர்க்கவே முடியாததுமான தேவையாகும்.
கடந்த பாராளுமன்றத் தேர்தல் காலம் வரை ஓரளவுக்குப் பலமாக இருந்த கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் மிகப் பலவீனமானதொரு கட்டமைப்பைக் கொண்டதாகிவிட்டது.
ஆரம்பத்தில் நான்கு பலமான அமைப்புகளின் கூட்டு அமையமாக விளங்கிய கூட்டமைப்பு இன்று ஒன்றரை கட்சிகளின் கூட்டமைப்பாக மாறிவிட்டது. கூட்டமைப்பில் இருந்து



தமிழ்க்காங்கிரஸ் முதலில் விலகி தமிழ் தேசிய மக்கள் முன்னணியாகிவிட்டது.
ஈ.பி.ஆர்.எல்.எவ். என்ற கட்சி விக்கினேஸ்வரன் ஐயாவின் அணியுடன் சங்கமமாகி விட்டது.
ரெலோ என்ற தமிழீழ விடுதலை இயக்கம் இரண்டாக உடைந்து சிறிகாந்தா அணியினர் விக்கி ஐயாவுடன் ஐக்கியமாகிவிட்டனர். ஆக ஆரம்பத்தில் இருந்த கூட்டமைப்பு குழுவில் எஞ்சியிருப்பது தமிழரசுக் கட்சியும் ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன் அணியினரும் மட்டுமே. அதாவது, "அரை"ரெலோ அணியினர். கூட்டமைப்பு என்ற இலக்கு நோக்கிய செயற்பாடுகளின் பின்னால் தன்னை எதிர்த்தவர்கள், விமர்சித்தவர்கள், உள்ளக - அயலக வல்லாதிக்க சக்திகளுடன் சேர்ந்த தமது சுயநல அரசியலுக்காய்த் தன்னை அழிக்க முயன்றவர்கள் என அனைவரையும் அணிசேர வைத்தவர் தலைவர். அது ஒரு சாதனை தான்! சந்தேகமே இல்லை.
ஆனால் அவர் அத்தனை கட்சிகளையும் கலைத்துவிட்டு அவர்களை ஒரு கூட்டில் இணைய வைத்திருக்கலாம். அல்லது அப்போது கட்சியாகப் பதிவு செய்யப்பட்ட நிலையில் இருந்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியில் அனைவரையும் இணைத்து விட்டிருக்கலாம்...
ஒரு வேளை அப்படி நடந்திருந்தால் கூட்டமைப்பு என்ற பெயர் இல்லாது போயிருக்கலாம். ஆனாலும் போருக்கு பின்னரான சூழ்நிலையில் எத்தனையோ குழப்பங்களும் உடைவுகளும், பிரிவுகளும் இப்போது உள்ளது போல் ஏற்பட்டே இருந்திருக்கலாம் என்பது அவரது ஆதங்கமாக இருந்திருக்கலாம்..?
எதுவானாலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற பெயர் அதன் அர்த்தத்தை இழந்து விட்டது. என்பதே உண்மை. அதாவது தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்கப் போராடும் கட்சியாக இல்லாது, ஆட்சியாளருக்கு முண்டு கொடுக்கவும், அயலக தேசத்தின் அரசியல் அபிலாஷைகளை வென்று கொடுக்கவும் சுயம் இழந்து இயங்கும் ஒரு "அரசியல் வியாபார" மையமாகவே ஆகிவிட்டது.
இதனை எழுதும் போது, தேர்தலின் பின் உருவாகப் போகும் புதிய அரசுடன் எவ்வாறு பேரம் பேசுவது, என்பது குறித்து கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் "அமைச்சுப் பதவிக்கு ஆசைப்படுகிறார் சுமந்திரன்" என்ற தலைப்பில் கூட்டமைப்பின் பேராதரவுப் பத்திரிகையொன்றில் வெளியாகியுள்ளது.
அதனடிப்படையில் வெறும் ஒறிஜினல் - ஒன்றரைக் கட்சிகளின் கூட்டமைப்பாக இயங்கும் அணி தேர்தலின் பின்னர் ஆட்சியில் அமரப்போகும் பேரினவாதக் கட்சியில் தன்னை இணைத்துக் கொள்ளும் காட்சி அரங்கேறவும் கூடும். அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிங்களத் தேசியக் கட்சி ஒன்றுடன் இணைந்து தமிழ்த் தேசியம் என்ற அடையாளத்தை கைவிடவும் நேரலாம்.

அப்போது , "அரசியலில் இது எல்லாம் சகஜம்" என்று கவுண்டமணி பாணியில் சொல்லிச் சிரிக்கலாம் அவ்வளவுதான்!



# திருக்கோணேஸ்வரம் எமதே! நல்லூரும் எமதே ! அனைத்தும் எமதே!

## எல்லாவல மேத்தானந்தா

- சிலம்பு -





சிங்கள மொழி, சிங்கள இனம் தோன்றுவதற்கு முன்பே இருந்த திருக்கோணேஸ்வரம் கோகர்ண விகாரையின் மேல் தான் கட்டப்பட்டது என்று கூறிய எல்லாவல மேத்தானந்தா தேரர், அடுத்த நாள் யாழ்ப்பாணத்தில் இருக்கும் நல்லூர் கோயிலும் சிங்கள இனத்திற்குரியது என்று கூறியிருக்கிறார். குஜராத்தில் இருந்து இங்கு விஜயன் வந்ததன் பின்னரே அவனது வழித்தோன்றல்கள் சிங்கள இனமாக உருவானார்கள் என்று தான் மகாவம்சம் கூறுகிறது . ஆனால் அவன் வருவதற்கு முன்னரே இலங்கைத் தீவில், ஐந்து சிவன் கோயில்கள் இருந்தமையை எவரும் மறுக்க முடியாத சான்றுகளோடு இன்றும் காணப்படுகின்றன.. அதில் ஒன்று தொண்டீச்சரம் என்பது தேவேந்திர முனை என்று கூறப்படும் இலங்கைத் தீவின் தென் முனையில் இருந்தது என்பதும், அது கடலுக்குள் அமிழ்ந்து போனது என்பதுவும் ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட் டுள்ளது. மிகுதி நான்கு சிவாலயங்களும், தமிழ் மக்கள் இலங்கைத் தீவு முழுமையும் பரவி இருந்தார்கள் என்பதற்குச் சான்றாக நிமிர்ந்து நிற்கின்றன.. கோணமாமலையில் திருக்கோணேஸ் வரமும், மன்னாரில் திருக்கேதீஸ்வரமும், சிலாபத்தில் முன்னேஸ்வரமும், காங்கேசன் துறையில் நகுலேஸ்வரமும் இன்றும் அதற்குச் சான்றாக உள்ளன.இந்நிலையில் தான் எல்லாவல மேத்தானந்த தேரர். கோகர்ண விகாரையிருந்த இடத்தில் தான் திருக்கோணேஸ்வரம் கட்டப்பட்டுள்ள தாகவும், அதற்கான தொல்லியல் சான்றுகள் உள்ளதாகவும் கதை அளந்துள்ளார். .தமிழ் மக்கள் அந்தக் கோயிலில் வழிபாடு செய்வதைத் தடை செய்யப்போவதில்லை என்றும், ஆனால் அங்குள்ள சொத்துகள் அனைத்தும் தொல்லியல் துறைக்கே சொந்தமானவை என்றும் புதிய கற்பிதங்களை உருவாக்க முயன்றுள்ளார்.

இவ்வாறு கூறிய மேத்தானந்தா தேரர் அடுத்த நாள் யாழ்ப்பாண நகருக்கு அருகில் இருக்கும் நல்லூர் கந்தசுவாமி கோயிலும் சிங்கள பௌத்தர்களுடையதே என்றும் கூறி, அங்கு தமிழ் மக்கள் வழிபடலாம் அதற்குத் தடை ஏதும் இல்லை என்றும் கூறியுள்ளார். ஏற்கனவே பல சைவக் கோயில்களின் இடங்கள் சொத்துகள் யாவும் சிங்கள புத்தர்களின் உடமை என்று கூறி வரும் நிலையில், நல்லூரையும் சொந்தம் கொண்டாட வருகிறார் மேத்தானந்தர். நல்லூர் கந்தசுவாமி கோயிலைக் கட்டிய புவனேகபாகு ஒரு சிங்களவர் என்றும் கோயில் திருவிழாத் தொடக்கத்தில் கட்டியம் கூறும்பொழுது புவனேகபாகு என்று கூறப்படுவதையும் வைத்து அவர் இவ்வாறு கூறியுள்ளார் என்பது தெரிகிறது.

யார் இந்தப் புவனேகபாகு ?

இலகிய சகாத்த மெண்ணூற் றெழுபதா மாண்ட தெல்லை அலர்பொலி மாலை மார்பனாம் புவனேகவாகு நலமிகும் யாழ்ப்பாணத்து நகரி கட்டுவித்து நல்லைக் குலவிய கந்த வேட்குக் கோயிலும் புரிவித்தானே" என்று கைலாய மாலையில் தனிச் செய்யுள் மூலம் நல்லூர்க் கந்தனின் கோயிலைக் கட்டியவன் புவனேகபாகு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை விடவும் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் எழுதிய "யாழ்ப்பாணச் சரித்திரம்" என்ற நூலிலும் புவனேகபாகுவே நல்லூர் கோயிலைக் கட்டியவன் என்று கூறப்பட்டுள்ளது. விசுவநாத சாஸ்திரியார் கையெழுத்துப் பிரதியிலிருந்து எடுத்துக்காட்டிய பின்வரும் செய்யுளால் புலப்படுவதாக நூலாசிரியர் கூறியுள்ளார்.

இலகிய சகாத்த மெண்ணூற் றெழுபத்து நான்கினலர்திரி சங்க போதி யாம் புவனேக வாகு நலமுறும் யாழ்ப்பாணத்து நகரி கட்டுவித்து குலவிய கந்தனார்க்குக் கோயிலொன்ற மைப்பித்தானே."

இவ்வரிகளைத் தான் வட மொழியில் புவநேகுபாகுதான் இக்கோயிலைக் கட்டியவன் என்று கட்டியத்தில் இன்றும் கூறுகின்றனர்.. இந்தப் புவனேகபாகு என்ற சிங்களப் பெயரை உடையவன் எவ்வாறு நல்லூருக்கு வந்தான் , கோயிலைக் கட்டினான் என்ற வரலாற்றின் உண்மைப் பக்கத்தை மறந்துவிட்டு அல்லது மறைத்துவிட்டு நல்லூர்க் கந்தனின் கோயிலைக் கட்டியவன் புவனேகபாகு என்னும் சிங்கள அரசனே என்று கூறிக்கொண்டு அதற்கு உரிமைக் கோருகிறார் எல்லாவல மேத்தானந்தா.

கோட்டே ஜெயவர்த்தனபுரவிலிருந்த ஆட்சி செய்த ஆறாம் பராக்கிரமபாகுவின் தத்துப் பிள்ளையே புவனேகுபாகு ஆவான்.. கோட்டே ஜெயவர்த்தனபுரவில் இருந்து ஆட்சி புரிந்ததால் பராக்கிரமபாகு ஒரு சிங்கள மன்னனா? என்று கேட்டால் அது தவறு என்பதும், அவன் ஒரு தமிழ் மன்னனே! என்பதும் தான் உண்மையான வரலாறாகும். அப் பராக்கிரமபாகுவிடம் அன்றைய சேர நாட்டிலிருந்து ஜகேரளா அல்லது மலையாளம்ஸ யானைப் பராமரிப்பிற்காகத் தமிழன் ஒருவன் வந்தான். அவ்வாறு யானைப் பராமரிப் பிற்காக வருபவர்களைப் "பணிக்கர்" என்று அழைப்பார்கள். அவ்வாறு வந்த பணிக்கன் மிகவும் திடகாத்திரமானவனாகவும், வாட்போர்த் திறத்தில் வல்லவனாகவும் இருந்தமையினால் மன்னன் தனது குலத்தில் ஒரு பெண்ணை அவனுக்கு மணம் முடித்து வைத்தார்..அவனுக்கு இரு பிள்ளைகள் பிறந்தனர்.அவர்களில் ஒருவனுக்குச் செண்பகப் பெருமாள் என்றும் இரண்டாமவனுக்கு ஜெயவீரன் என்றும் பெயர் வைத்தனர். இதில் செண்பகப் பெருமாளைச் "சப்புமால் குமாரைய" என்றும் ஜெயவீரனை "அம்புலகல குமாராய" என்றும் அழைத்தனர். இவர்களைத் தனது தத்துப் பிள்ளைகளாக மன்னன் வளர்த்து வந்தான். இதே நேரம் பராக்கிரமாகுவின் மகளான உலகுடையதேவி என்பவள் நன்னூர்த்துடையார் என்பவரை மணந்து ஜெயவீரன் என்ற ஆண்மகனைப் பெற்றெடுத்தார். நன்னூர்த்துடையார் என்பது நல்லூர்த்துணையார் என்பதாக இருக்கும் என்று கூறுகிறார்கள். அதாவது பாணந்துறையில் கோயில் அமைத்து நல்லூர் என்று பெயரிட்டு அழைத்தான் என்று கூறுவர். ஐந்து நல்லூர்கள் இலங்கையில் இருந்ததாகவும் யாழ்ப்பாண நல்லூர் பூநகரியில் இருக்கும் நல்லூர், மகியங்கனையில் உள்ள நல்லூர், குருநாகல். களுத்துறை, ஆகிய இடங்களிலும் நல்லூர் எனப்பெயர் கொண்ட நகரங்கள் இருக்கின்றமை இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும்.. சிங்களத்தில் அவை திரிபுபட்டு நல்லூர என்றும் நல்லூருவ என்றும் அழைக்கப்படுவதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். தனக்கு ஆண் வாரிசு இல்லாத நிலையில் தனது தத்துப் பிள்ளைகளிடம் ஆட்சி சென்றுவிடக்கூடாது, தனக்குப் பேரனான தனது உடன்பிறந்தவளின் பிள்ளையை ஆட்சியில் அமர்த்தும் நோக்கிலும் செண்பகப் பெருமாளை வன்னி இராச்சியத்தின் மீது படையெடுக்குமாறு பணித்தான் மன்னன். யாழ்ப்பாணத்தை ஆண்ட கனகசூரியன் மிகத் திறமையானவன், படை பலம் கொண்டவன். செண்பகப்பெருமாள் கனகசூரியனிடம் தோல்வியடைந்து இறந்து விடுவான் அல்லது சிறைபிடிக்கப்படுவான் என்றும், அதன் பின்னர் தனது பேரனை ஆட்சியில் சுலபமாக அமர்த்தலாம் என்பது தான் பராக்கிரமபாகுவின் திட்டமாகும். ஆனால் மிகவும் வல்லவனான செண்பகப்பெருமாள் போர்த்திறன் மிக்கவன், வாள்வீச்சிலும் திறமையானவன் . அவன் தனது படையை வன்னியை நோக்கி நகர்த்தித் தனது திறமையினால் அதையும் வென்று யாழ்ப்பாணத்தில் ஆட்சி நடத்திய கனகசூரியனையும் வென்றான், கனகசூரியன் தமிழ் நாட்டிற்குத் தப்பிச் சென்றுவிட்டான். இவ்வெற்றியுடன் கோட்டேக்குச் சென்ற புவனேகபாகு என்னும் செண்பகப்பெருமாளை மீண்டும் யாழ்ப்பாணத்துக்குச் சென்று யாழ்ப்பணத்தின் ஆட்சியை நடத்துமாறு பராக்கிரமபாகு மன்னன் கூறினான். புவனேகபாகு கோட்டேயில் தங்கினால் தனது பரம்பரைக்கு ஆட்சி கிடைக்காது போய்விடும், தத்துப்பிள்ளையா ஆட்சி செய்வது என்ற காரணத்தால் இவ்வாறு செய்தான். இந்தக் கபட நோக்கத்தை அறியாது யாழ்ப்பாணம் வந்த செண்பகப்பெருமாள் என்ற தமிழ் வீரன் முன்னைய அழிவடைந்த தலைநகரை விட்டுவிட்டு , 1450 ஆம் ஆண்டளவில் ஒரு புதிய நகரை நல்லூரில் நிறுவி "ஸ்ரீ சங்கபோதி புவனேகவாகு" என்ற பெயருடன் பதினேழு ஆண்டுகள் அரசு செய்தான். 1467 இல் ஆறாம் பராக்கிரமபாகு தனது பேரனுக்கு முடிசூட்டிவிட்டுச் சில நாள்களின் பின்னர் இறந்துவிட்டான்.இதனை அறிந்த செண்பகப்பெருமாள் கோட்டேக்குச் சென்று அரசனாக இருந்த சிறுவனைக் கொன்று ஆறாம் புவனேகுபாகு என்ற பெயருடன் ஆட்சி புரிந்தான் .இது தான் வரலாற்றின் சுருக்கம்..அதாவது ஆறாம் புவனேகபாகு என்று அழைத்தாலும் ,சப்புமல் குமரைய என்றழைத்தாலும் அவன் செண்பகப் பெருமாள் என்னும் சேர நாட்டுத் தமிழ் வீரனே ஆவான். கோட்டையும் ஆண்டவன் தமிழ்ச் செண்பகப் பெருமாள் தான் நலூரில் ஆட்சிபுரிந்தவனும் அதே தமிழன் தான். அவனே தான் நல்லூர்க் கோயிலைக் கட்டிய புவனேகபாகுவும் ஆவான். வரலாறு இவ்வாறு இருக்கும்பொழுது எல்லாவல மேத்தானந்த தேரர் நல்லூரும் தமதே, கோணேஸ்வரமும் தமதே என்று கூறுவது முற்றிலும் வேடிக்கையானதும் வரலாற்றுத் திரிபுபடுத்தலுமே ஆகும்.

இலங்கை என்பதே தமிழ்பெயர் .அதிலிருந்து தான் லங்கா வந்தது என்பது ஏற்கனவே பல கட்டுரைகளில் எழுதப்பட்டு விட்டது. இங்கே இதை விடுத்து இன்னொன்றையும் குறிப்பிட வேண்டியுள்ளது. இலங்கைச் சுற்றியுள்ள கடற்கரையோரப் பட்டினங்களையும் பார்ப்போமானால் . பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை,கொழும்புத் துறை, சிலாவத்துறை போன்ற துறைமுகங்களைக் காணமுடியும்.அவ்வாறே மாத்துறை / மாத்தறைஸ, களுத்துறை, பாணந்துறை என்பன யாவும் தமிழ் துறைமுகங்களே ஆகும்.இவ்வாறு இருக்கும்பொழுது பொருந்தாத கூற்றுகளின் மூலம் தமிழ் மக்களின் கோயில்களையும், வாழ்விடங் களையும் எல்லாவல மேத்தானந்த தேரர் அவை தமது என்று கூறிவருகிறார்.. மகாயான புத்தம் கூடத் தமிழ் மக்களினால் பின்பற்றப்பட்ட மதமாகும். தமிழர்கள் பல்லாண்டுகளாக அனுராதபுரத் தில் இருந்து ஆட்சி செய்துள்ளார்கள். அப்பொழுது கட்டப்பட்ட அபயகிரி விகாரம் மகாயான பௌத்தத்தின் அடையாளமே. அதனாற்றான் அது கண்டுகொள்ளப்படாமல் இருந்தது. இவ்வாறு தமிழர்கள் மகாயான புத்தத்தை பின்பற்றித் திரும்பவும் சைவத்திற்குச் சென்று விட்டாலும் அவர்களது பௌத்த எச்சங்கள் தமிழ் மண்ணிலே இருப்பது விந்தை யல்லவே. இதைத்தான் கந்தரோடையில் ஆய்வு செய்த வெளி நாட்டவரான திருமதி பார்க்கர் கூறியுள்ளார். கந்தரோடையில் இருப்பவை தமிழ் பௌத்தத்தின் சான்றுகளே என்று. இவற்றை எல்லாம் கொண்டு சென்று ஒழித்து விட்டுப் புத்த சான்றுகள் இருந்தால் அவை சிங்கள புத்தத்தின் அடையாளங்கள் என்று கூறி மக்களையும் ஏமாற்றி வரலாற்றையும் மாற்றி சிங்கள மக்களை இனவிரோதச் சிந்தனைக்குள் மேலும் தள்ளுவதே பௌத்த துறவிகளில் பலரும் செய்யும் தூண்டுதல்கலாகும். ஆட்சியாளர்களும் இதனை ஊக்குவிக்கவே செயலணிகளை நிறுவியுள்ளனர்.இது தான் இந்நாட்டின் இன்றைய நிலைமையாகும். இவ்வாறு தவறான வழிகாட்டல் மூலம் மக்களைத் தூண்டி விடுவது புத்தரின் போதனைகளுக்கு முற்றிலும் முரண்பட்ட எதிரான நிலைப்பாடாகும்.

அன்பும் கருணையும் கொண்ட புத்தரின் போதனைகள் எங்கே? துவேசமும் வெறுப்பும் கொண்ட இன்றைய இலங்கையின் புத்த மத போதனைகள் எங்கே.? என்று சுட்டிக்காட்டி உண்மையைக் கூற வேண்டிய தமிழ்ச் சான்றோரும், தொல்லியல் ஆய்வாளர்களும், வரலாற்று ஆய்வாளர்களும் அமைதியாக இருப்பது ஏன்?என்பது தான் புரியவில்லை.


கடந்த முப்பது ஆண்டுகளாகக் கூற முடியாமல் இருந்தவர்கள் இரண்டாயிரத்து ஒன்பதிற்குப் பின்னர் இலங்கைத் தீவு முழுமையும் பௌத்தத் நாமங்கள் கொண்ட நாடு. தமிழர்களின் வழ்பாட்டுத் தலங்கள் கூடத் தமது தொன்மங்களின் மேல் தான் கட்டப்பட்டுள்ளன.என்றும், ஆனால் தமிழ் மக்கள் வழிபாடு செய்வதற்குத் தடை செய்யப்போவதில்லை என்றும் கூறுகின்றனர்.ஆனால் இவ்வாறு கூறுவதனால் சிங்கள மக்கள் மனதில் எவ்வகையான எண்ணங்கள் உருவாகும்? அதன் எதிர்த் தாக்கம் என்னவாகும் ? தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் இடமில்லை முழுவதும் சிங்கள பௌத்தத்தின் உடைமையே என்று காட்டவே இவ்வாறெல்லாம் வரலாற்றை மாற்ற முயற்சிக்கிறார். ஆனால் வரலாறு உண்மையை நிலை நாட்டியே தீரும்.

# சொல்லால், செல்லாக் காசாய்ப்போனவர்கள்

## சம்பந்தன் + சுமந்திரன் + ஸ்ரீதரன்

-எஸ். தேவகி -

# தமிழ் சமூகத்தின் போலி நாணயங்கள்



ஜனாதிபதி கோத்தாபயவிலோ அல்லது சிங்களத் தேசியவாதிகளிலோ பிழைகள் ஏதும் சொல்வதற்கில்லை. அவர்கள் தமது பாதையில் மிகவும் தெளிவாக இருக்கிறார்கள். சிங்கள மக்களும் கோத்தாபயவே தமக்குச் சுபீட்சத்தைத் தரவல்லவர் என்ற நம்பிக்கையில் தமது வாக்குகளில் அதிகளவைக் கொடுத்து ஜனாதிபதியாகவும் அவரைத் தேர்ந்து கொண்டனர்.எனவே ஜனநாயகம் என்ற போர்வையில் அவர் தமது எண்ணங்களை நிவைவேற்றக் கூடிய அதிகாரம் அவர் கையில் உண்டு.எனவே நாட்டைப் பௌத்த - சிங்கள மயமாக்கும் நோக்கோடு அவரின் முன்னெடுப்புகளும், நகர்வுகளும் காணப்படுகின்றன. இதில் வியப்பதற்கு ஒன்றும் இல்லை. நாம் தான் எமது புத்தியினூடாகப் புதிய உத்திகளைக் வகுத்துக் கையாள வேண்டும். இப்படிப்பட்ட காலகட்டத்தில் தமிழ் தலைமை எனத் தன்னை இனங்காட்டிக் கொண்டு, "அரசுக்கு ஆதரவு தருகிறோம்" என்ற சரணாகதி அரசியலுக்குள் மூழ்கிக் கிடக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நோக்கம் என்ன? எதிர்கால அரசியல் திட்டம் என்ன? மறைபொருளாக வைத்திருக்கும் அவற்றைத் தெளிவுபடுத்தாமலே நாட்கள் நகருகின்றன. தேர்தலும் அண்மிக்கின்றது.மக்களும் வாக்களிக்கப் போகிறார்கள்.

யாருக்கு வாக்களிப்பது? தமிழ் மக்கள் பலரிடமிருந்து எழுகின்ற கேள்வி இது. சம கால நடவடிக்கைகளை உன்னித்து அவதானித்தால், முறையான வழிகாட்டியற்ற சமூகத்தின் போக்கை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம். "தடி எடுத்தவன் தண்டல் கரான்" என்ற வகையில் கட்சிகளின் போக்கும், புதிய கட்சிகளின் உதயமும், அவற்றில் அங்கம் வகித்து அவற்றை வழி நடத்துகின்ற அனுபவமற்றவர்களும், அவர்கள் பின்னாலுள்ள சமூக விரோகிகளின் அரசியல் பிரசன்னமும் என்று சமூக ஆரோக்கியமற்ற விடயங்களோடு தேர்தல் களம் காணப்படுகிறது. "மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் பட்சத்தில் ஆதரவு வழங்கலாம்" என்றவாறு சமிக்ஞைகளையும் காட்டிக் கொண்டு ஜனாதிபதியினால் அமைக்கப்பட்ட செயலணிக்கு எதிராக ஊடக அறிக்கைகளையும் விட்டுக்கொண்டிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளைத் தமிழ் சமூகம் மிகவும் உன்னிப்பாக அவதானிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் - என மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

ஆளுக்கு ஆள் மாறித் தூற்றுவதைத் தவிரப் பிரச்சாரங்களின் போது விசேடமான தமிழ் மக்களுக்கு அவசியமான ஒன்றையும் காணவில்லை. எந்த அரசியல் கட்சியும் , நாட்டில் இரண்டாவது பெரும்பான்மையாகக் காணப்படும் தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான கோத்தாபயவின் நடவடிக்கைகளை இராஜதந்திர ரீதியாக எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறோம் என்ற வியூக அறிக்கைளைப் பொதுமேடையில் சமர்ப்பித்ததாக இல்லை. தமது நடவடிக்கைகளையும், அரசியல் முன்னெடுப்பு களையும் கோடிட்டுக் காட்டாது வாக்குகளைக் கேட்பதில் எதுவித நியாயமிருப்பதாக எமக்குத் தெரியவில்லை. அவர்கள் அரசியல் விஞ்ஞாபனம் என்னவென்று முழுமையாக முதலில் சொல்ல விரும்பாவிட்டாலும் அதன் சாரம்சத்தையாவது அறிக்கையிட்ட பின்பே வாக்குச் சேகரிப்புக்குள் இறங்கியிருக்க வேண்டும் .ஆனால் அப்படி நடக்கவில்லை என்று மக்கள் விசனப்படுகின்றனர். அதே சமயம் அந்த அவசியத்தையும் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

"வாக்கைத் தாருங்கள் நாடாளுமன்றம் சென்று செய்து காட்டுகிறோம்," என்று சொல்பவர்களுக்கு வாக்களிப்பதைப் பெரும்பாலானாவர்கள் விரும்பவில்லை. அப்படிக் கேட்பதில் நியாமிருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில் கடந்த காலம் கற்றுத் தந்த பாடத்தில் இருந்து மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின்மீது அதிருப்தியாக இருக்கிறார்கள். கட்சி வெறிபிடித்துக் காலங்காலமாக ஒரு குறிப்பிட்ட சாராருக்கே வாக்களிக்கும் சம்பிரதாய மரபைக் கொண்டவர்களைத் தவிர, நடுநிலை வகிக்க வேண்டும் என விரும்பும் வாக்காளர்கள் இம்முறை நிதானமாக வாக்களிக்க வேண்டும். ஏறத்தாழ 35 வீதமான வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள் வாக்குச் சாவடிகளுக்கு வருவதேயில்லை. அவர்களும் சம காலத் தேவைகளை உணர்ந்து வாக்களிக்க வரவேண்டும். அவர்கள் வாக்களிக்காது தமது ஜனநாயகக் கடமையிலிருந்து விலகுவாரேயானால் அதன் பாதிப்பாகத் தரமற்ற வேட்பாளர் வெற்றியீட்டக் கூடிய வாய்ப்பும் உண்டு. எனவே அதன் முக்கியத்துவத்தை அறிந்தவர்களாக ஒவ்வொருவரும் வாக்கின் வலிமையைப் பிறருக்கு எடுத்துரைத்து தமிழ் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவது காலத்தின் கட்டாயமே. மிகவும் ஒரு இக்கட்டான சந்தியில் நின்று கொண்டு தமிழ் மக்கள் இந்தத் தேர்தலை எதிர்கொள்ளப் போகிறார்கள். எனவே பிழையானவர்களுக்கு வாக்களித்து அவர்களை நாடாளுமன்றம் அனுப்பிவிடக்கூடாது என்ற ஆதங்கம் பலர் மத்தியில் உண்டு.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் அரசுக்குப் பலம் சேர்க்கத் தமிழ் கூட்டமைப்பு ஆதரவு அவர்களுக்கு அவசியப்படுமாயின், அதனை அவர்கள் விருப்போடு வழங்க இருப்பதாத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அரசுக்குப் பல வழிகளிலும் கோடிட்டுக் காட்டி வருகின்றனர். அதற்கான சமிக்ஞைகளையும் அவ்வப் போது பல வழிகளாலும் அரசுக்குத் தெரிவித்தும் வருகின்றனர். அரசுக்கு பலம் சேர்க்க அதாவது மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைச் சேர்க்கத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்குமேயானால், அது சட்டத்தைத் திருத்தவும் , நாடாளுமன்ற அதிகாரத்தை அதாவது பிரதமருக்குரிய அதிகாரத்தைக் குறைத்து ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரத்தை அதிகரிக்கவும்தான் அவர்கள் பயன்படுத்துவார்கள் . பெரும்பான்மை இனத்தவரின் பிடிக்குள் வைத்து நாட்டை ஆளுவதற்கு அத்தகைய அதிகாரம் தேவைப்படுகிறது. அதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பை அவர்கள் "கறிவேப்பிலை" ஆகக் கூடக் கையாளலாம். இது கடைசியில் யானை தன் தலையில் தானே மண்ணை வாரி இறைத்த கதையாகிவிடும். எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கப் போகின்றவர்கள் இரண்டு விடயத்தில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

ஒன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப் பட்டது. எனவே அதற்குத்தான் வாக்களிக்க வேண்டும். அதுதான் மாவீரராகிப் போய்விட்ட அவர்களுக்குச் செய்யும் கைமாறு என்ற உணர்வை முதலில் களைந்தெறிந்துவிட்டு இத்தேர்தலை எதிர் கொள்ள வேண்டும். ஏனனெனில் தற்போது காணப்படும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கபட்டபோது இருந்த கூட்டமைப்பு அல்ல, இப்போதிருப்பது. 2009 விடுதலைப் புலிகள் மௌனிக்கப் பட்டபோது அதுவும் மரணித்துவிட்டது. அப்போது இருந்த கட்சிகளும் கூட்டமைப்பில் இல்லை. சித்தார்த்தன் உள்வாங்கப்பட்டு சுரேஸ் பிரேமச் சந்தினும், கஜேந்திர குமாரும் வெளியேற்றப்பட்டுவிட்டனர். இருக்கின்ற ரெலோ அமைப்பும் உடைந்துவிட்டது. அதன் பாதியே கூட்டமைப்பில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. அதற்கப்பால் தமிழீழ விடுதலைப் புலிகள் எதற்காகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினார்களோ? அந்த நிலையிலிருந்தும், கோட்பாடுகளிலிருந்தும் அவர்கள் விலகித் தன்னிச்சையான முடிவுகளோடு சுய லாப அரசியலுக்குள் பிரவேசித்துக் கொண்டு, அரசில் இணைவது பற்றியும், பேரம்பேசி மந்திரிப் பதவிகள் பெறுவது பற்றியும் பேசத் தொடங்கியிருக்கின்றனர். எனவே அவர்கள் தமிழினத்தின் முக்கிய அபிலாஷைகளை நிறைவேற்றப்போவது இல்லை என்பது தற்போது தெளிவாகிவிட்டது.

கடந்த ஐந்தாண்டுகளில் அவர்கள் செயற்பாடுகளும், அது தொடர்பான அனுபவங்களும் எமக்குக் கற்றுத்தந்த பாடங்கள்தான் என்ன? ஒன்று இரண்டல்ல பல தடவைகள், பல சந்தர்பங்கள் அரசுடன் பேசி அடிப்படைத் தேவைகளையாவது பூர்த்தி செய்யக் கிடைத் சந்தர்பங்களை எல்லாம் கை நழுவவிட்டவர்கள், இனி வரும் ஐந்தாண்டுகள் போய் நாடாளுமன்ற இறுக்க அரசியல் சூழலிருந்து எமது இனத்துனக்கான விடிவைப் பெற்றுத் தருவார்கள் என்ற எண்ணத்தில் வாக்களிக்க வேண்டாம் என்றது பல பொதுநல வாதிகள் கருத்தாகவும் கண்டோம். தற்போது அரசுடன் இணைவது பற்றிப் பேசத் தொடங்கி இருப்பவர்களிடம் எப்படி அதிகாரத்தைக் கொடுப்பது.? எப்படி அவர்களை நம்பலாம்? எனவே அவர்களுக்கு வாக்களிக்கப் போகின்றவர்கள் நிதானமாகச் சிந்தித்தே வாக்களிக்க வேண்டும் என்றும் அவர்கள் பொதுமக்களைக் கேட்டுக் கொள்ளுகின்றனர்..

இரண்டாவது சர்வதேசிய அரசிலை எடுத்துக் கொண்டால், ஜெனீவாவிலும் சரி, சர்வதேசத்திலும் சரி போர்க் குற்றங்களுக்கு எதிராக நடைபெற்ற விசாரணைகள், பிரச்சார நடவடிக்கைகள் இவற்றிலிருந்து இதுவரை இருந்த அரசுகளைக் காப்பாற்றுவதற்குத் துணைபோனவர்கள், நடவடிக்கைகள் நீர்த்துப்போகக் காரணமானவர்கள் என்று அறியப்பட்டவர்கள், அதற்குரிய விசாரணைகளை உள்ளகத்திலேயே நடத்தலாம் என்றதற்கு உத்தி வகுத்துக் கொடுத்தவர்களும் கூட்டமைப்பினரே என்று சொல்லப்படுகிறது. சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் இந்த வழக்கை எடுத்துச் சென்று விசாரித்து, "இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே" என்ற அடிப்படையில் அதன் குற்றவாளிகளை இனங்கண்டு தமிழ் சமூகத்துக்கு நீதியைப் பெற்றுத்தர வாய்ப்பிருந்தும் அதனை இன்றுவரை தட்டிக் கழித்து வருவதற்கு மூல காரணமாயிருப்பவராகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரை ஏனைய தமிழ் கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

தேர்தல் நாள் நெருங்க , நெருங்கத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரிடமிருந்து தமது கொள்கை தொடர்பாகவும், எதிர்கால நடவடிக்கை தொடர்பாகவும் புதுப் புது விளக்கங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவை மேற்சொன்ன பல விடயங்களில் மக்களுக்குரிய பல சந்தேகங்களைத் தீர்த்துவைக்குமாறு அமைகின்றன. இதற்குக் கடந்த வெள்ளியன்று யாழ். தேர்தல் மாவட்டத்துக்குட்பட்ட செம்பியன்பற்றில் நடைபெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரச்சாரக் கூட்டத்தில் வேட்பாளர் சட்டதரணி சுமந்திரன் பேசிய பின்வரும் பேச்சே சான்று பகர்கின்றது.

அரசுடன் இணைவதா? இல்லையா என்ற தீர்மானம் பின்னர் எடுக்கப்படுவதாக இருந்தாலும், ஏற்கனவே அது தொடர்பான தீர்மானங்கள் எடுத்து நடைமுறைப் படுத்துகின்றோம். அரசியல் தீர்வொன்று எப்பொழுது வருமென்று சொல்லமுடியாது. ஜனநாயகச் சூழல் வரும்வரை காத்திருக்க வேண்டும்.அது மட்டுமல்லாமல் பேச்சு மூலம்தான் பெறவேண்டும்.போர்ச் சூழல் என்றால் அடித்துப் பறிக்கலாம். ஆனால் இது அப்படியல்ல. அத்தகைய சூழல் வர எவ்வளவு காலம் எடுக்கும் என்று சொல்ல முடியாது.அதற்கு இடைப்பட்ட காலத்தில் நாம் எமது பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்வது அவசிய தேவையாகிறது.இனி அமையப்போகும் புதிய ஆட்சியில் வரப்போகும் அமைச்சரவையில் சேர்வதாக இருந்தாலும் எந்த அமைச்சுகள்? எத்தனை அமைச்சுகள்? என்னவிதமான அதிகாரங்கள்? போன்ற விடயங்களில் பேரம்பேச எமக்குப் பலம் இருக்க வேண்டும் – என்று வெளிப்படையாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தப் பேச்சின் மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு மறை பொருளாக வைத்திருந்த பல விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. "ஏற்கனவே இது தொடர்பான விடயங்களை எடுத்து நடைமுறைப்படுத்துகின்றோம்" என்ற தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரன் உரையிலிருந்து எதை விளங்கிக் கொள்ளுகிறீர்கள்? தேர்தலுக்குப் பின்னான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் செயற்பாடுகள் எப்படி இருக்கும்?அதனை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்!!!

# பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக பிலிப்பைன்ஸின் அனுபவம்

## கருத்தில் கொள்ளாத தமிழ் சமூகம்

- ஐ.வி. மகாசேனன் -




"தேசிய பாதுகாப்பு" என்ற ஒற்றை வார்த்தைக்குள், தனியாள் சுதந்திரத்தைச் சிதைக்கக்கூடிய சட்ட ஏற்பாடுகளே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் உள்ளடக்கங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 1982ஆம் ஆண்டு இலங்கையில், அன்றைய ஐக்கியதேசிய கட்சி அரசாங்கத்தின் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவர்களால் பயங்கரவாதச் தடைச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாகவே இன்றும் தமிழ் மக்கள் வேதனையை அனுபவித்து வருகின்றனர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தினூடாக அரசாங்கம் கொள்கைரீதியாகத் தனக்கு எதிராகச் செயற்பட முனைவோர்களையே கைது செய்கிறது. மேலும் தமிழ் சமூகத்தில் தொடர்ச்சியாகப் பதட்டத்தைப் பேணவும் பயங்கரவாத தடைச்சட்டத்தை அரசாங்கம் உபயோகித்து வருகிறது.

1982ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை மக்கள் பயங்கரவாதத்துக்கு அனுமதித்த சூழலைப்போல ஒரு நிலை, 2020ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸில் காணப்படவில்லை. பிலிப்பைன்ஸில் நிலவும் பயங்கரவாதச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், கொரோனா அபத்தத்தின் மத்தியிலும் பிலிப்பைன்ஸில் அவசர கதியில் பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரோட்றிகோ பயங்கரவாதச் சட்டத்திற்கான ஒப்புதலை அளித்து, பிலிப்பைன்ஸ் காங்கிரஸிலும் ஒப்புதலைப் பெற்றுப் பயங்கரவாதத் தடைச்சட்டம் சட்ட மூலமாகியுள்ளது. மறுபுறம் பிலிப்பைன்ஸ் மக்கள் தங்கள் சுதந்திரம் பறிக்கப்படுவதாக வீதியிலிறங்கி போராடிவருகின்றனர்.

தொடர்ச்சியாக நான்கு தசாப்தங்களாகப் பயங்கரவாத சட்டத்தினால் சுதந்திரத்தை இழந்தும், அதனின்று மீள்வதற்குச் சரியான உபாயமறியாதவர்களாய் உள்ள இலங்கைத் தமிழ் சமூகம், பிலிப்பைன்ஸில் உருவாக்கப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டத்தையும், அதற்கெதிரான மக்கள் போராட்டத்தையும் அறியும் வகையில் வெளிப்படுத்துவதை நோக்காகக் கொண்டே இக்கட்டுரை உருவாக்கப்பட்டுள்ளது.

பலரை ஆச்சரியப்படுத்திய ஒரு நடவடிக்கை இது. 2020 ஜூன் தொடக்கத்தில் பிலிப்பைன்ஸின் கோவிட்-19 தொற்றுச் சவால்களுக்கு மத்தியில், ஜனாதிபதி ரோட்ரிகோ டூர்ட்டே "2020 பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்" அவசரமானதொன்று என்று சான்றளித்தார். ஒரு சில நாட்களில், பிரதிநிதிகள் சபையில் எந்தவொரு மறுஆய்வு செயல்முறையும் மேற்கொள்ளாது, மசோதாவினை செனட் சபை ஏற்றுக்கொண்டது. பின்னர் அதை உடனடியாக ஜனாதிபதிக்கு கையொப்பத்திற்காக அனுப்பியது. ஜூலை 3, 2020 அவர் 2007ஆம் ஆண்டின் மனித பாதுகாப்புச்சட்டத்தை மாற்றியமைக்கும் 2020 பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் கையெழுத்திட்டார்.

பிலிப்பைன்ஸில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய பயங்கரவாத தடைச்சட்டமானது, பயங்கரவாதத்தின் தெளிவற்ற மற்றும் அதிகப்படியான பரந்த வரையறையைப் பயன்படுத்துவதாக வழக்கறிஞர்கள் கூறுகின்றனர். இந்தச்சட்டம், உத்தரவாதமற்ற கைது நடவடிக்கைகளை அனுமதிக்கிறது. மற்றும் கைது செய்தவர்களை வாரக்கணக்கில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாது வைத்திருக்க அனுமதிக்கிறது. காவல்துறை அல்லது இராணுவத்தால் நீதிமன்ற உத்தரவாதமின்றி சந்தேக நபர்களை 14 நாட்கள் தடுத்து வைக்கலாம், இது 10 நாட்களுக்கு நீட்டிக்கப்படலாம். மேலும் 60 நாட்களுக்கு கண்காணிப்பில் வைக்கப்படலாம், இது 30 நாட்கள் வரை நீட்டிக்கப்படலாம்.இச்சட்டத்திற்கு எதிராக குறைந்தது ஆறு மனுக்கள் ஏற்கனவே உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், இந்த மாத இறுதியில் இது செயல்படுத்தப்பட உள்ளது.

இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சந்தேக நபரைப் பயங்கரவாதக் குற்றத்தடுப்பு பிரிவு (டிஐடி) நீதிமன்ற உத்தரவின்றி மூன்று மாதங்கள் வரை வைத்திருக்கலாம். சந்தேக நபரைத் தடுத்து வைப்பதன் கால எல்லையை 18 மாதங்களாக நீடிக்க முடியும். எனினும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படும் ஒருவர் வழக்கு விசாரணை முடியும் வரை கால வரையறையின்றித் தடுத்து வைக்கும் நிலையே நடைமுறையில் உள்ளது. இதனாலேயே பல ஆண்டுகளாகவே பல தமிழ் அரசியல் கைதிகள் விசாரணையின்றியே சிறையில் வாடுகின்றனர்.

பிலிப்பைன்ஸ் அண்மையில் கொரோனா வைரஸ் வழக்குகளின் அதிகரிப்பை எதிர்கொண்டுள்ளது. கடுமையான பூட்டுதல் மீண்டும் அறிமுகப் படுத்தப்படலாம் என்று அரசாங்கத்தை எச்சரிக்கத் தூண்டிகிறது. நோய்த்தொற்றுகள் இதுவரை 50,359 ஐ எட்டியுள்ளன, அவற்றில் ஐந்தில் ஒரு பங்கு கடந்த ஐந்து நாட்களில் உறுதி செய்யப்பட்டது. 1,314 பேர் இறந்துள்ளனர். இந்நிலையில் அங்கு கோவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்டோருக்கு மனிதாபிமான உதவியினை வழங்கவும், குறித்த பயங்கரவாதத் தடைச்சட்ட ஏற்பாடு தடையாக உள்ளது. ஒரு பயங்கரவாதச் செயலாகக் கருதப்படும் ஒரு செயலுக்கு "பொருள் ஆதரவை" வழங்கும் எவரையும் சட்டம் குற்றவாளியாக்குகிறது. மனிதாபிமான குழுக்களுக்கு அதிலிருந்து ஒரு விலக்கு கோடிட்டுக் காட்டப்பட்டாலும், இது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளதாகப் பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் போது மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பேராசிரியர் பியோனுவாலா நி அலெய்ன் (குழைரெயடய டீ யுழட ைவை) கூறினார். மேலும் "மனிதாபிமான அமைப்புகளின் பணிக்கு இடையூறு விளைவிக்கும் எந்தவொரு நடவடிக்கையும் உண்மையில் பொறுப்பற்றது" எனப்பேராசிரியர் விசனம் தெரிவித்துள்ளார்.

உச்சநீதிமன்றத்தில் சட்டத்தை எதிர்த்து ஒரு மனுவைத் தாக்கல் செய்யத் திட்டமிட்டுள்ள தேசிய மக்கள் சட்டத்தரணிகளின் ஒன்றியத்தைச்சேர்ந்த எட்ரே ஒலாலியா,"இந்த சட்டம் ஊடகங்கள், ஆர்வலர்கள் மற்றும் எதிர்க்கட்சி நபர்களுக்கு மட்டுமல்ல, இணையத்தில் கருத்துக்களை வெளிப்படுத்தும் பொது உறுப்பினர்களையும் அச்சுறுத்தும்" என்கின்றார். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களை அவர் "இராணுவச் சட்டத்துடன்" ஒப்பிட்டார். "நிர்வாக அமைப்புகளுக்கு இவ்வளவு அதிகாரத்தை வழங்குவது முன்னோடியில்லாதது. சட்டத்தின் வரையறைகள் மிகவும் விரிவான மற்றும் பரந்தவையாகும். அவை சட்டபூர்வமான செயல்களைக் கூட பயங்கரவாதமாகக் கருதலாம்" என்று அவர் கூறினார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரோட்ரிகோ டூர்ட்டே கையெழுத்திட்டார் என்ற செய்திக்கு பதிலளித்த அம்னஸ்டி இன்டர்நேஷனலின் ஆசிய - பசிபிக் பிராந்திய இயக்குனர் நிக்கோலஸ் பெக்கலின், "டூர்ட்டேவின் ஜனாதிபதியின் கீழ், லேசான அரசாங்க விமர்சகர்களைக் கூடப் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தலாம். இந்த நிர்வாகம் ஒரு புதிய ஆயுதத்தைத் திறம்பட வடிவமைத்துள்ளது. தண்டனையின் தற்போதைய சூழலில்,"பயங்கரவாதம்" என்ற வரையறையில் மிகவும் தெளிவற்ற ஒரு சட்டம் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு எதிரான தாக்குதல்களை மோசமாக்கும்." என்று கூறினார்:

சட்டத்தரணிகள் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் கருத்துக்களுக்கு அப்பால் பொதுமக்களும் பிலிப்பைன்ஸ் அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக வீதியிலிறங்கிப் போராட ஆரம்பித்துள்ளனர். தலைநகர் மணிலாவில் அங்குள்ள மாநில பல்கலைக் கழகத்தின் முன்பாகக் கூடிய நூற்றுக்கும் மேற்பட்டோர் புதிய சட்டத்தை எதிர்த்து முழக்கங்களை எழுப்பியுள்ளனர்.

எதிர்வினைகளுக்கு கடந்த புதன்கிழமை (08.07.2020)ஒரு தொலைக்காட்சி உரையில் பதிலளித்த பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி டூர்ட்டே,"நீங்கள் ஒரு பயங்கரவாதி இல்லையென்றால் பயப்பட வேண்டாம்." எனக்கூறியுள்ளார். எவ்வாறாயினும், பயங்கரவாதம் என்ற சொல் "இயல்பாகவே சந்தேகிக்கப்படும் வகை" என்றும், உரிமைகளை அடக்குவதற்கு அரசாங்கம் வேண்டுமென்றே பயங்கரவாத எதிர்ப்பு அட்டையை பயன்படுத்துவதாகவும் பேராசிரியர் பியோனுவாலா நி அலெய்ன் பதிலுரைத்துள்ளார்.

பயங்கரவாதச் சட்டத்திற்கு டூர்ட்டே தனியான பொருள்கோடலை மேற்கொள்வாரெனக் கூறிச் சட்டத்தை எதிர்ப்போர் பெரிதும், 2016இல் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் தொடங்கப்பட்ட போதைப்பொருள் தடுப்பு ஒடுக்குமுறையின் போது மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத கொலைகளினையே சுட்டிக்காட்டுகின்றனர். அதனை மையப்படுத்தியே டூர்ட்டே தலைமையின் கீழ் செய்யப்பட்ட துஷ்பிரயோகங்களுக்கு அவஉளது பொறுப்புக்கூறலைக் கோருபவர்களை மௌனமாக்குவதற்கு, புதிய சட்டத்தின் பெரும் வரையறைகள், ஒரு புதிய வழிகளை அவஉகளுக்கு வழங்கும் என்று பலர் அஞ்சுகின்றனர், "அவஉ கை ஏற்கனவே தூண்டுதலில் உள்ளது, அதற்கு மேலும் தூண்டுதலைக் கொடுப்பதற்குச் சட்டம் வழிவகுக்கும்" என்று ஒலாலியா தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸில் பயங்கரவாத ஆபத்து உண்மையானது மற்றும் அதிகரித்து வருகிறது என்பதும் நிதர்சனமான அவதானிப்பாக உள்ளது. பிலிப்பைன்ஸில், பயங்கரவாத அச்சுறுத்தல் ஒரு இரத்தக்களரிப் பரிணாமத்தை எடுத்துள்ளது. கடந்த காலங்களில் நடந்த கொலைகள், கடத்தல்கள் மற்றும் ஆயுதத்தாக்குதல்கள், கடந்த தசாப்தத்தில் மேம்படுத்தப்பட்ட வெடிக்கும் சாதனங்களின் பயன்பாடும் அதிகரித்தது. மற்றும் கடந்த சில ஆண்டுகளில் அதன் ஒரு கொடிய விளைவு தற்கொலை குண்டுவெடிப்புகளாகக் காணப்படுகிறது. ஜூலை 2018 மற்றும் நவம்பர் 2019 க்கு இடையில், நாட்டில் ஆறு தற்கொலைக் குண்டுவெடிப்புகள் நடந்தன. மேலும் குண்டுவெடிப்புகள் நடக்கவிருந்தன என்பதற்கான சான்றுகளுடன், அவை தோல்வியடைந்தன.

பயங்கரவாதச் செயல்களைத் தடுப்பதற்கும் துல்லியமாக நோக்கம் கொண்ட ஒரு சட்டத்தை பிலிப்பைன்ஸ் ஏற்கனவே இயற்றியுள்ளது. 2007ஆம் ஆண்டின் மனித பாதுகாப்பு சட்டம் (எஸ்ஏ) என்றும் அழைக்கப்படும் குடியரசு சட்டம் எண் 9731, ஜூலை 2007 இல் நடைமுறைக்கு வந்தது. அரசாங்கத்திற்கும் சட்ட அமுலாக்க நிறுவனங்களுக்கும் பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்கொள்ள உதவுகிறது. ஆயினும்கூட, பாதுகாப்பு ஆய்வாளர்கள் குறிப்பிடுகையில், 2007 ஆம் ஆண்டின் ஹெச்.எஸ்.ஏ ஒருபோதும் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. இது இயற்றப்பட்டதிலிருந்து இரண்டு முறை மட்டுமே செயல்படுத்தப்பட்டது என்கின்றனர். தற்போதைய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தால் அதிகார சமநிலையும், அதன் பயன்பாட்டின் விருப்பமும் மேம்படுத்தப்பட்டுள்ளன. இது அதிக அளவு ஒழுக்கம் மற்றும் பொறுப்புணர்வுடன் பயன்படுத்தப்படுமா? நாட்டின் தேசிய பாதுகாப்பு முகவர் நிலையங்கள் இன்னும் நீடித்த நம்பகத்தன்மை மற்றும் நம்பிக்கைச் சிக்கல்களை எதிர்கொள்கின்றன. இந்த அமைப்புகளில் சீர்திருத்தவாதிகளைத் தொழில்மயமாக்கல் மற்றும் திறன் மேம்பாடு மற்றும் மேம்பட்ட பயிற்சி ஆகியவற்றை ஆதரிக்க வேண்டியதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக்காட்டுகிறது. இது பயங்கரவாத எதிர்ப்பு சட்டச் சிக்கலின் ஒரு பகுதி மட்டுமே என்பதையும்,தேசிய பாதுகாப்பு நிறுவனங்களை சீர்திருத்துவதே முக்கியமாக இருக்கும் என்பதை தெளிவுபடுத்துகிறது.

இலங்கையருக்கும் இவ்வாறான அனுபவமே மேலோங்கிக் காணப்படுகிறது. உலகளவில் வலுத்துவரும் பயங்கரவாதச் தடைச்சட்டம் தேசிய பாதுகாப்புக்கு அவசியமானதாகினும், இலங்கையின் தேசிய பாதுகாப்பு முகவர்களின் நம்பிக்கையே கேள்விக்குறியாகி உள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டு இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பால் உரிமை கோரப்பட்ட ஈஸ்டர் வெடிகுண்டுத்




தாக்குதலை இலங்கையில் நடைமுறையிலிருந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் தடுத்திட முடியவில்லை. அதுமட்டுமன்றித் தொடர்ச்சியாகத் தமிழ் சமூகத்தையே அடக்கி வந்த பயங்கரவாத தடைச்சட்டத்தின் பார்வைகள், வெடிகுண்டுத் தாக்குதலுக்குப் பின்னரான பாதுகாப்பு நடைமுறையிலும் தமிழ் சமூகத்தையே மேலும் அடக்குவதாக அமைந்தது. குறிப்பாக எவ்வித தாக்குதலும் நடைபெறாத வடக்கு - கிழக்கில் இராணுவச் சோதனை முகாம்கள் புதிதாக அதிகரித்தன. மேலும் அக்காலப்பகுதியிலேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பல்கலைக்கழக வளாகத்தினுள் கைது செய்யப்பட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்றும் கொரோனா அபத்தம் ஒரு பக்கம் இலங்கையர்களை அச்சத்துக்குள் தள்ளும் சூழ்நிலையிலும், வடக்கில் சத்தமின்றி, புலிகள் மீளுருவாக்கம் என்ற போலிக்காரணத்தைக் காட்டி அப்பாவித் தமிழ் மக்கள் பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வருகின்றனர். கடந்த ஜூன் மாதம் வரையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மட்டும் 21பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழு ஒருங்கிணைப்பாளர் தங்கவேல் கனகராஜா ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார். எனினும் தமிழ் சமூகத்தில் இருந்து எவரும் அதற்கான சரியான எதிர்வினையாற்றவில்லை என்ற குற்றச்சாட்டுப் பரவலாக உள்ளது.

பிலிப்பைன்ஸில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் அனுபவமற்ற சூழலிலும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் எதிர்க்கட்சிகள் எனப் பலதரப்பினராலும் எதிர்ப்புக்கள், போராட்டங்கள் நடாத்தப்படுகின்றன. எனினும் நான்கு தசாப்தங்களாகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினால் துயரங்களை அனுபவித்து வரும் தமிழ் சமூகம், எவ்வித முரண்பாட்டு நிலைமைகளும் அற்ற சூழலில் சத்தமின்றி மீள அதிகரிப்படும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான கைதுகள் தொடர்பான செய்தியை செய்தியாகவே கடந்து செல்வது துயரமான பதிவாகும். அரசியல் கட்சிகள் தங்கள் பாராளுமன்ற ஆசனப்போட்டியில் தேர்தல் பிரச்சாரங்களில் மும்மரமாக வாக்குகளை மட்டுமே எதிர்பார்த்து வாக்காளர்களின் உரிமைகளை மறந்து செயற்படுகிறார்கள் என்ற நிலையில், சிவில் சமூகங்களும், பல்கலைக்கழக சமூகமும் கூட மௌனித்திருப்பது தமிழ் சமூகத்தின் சாபக்கேடேயாகும்.

# வடக்கு – கிழக்கு தொல்பொருளியல் வன்முறையும் மாற்று அரசியற் பார்வையின் முக்கியத்துவமும்



மகேந்திரன் திருவரங்கன்
தகுதிகாண் விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



கடந்த ஆண்டு காணி உரிமைகளுக்கான மக்கள் கூட்டணியினால் அமைக்கப்பட்ட ஒரு காணிக் கமிசன் நாட்டின் பல பகுதிகளிலும் வாழும் சமூகங்களினது, காணி தொடர்பான பிரச்சினைகளைக் கேட்டறியும் முயற்சிகளில் ஈடுபட்டது. இந்தக் கமிசனின் அமர்வு ஒன்று முல்லைத் தீவிலே இடம்பெற்ற போது, அங்கு பேசிய ஒருவர் பின்வரும் கருத்தினை வெளியிட்டார்: "தொல்பொருளியல் திணைக்களத்தினைச் சேர்ந்தோர் இரவு வேளைகளில் வருவார்கள். அப்போது எதையாவது புதைத்து விட்டுச் செல்வார்கள். அடுத்த நாள் அதனைக் கிண்டி எடுத்துவிட்டு, அந்தப் பிரதேசம் பௌத்தர்களின் புனித பூமி என்று செல்லுவார்கள்." இலங்கையின் சிறுபான்மை மக்களின் மத்தியில், அதிலும் குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணங்களிலே வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் மத்தியிலே, இலங்கையின் தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிகள் தொடர்பாக இவ்வாறான ஒரு பார்வை பரந்த அளவிலே அவதானிக்கப்படுகிறது. இந்த மக்கள் வாழும் பிரதேசங்களின் மீது அரசினால் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருளியல் வன்முறையே, இவ்வாறான பார்வை ஒன்று வடக்குக் கிழக்கிலே எழுந்தமைக்கான பிரதானமான காரணம் ஆகும்.

தொல்பொருளியல் வன்முறை

இலங்கை அரசின் ஒரு பாகமாக இருக்கும் தொல்பொருளியல் திணைக்களம், இலங்கையினைச் சிங்கள பௌத்தர்களுக்குரிய ஒரு தேசமாக உருவாக்கும் முயற்சிகளுக்கு பங்களிப்புச் செய்து வருகிறது. எமது பாடசாலைகளிலே கற்பிக்கப்படும் வரலாற்றுப் பாடநூல்கள் எவ்வாறு நாட்டின் சிறுபான்மை இன மக்களின் வரலாறுகளை இருட்டடிப்புச் செய்கின்றனவோ, அதே போலவே தொல்பொருளியல் திணைக்களமும் சிறுபான்மை மக்களிற்கும், இந்தத் தீவுக்கும் இடையிலான வரலாற்று ரீதியிலான உறவுகளை நீர்த்துப் போகச் செய்யும் பணிகளிலே ஈடுபடுகிறது. தொல்பொருளியல் துறையினைப் பயன்படுத்தி, இவ்வாறு திட்டமிட்ட முறையிலே, அரசினால் மேற்கொள்ளப்படும் ஆதிக்க ரீதியிலான அறிவுருவாக்க, வரலாற்று உருவாக்க முயற்சிகளை இந்தக் கட்டுரை தொல்பொருளியல் வன்முறை என விளங்கப்படுத்த முற்படுகிறது.

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து தமிழ்த் தேசிய அடையாளத்தின் மூலமான ஒரு சுயநிர்ணய உரிமைக்கான குரல் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில், இந்தப் பிரதேசத்தினை சிங்கள பௌத்த மயமாக்குவதன் மூலம், இப்பிராந்தியத்தின் சுயநிர்ணய உரிமைக்கான கோசங்களை வலுவிழக்கச் செய்யலாம் என்பதுவும் தொல்பொருளியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் வன்முறைக்கு மற்றொரு காரணம் ஆகும்.

**தொல்பொருளியல் செயலணி**

இவ்வாறான ஒரு சூழமைவிலேயே, கிழக்கு மாகாணத்தில் இருக்கும் தொல்பொருளியல் முக்கியத்துவம் மிக்க இடங்களை முகாமை செய்வதற்கான ஒரு செயலணியின் நியமனம் ஜனாதிபதியினால் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலமாக அண்மையிலே வெளியிடப்பட்டது. ஒப்பீட்டளவில் நோக்குகையில் இலங்கையிலே இன, மதப் பல்வகைமை மிகவும் கூடிய மாகாணமாகக் கிழக்கு மாகாணம் அமைகின்றது. கிட்டத்தட்ட 77 வீதமான தமிழ் பேசும் மக்களை உள்ளடக்கிய ஒரு மாகாணத்தின் தொல்பொருள் முக்கியத்துவம் மிக்க இடங்களைப் பேணும் நோக்கத்துக்காக அமைக்கப் பட்டிருக்கும் ஒரு செயலணியிலே தமிழ் பேசும் சமூகங்களைச் சேர்ந்த ஒருவர் தன்னும் இடம்பெறாமை, கிழக்கில் வாழும் தமிழ் – முஸ்லிம் மக்களின் மத்தியில் இந்தச் செயலணி தொடர்பாக அச்ச உணர்வுகளைத் தோற்றுவித்துள்ளது. தமது சமூகங்களின் கலாசாரங்களையும், மதச் சின்னங்களையும், ஏன் தம் அடையாளம் சார் இருப்பினையும் தகர்க்கும் வகையிலேயே, இந்தச் செயலணி செயற்படக்கூடும் என்ற அச்சம் அவர்களைச் சூழ்ந்துள்ளது. இந்தச் சூழலிலேயே இந்த இரண்டு சமூகங்களும் இணைந்து செயற்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்துப் பலரும் வலியுறுத்தி வருகின்றனர். இந்த இரண்டு சமூகங்களும் இணைந்து செயற்படுவதற்கு எவ்வாறான அரசியல் முயற்சிகள் அவசியம் என்பதனையும், அரசின் குறுகிய தேசியவாத ரீதியிலான தொல்பொருளியல் பார்வைக்கு மாற்றாக, இந்தப் பிரதேசத்திற்கென எவ்வாறான மாற்று அரசியற் பார்வை ஒன்று தேவைப்படுகிறது என்பதனையும் ஆராய்வதே இந்தக் கட்டுரையின் முக்கிய நோக்கம் ஆகும்.

வரலாறு

அதற்கு முன்னர் இந்தப் பிரதேசத்தின் வரலாறு குறித்தும் சற்று சிந்திப்பது பொருத்தமானது. ஏனெனில், அரசு எழுத முற்படும் திரிபுவாத வரலாற்றுக்கு மாற்றான ஒரு வரலாறு எம்மத்தியில் இருந்து எழ வேண்டியதும் இங்கு அவசியம். அவ்வாறான மாற்று வரலாறு என்ன என்பதனையும் நாம் கருத்தில்கொண்டே எமது எதிர்ப்பினையும், எதிர்காலம் தொடர்பான எமது பார்வையினையும் வளர்த்தெடுக்கலாம். சமகாலத்திலே தமிழ்த் தேசியவாதம் வடக்குக் கிழக்கினைத் தமிழர்களின் இணைந்த தாயகமாக வலியுறுத்தினும், கிழக்கு மாகாணத்தின் வரலாற்றினை எடுத்துக் கொண்டால் அது எல்லாக் காலங்களிலும், அரசியல் ரீதியாக வடக்குடன் இணைந்ததாக இருக்கவில்லை. உதாரணமாக, டக்மர் ஹெல்மன் ராஜநாயகம் என்ற வரலாற்று ஆசிரியரின் கருத்தின்படி, தற்போதைய மட்டக்களப்பு மாவட்டம் ஒரு போதும் நேரடியான தமிழ் ஆட்சியின் கீழோ அல்லது யாழ்ப்பாண இராசதானியின் கீழோ இருக்கவில்லை. முதலிலே அது உருகுணை இராசதானியின் ஒரு பகுதியாகவும் பின்னர் கண்டி இராசதானியின் ஒரு நிலமானியப் பகுதியாகவும் இருந்தது. கண்டி இராசதானி பற்றி எழுதும் வரலாற்றாசிரியர் பத்மநாதன், புல்மோட்டையில் இருந்து பாணமை வரையிலான அந்த இரசாதானியின் கிழக்குக் கரையோரத்திலே தமிழர்களும், முஸ்லிம்களும் அதிக அளவிலே வாழ்ந்தமையினைச் சுட்டிக்காட்டுகிறார். நாம் தற்கால சமூகங்களை வேறுபடுத்துவதற்குப் பயன்படுத்தும் தமிழ், சிங்களம், முஸ்லிம் போன்ற வகைப்படுத்தல்கள் கண்டிய இராசதானிக் காலத்திலும் அதற்கு முன்பும் வாழ்ந்த மக்களை வகைப்படுத்துவதற்குப் பயன்படுத்த முடியுமா என்ற கேள்வியும் இங்கு எழுகிறது. ஏனெனில், நாம் பயன்படுத்தும் இன அடையாள லேபள்களுக்கு என்றும் ஒரு வரலாறு இருக்கிறது. அந்த லேபள்கள் எப்போது முதன் முதலிலே பயன்படுத்தப்பட்டன? யாரினால் என்ன நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்டன என்ற கேள்விகளும் இங்கு முக்கியமானவை.

எவ்வாறாயினும், கிழக்கு மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளும், வடக்கு மாகாணமும் ஒரே அரசியல் நிர்வாகத்தின் கீழ் காலனித்துவக் காலத்திற்கு முன்னர் இருந்திருக்கவில்லை என்பதனை நாம் இந்த வரலாற்றாசிரியர்களின் கருத்துக்களின் மூலமாக அறிய முடியும். வரலாற்று ரீதியில் தீவின் வடக்குக் கிழக்குப் பகுதிகள் தொடர்ச்சியாக இணைந்திருந்தமையினை நிரூபிக்க முடியாது எனினும், சம காலத்திலே இந்த இரண்டு மாகாணங்களும் இணைந்த நிலையிலும் சரி, பிரிந்த நிலையிலும் சரி, நாட்டின் அரசியலிலே மிகவும் முக்கியத்துவம் மிக்க பிரதேசங்களாக மாறியுள்ளன. இந்த இரண்டு மாகாணங்களின் பெரும்பான்மை மக்களாக, நாட்டில் ஒட்டுமொத்தமாகச் சிறுபான்மையாக உள்ள சமூகங்கள் இருக்கின்றன. சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலத்திலே, அரசின் சிங்கள பௌத்த மயமாக்கத்துக்கு எதிரான குரல்களும், போராட்டங்களும் ஒன்று திரட்டப்பட்ட முறையிலே இந்தப் பிராந்தியத்தில் இருந்து உறுதியான முறையிலே தொடர்ச்சியாக வெளிப்பட்டவாறு இருக்கின்றன. இந்தப் பிராந்தியத்திலே ஒரு தனி அரசினை அமைப்பதற்கான ஆயுதப் போராட்டமும் 30 ஆண்டுகளாக இடம்பெற்றது.

சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலத்திலே, இந்தப் பிராந்தியத்திலே வாழும் சிங்கள மக்களின் தொகை அதிகரித்தமைக்கு இந்தப் பிராந்தியத்திலே அரசினால் முன்னெடுக்கப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களும், குடியேற்றத் திட்டங்களும் பிரதானமான காரணங்களாக அமைந்தன. மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாண ஆசிரியர் சங்கம் உள்ளடங்கலாகப் பல அமைப்புக்கள் இந்தக் குடியேற்றத் திட்டங்களிலே சில எவ்வாறு இப்பிராந்தியத்திலே தமிழ், முஸ்லிம் மக்களின் குடிப்பரம்பல் வீதத்தினைத் திட்டமிட்ட வகையில் குறைக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டன என்பதனை ஆதார பூர்வமாக விளக்கியுள்ளனர்.

தமிழ்த் தேசியமும் தாயகக்

கோட்பாடும்

வடக்குக் கிழக்கினைத் தளமாகக் கொண்டு உருவாகிய தமிழ்த் தேசிய அரசியலின் மையமாக இருக்கும், பாரம்பரியத் தாயகக் கோட்பாட்டினை முன்னிறுத்தியே, சிங்கள பௌத்தத் தேசியவாதத்துக்கான எதிர்ப்பு வெளியிடப்படல் வேண்டும் என்ற குரல்களே இன்றும் பலமாக ஒலிக்கின்றன. தொல்பொருளியல் செயலணியினை எதிர்க்கும் நோக்கிலே தமிழ் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையினை வலியுறுத்தும் குரல்கள் கூட, இந்தத் தாயகக் கோட்பாட்டினை உறுதியாகப் பற்றி நிற்கின்றன. இவ்வாறான ஒரு கோட்பாட்டினை வலியுறுத்தியவாறு இந்த இரு சமூகங்களுக்கு இடையில் ஒற்றுமையினையும், தோழமையினையும் கிழக்கு மாகாணத்திலே உருவாக்க முடியுமா என்று கேள்வி இங்கு எழுகிறது. தமிழ் முஸ்லிம் உறவுகளை வளர்த்தெடுக்க நாம் முற்படுவோமாயின், வடக்குக் கிழக்கினைத் தமிழர் தாயகம் என்று சொல்லப்படும் உரையாடலினைக் கேள்விக்குட்படுத்த வேண்டியது அவசியம். வடக்குக் கிழக்கு தமிழருடைய தாயகம் என்பதற்குப் பதிலாக, அது யாருடைய தாயகம் என்ற கேள்வியினை எழுப்புவது தாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் இருக்கும் புறமொதுக்கல்களை நாம் புரிந்து கொள்ள உதவும். வடக்குக் கிழக்குத் தமிழர்களின் தாயகம் எனின் அது முஸ்லிம்களின் தாயகம் இல்லையா? அல்லது அது அங்கு வாழும் சிங்கள மக்களின் தாயகம் இல்லையா?

வடக்குக் கிழக்கு, பன்மைத்துவம், சகவாழ்வு

வடக்குக் கிழக்கினை தமிழ்த் தேசம், தமிழர்களின் தாயகம் என்பவற்றுக்கு அப்பால், சிங்கள பௌத்தத் தேசியவாதத்தின் கொடுமையினை எதிர்க்கின்ற, பன்மைத்துவத்தினைத் தாங்கிய ஒரு பூமி என்றே நான் விளங்க முற்படுகிறேன். அந்த அடிப்படையில் நோக்கும் போது வடக்குக் கிழக்கினை நாம் தேசியவாதத்தினுள்ளும், தாயகக் கோட்பாடுகளினுள்ளும் குறுக்கி வைக்கும் அபாயம் இல்லாது போகிறது. இவ்வாறான ஒரு புரிதலின் அடிப்படையில் பார்க்கும் போது, ஒடுக்கும் தன்மையான சிங்கள பௌத்தத் தேசியவாதமானது எல்லாவற்றுக்கும் முதன்மையாக வடக்குக் கிழக்குப் பிராந்தியத்தில் இருக்கக்கூடிய மொழிகள், சமயங்கள், கலாசாரங்கள் மற்றும் இனக் குழுக்களின் சகவாழ்வுக்கு எதிரானது என்ற நிலைப்பாட்டுக்கு நாம் வர முடியும்.

சிங்கள பௌத்தத் தேசியவாதம் வடக்குக் கிழக்கிலே இருக்கும் ஒரு இஸ்லாமிய, கிறிஸ்தவ, இந்து மத அடையாளத்தினை அழிக்க முற்படுகையில், அதன் கோரத்தினை அந்தப் பிராந்தியத்தில் இருக்கும்




பன்மைத்துவத்தின் மீது மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதலாகவும் நாம் பார்க்க முடியும். சிங்கள பௌத்தத் தேசியவாதம் ஆதிக்கம் மிக்க முறைகளிலே அல்லது ஜனநாயகமற்ற முறைகளிலே ஒரு பௌத்த அடையாளத்தினை வடக்குக் கிழக்கிலே நிர்மாணிக்க அல்லது மீள் நிர்மாணிக்க முற்படுவது கூட, அந்தப் பிராந்தியத்தில் இருக்கும் பன்மைத்துவத்தினை இல்லாதொழிக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் ஒரு செயற்பாடே. ஒடுக்கும் பெரும்பான்மைத் தேசியவாதம், தொல்பொருளியல் வன்முறையினைப் பிரயோகித்துத் தனித்தனியாக இன மற்றும் மத அடையாளங்களை அழிக்கிறது என்பதனை நாம் மறுக்க வேண்டியதில்லை. ஆனால், தனி அடையாள அழிப்புக்கள் எவ்வாறு அந்த நிலப்பரப்பின் ஒட்டுமொத்த அடையாள உருவத்தினைச் சிதைக்கிறது அல்லது மாற்றுகிறது என்பது பற்றி நாம் விழிப்புணர்வு உடையவர்களாக இருக்கும் போது, இந்தப் பிராந்தியத்திலே வாழும் வேறுபட்ட சமூகங்களுக்கு இடையில் தொடர்புகளினையும், தோழமை உணர்வுகளையும் எம்மால் வளர்த்தெடுக்க முடியும்.


இவ்வாறான ஒரு அணுகுமுறையின் ஊடாக, எமது கலாசார வாழ்வு எவ்வாறு மற்றையோரின் கலாசார வாழ்வுடன், ஒரு கலாசார சகவாழ்வாக பிணைந்திருக்கிறது என்பதனையும், அடையாளங்களின் சேர்க்கையினால் உருவாகும் அடையாளக் கலவன்களுக்கும் இந்தப் பிராந்தியத்திலே இடம் இருக்கிறது என்பதனையும் நாம் ஏற்றுக்கொள்ளுவது, எமது எதிர்ப்பின் வீரியத்தினை மேலும் கூட்டும். இந்த மாதிரியான ஒரு புரிதலே வடக்குக் கிழக்கின் வரலாற்றினை அதனுடைய எல்லா சிக்கல் தன்மைகளின் ஊடாகவும் விளங்குவதற்கு எமக்கு வழி செய்யும்.

சிங்கள பௌத்தத் தேசியவாதம் தனியே வடக்குக் கிழக்கிலே வாழும் தமிழர்களினதும், முஸ்லிம் மக்களினதும் அரசியல் இருப்புக்கு மாத்திரமல்லாது, இந்தப் பிராந்தியத்திலே காலம் காலமாக வாழ்ந்த (அவர்கள் எண்ணிக்கையிலே குறைவாக இருந்தாலும்) சிங்கள சமூகங்களினதும், பௌத்தத்தினைப் பின்பற்றியோரினதும், சகிப்புத் தன்மை மிக்க கலாசாரங்களுக்கும் ஒரு அச்சுறுத்தலினை விடுக்கிறது. உதாரணமாக எம்.எச். அஷ்ரஃப் அவர்கள் எழுதிய “மணியோசை” என்ற கவிதை, தீகவாபியில் அமைந்திருக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க விகாரை ஜனநாயகமற்ற முறையிலே ஒரு புனித வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட போது, அது எவ்வாறு அப்பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம் விவசாயிகளுக்கும், தீகவாபி விகாரைக்கும் காலங்காலமாக இருந்த பிணைப்புக்களை இல்லாதொழித்தது என விபரிக்கிறது. இந்தப் பிரகடனம் விகாரையினைச் சூழவுள்ள நிலங்களில் இருந்து முஸ்லிம் விவசாயிகளை வேரோடு பிடுங்கி எறிந்த அதேவேளை, ஏனைய சமூகங்களினை அச்சுறுத்தாத வகையில், அப்பிராந்தியத்தில் இருக்கும் ஏனைய கலாசாரங்களுடன் அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்த ஒரு பௌத்தப் பாரம்பரியத்தினையும் இல்லாதொழித்தது. புனித வலயப் பிரகடனத்துடன், பௌத்தம் அங்கு ஒரு கோர முகத்தினை வெளிக்காட்டியது. வடக்குக் கிழக்கினை மையமாகக் கொண்ட தாயகக் கோட்பாட்டினால் இன, கலாசார எல்லைகளைக் கடந்துபோகும் இந்த மாதிரியான உறவுகளையும், அவை எவ்வாறு சிங்கள பௌத்தத் தேசியவாதத்தினால் சிதைந்து போகின்றன என்பதனையும் விளங்கப்படுத்த முடியாது. ஒற்றை அடையாளத்தினுள் புதைந்து போயிருக்கும் இந்தக் கோட்பாடு, சமூகங்களை ஒன்றில் இருந்து ஒன்று பிரிக்குமே ஒழிய, அவை சேர்ந்து செயற்படுவதற்கான வழிகளை ஏற்படுத்தாது.

இன மையமற்ற சுயநிர்ணயம்

இன்றைய கிழக்கு மாகாணத்திலே, தமிழரும் முஸ்லிம்களும் இணைந்த நிலையில் 77மூ ஆன சனத்தொகையினை உருவாக்குகின்றனர். அவர்கள் தமது சமூகங்களினை மையமாகக் கொண்டு இயங்கும் இனத் தேசியவாதங்களினையும், குறுகிய நிலப்பரப்பு சார் கோட்பாடுகளினையும் விடுத்து, அவற்றின் மேலாக எழுந்து, வடக்குக் கிழக்கின் பன்மைத்துவத்தினைப் பாதுகாக்கும் வகையிலும், தமது சகவாழ்வினைக் கொண்டாடும் வகையிலும் ஒரு பதாகையின் கீழ் ஒன்றுபடுவார்களாயின், அது அரசினால் தொல்பொருளியல் பாதுகாப்பு என்ற போர்வையில் மேற்கொள்ளப்படும் கலாசார அழிப்புக்கு, உறுதியானதும், எவரையும் புறமொதுக்காததுமான ஓர் எதிர்வினையினை வழங்கும். இவ்வாறான ஓர் ஒருமிப்பு தமிழ், முஸ்லிம் தேசியவாதங்களையும், தாயகக் கோட்பாடுகளையும் தாண்டி வடக்குக் கிழக்கின் பன்மைத் தன்மையினையும், அங்கு வாழும் சமூகங்களின் சகவாழ்வினையும் முதன்மைப்படுத்தும் வகையிலான ஒரு இன மையமற்ற சுயநிர்ணயம் தொடர்பான பார்வையினையும் வளர்த்தெடுக்க உதவும்.

வடக்குக் கிழக்கின் சுயநிர்ணயப் போராட்டத்துக்கு என ஒரு குறிப்பிட்ட சமய அடையாள மையம் இருக்கவில்லை. அவ்வாறான சமய மையமில்லாமை, அந்தப் போராட்டத்திலே பல சமயத்தவரும் இணைவதற்கு உதவியதாக இருந்தது. அதே போலவே அந்தப் போராட்டத்துக்கு ஒரு இன அடையாள மையமும் இருக்க வேண்டியதில்லை. வடக்குக் கிழக்கினை நாம் தமிழர்களின் தாயகம் அல்லது தமிழ் முஸ்லிம் மக்களின் தாயகம் என்ற அடிப்படையில் வரையறுத்து, அதனடிப்படையில் அரசின் தொல்பொருளியல் வன்முறையினை எதிர்க்கப் போகிறோமா அல்லது அது ஒரு பன்மைத்துவத்தினையும், சகவாழ்வினையும் மதிக்கும் பூமி என நிலைநிறுத்தி அந்த அடிப்படையில் இருந்து பௌத்தமயமாக்கத்தினை எதிர்க்கப் போகிறோமா? இதிலே இரண்டாவது மார்க்கம் வடக்குக் கிழக்கிலே வாழும் பல தரப்பினரையும் ஒரு குடையின் கீழே கொண்டுவரக் கூடியது. ஒரு இனத்தேசியவாதத்துக்கு இன்னொரு இனத்தேசியவாதம் பதில் அல்ல என்பதனை வெளிப்படுத்தக் கூடியது. இவ்வாறான ஒரு அணுகுமுறையே சிங்கள பௌத்தத் தேசியவாதத்துக்கு கருத்தியல் ரீதியாகவும் சரி, கட்டமைப்பு ரீதியாகவும் சரி, செயற்பாட்டுத் தளத்திலும் சரி ஒரு பலமான மாற்றினையும், எதிர்ப்பினையும் உண்டுபண்ணும்.








# இராமாயணத்தின் நாயகன் இராமனைக் கைவிட்டு மந்திரியைக் கொண்டாடும் கம்பவாரிதி



ஒரு அயோக்கியனின் இறுதிப் புகலிடம் அரசியல் என்ற மாக்கியவல்லியின் கூற்றை முழுமையாக ஏற்றுக்கொண்டு இதனை எழுதுகிறேன், கம்பரே?
கம்பன் இலக்கியத்தில் தொடங்கிய உங்களின் வாழ்க்கையின் இறுதிப் புகலிடம் அரசியலாக இருக்கிறதே என்று எண்ணி மிகவும் வருத்தப்படுகிறேன். உள்ளூர ஏதாவது நியாயம் இருக்கலாம் என்று நினைத்து "தொலையப் போகிறது நம் இனம்" என்ற தலைப்பில் எழுதிய உங்கள் கட்டுரையைப் பலதடவை வாசித்துவிட்டேன். முதலில் அவை கம்பவாரிதி எழுதிய எழுத்தாக இல்லை. தற்போது அதிகம் மக்களால் விமர்சிக்கப்படும் சுமந்திரனைத் தூக்கி நிறுத்தி மிண்டு கொடுக்க எழுதப்பட்ட எழுத்தாகவே எனக்குப் பட்டது.
கம்பன் விழாவிலே தாங்கள் அவருக்குக் கொடுத்த கௌரவத்தை நியாயப்படுத்த இப்படி எழுதி இருக்கலாம். இன்றேல் அது ஒரு கைமாறாகவும் இருக்கலாம். அதில் எதுவென்று ஒரு தீர்மானத்துக்கு வருவது கடினம். ஏனெனில் நீங்கள் எழுதியது போல ஊகங்களை வைத்துக்கொண்டு உண்மையாக எழுத என்மனம் இடம் கொடுக்கவில்லை.
மாற்றம் வராவிட்டால் - துலையப் போகிறது நம் இனம் என்று எழுதியிருக்கிறீர்கள். அதனை மறுப்பதற்கில்லை. ஏற்றுக் கொள்ளுகிறேன்.
மாற்றம் எப்படி வரவேண்டும்? சுமந்திரன் வெல்வதிலும் தோற்பதிலும் அல்ல கம்பரே! ஒட்டு மொத்தக் கட்சியின் கட்டமைப்பிலும் மாற்றம் தேவை என்ற ஒரே எண்ணத்தை மனதில் கொண்டு தொடர்ந்து பேசலாம்...!
சம்பந்தன், மாவை, ஸ்ரீதரன், சுமந்திரன், சித்தார்த்தன் .... என்று எல்லாமே மாறவேண்டும்.
நீங்கள் கடவுளாக எண்ணித் துதிக்கின்ற கம்பன் மேல் கைவைத்துச் சொல்லுங்கள், நீங்கள் எழுதிய அந்த எழுத்தில் நியாயமும், நிதானமும் இருக்கிறதா? என்று.....
உங்கள் எழுத்தில் அடிக்குறிப்புக்கான இடத்தில் தனது கருத்தைத் தெரிவித்திருக்கும் விக்கி விக்கினேஸ்வரன் குறிப்பிட்டிருப்பதைப்போல "சுன்னாகம் நீரில் எண்ணெய் கலந்ததோ என்னவோ இந்த விடயத்தில் தனது கதையில் உண்மை கலக்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறார் கம்பவாரிதி!" என்றதற்கு உங்கள் பதில் என்னவாக இருக்கலாம்?
சற்றுப் பின்னோக்கிச் சென்று பேசலாம் என்று நினைக்கிறேன்...
முன்னாள் முதலமைச்சரைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வட மாகாண சபைத் தேர்தலில் வேட்பாளராகக் களமிறக்கியபோது... நீங்கள் அவரை அந்தப் பதவிக்குப் பரிந்துரைத்து எழுதிய எழுத்துகள் என் மனதில் இன்றும் பசுமையாக இருக்கிறது. அது என்னவென்று அதனைச் சற்று மீள் எண்ணிப் பாருங்கள்... நீங்கள் இலக்கியம் பேசலாம், அரசியல் பேசக் கூடாது என்பது அப்போது புரியும்? உங்கள் பேச்சின்மேல் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைப் பயன்படுத்தி அதனை அடகு வைத்துப் பிறரைச் சிபார்சு செய்வதென்பது எவ்வளவு முட்டாள்தனம் என்பது நன்கு புரியும்! புரிந்தால் தயவு செய்து சுமந்திரனை நல்லவர், வல்லவர் என்று தமிழ் மக்களுக்காப் பரிந்துரைக்காதீர்கள்.
உங்கள் இலக்கியத்தைக் கேட்க வருபவர்கள் எல்லாலோரும் அந்த இலக்கியத்தை நேசிப்பதைப்போல உங்களை நேசிக்கிறார்களா? என்றால் இல்லை என்றும் பதில்வரலாம். உங்களை நேசிப்பது என்பது உங்கள் நடவடிக்கையோடு சம்பந்தப்பட்ட விடயம். ஒருவன் பிறரால் நேசிக்கப்படுவதென்பதே சமூகத்தில் ஒருவனுக்குக் கிடைக்கும் அதி உன்னதனமான அங்கீகாரம்.
நிறைவாக ஒன்றைச்சொல்ல விரும்புகிறேன். இன விடுதலைப்போர் நடந்த காலத்தில், பிரபாகரனுடைய இருப்பு எவ்வளவு முக்கியமாய் இருந்ததோ, இன்றைய அரசியல் சூழ்நிலையில் சுமந்திரனது இருப்பும், இனஒற்றுமையும், அந்தளவு முக்கியத்துவம் பெறுகிறது என்று நீங்கள் குறிப்பிட்டிருப்பது - மறைந்த தலைவர் காமராஜரை சாதாரணமான ஒருவரோடு ஒப்பிட்டுப் பார்ப்பதாக எனக்குப் படுகிறது. பெருந்தலைவர் காமராஜர் இறக்கும் போது அவர் சட்டைப்பையில் இருந்தது வெறும் ரூபா 13 காசு 50 மட்டுமே என்று அவர் பற்றிய குறிப்பிலுண்டு. அவருக்கு அரசியலை வியாபாரமாக்கத் தெரியவில்லை. அவ்வளவுதான்!
அன்று முன்னாள் முதமைச்சர் விக்கினேஸ்வரனை வேட்பாளராகப் பரிந்துரைத்த நீங்கள் இன்று அவரைக் குற்றவாளிக் கூண்டிலே நிற்க வைத்து நியாயம் கேட்கிறீர்கள். அது உங்களுக்கே வேடிக்கையாக இல்லை? அதனைக் கேட்க எனக்கு அருவருப்பாக இருக்கிறது. அவமானம்!
நீங்கள் சொல்வது போல் "இந்த இனத்தை அறிவாளிகளின் இனம் என்று சொன்னவனைக் கழுவேற்றவேண்டும். உண்மையை இனங்காணத் தெரியாமல்...." என்ற வார்த்தையில் ஐயமில்லை, இது உங்களுக்கே உரித்தான வரிகள்.
பொய்மையின் "வால் முறுக்கல்களுக்கு" எடுபட்டு மக்களை வழிநடத்தப் புறப்பட்டவர்களைக் முதலில் கழுவேற்ற வேண்டும் என்றால்..? ஒரு தரமற்ற வழிகாட்டியின் சொல்லின்பால் ஈர்க்கப்பட்டு அவர் மேல் நம்பிக்கைவைத்து நீதியரசருக்கு வாக்களித்த மக்களைப் பார்த்து . இன்று நீங்கள் " தமக்கு நடக்கும் துரோகத்தின் வீச்சைக் கூடத் தெரிந்துகொள்ளாமல், பலிபீடத்தில் தாமாய்க் கழுத்தைக் கொண்டுபோய் வைக்கும் ஆடுகள் போல, அந்தச் சுயநலத் தலைவர்களின் "உசுப்பேத்தலுக்கு" ஆட்பட்டு, "உருவாடி"க் கொண்டிருப்பவர்கள் என்று அடையாளப்படுத்துகிறீர்கள். இதை எண்ண உங்களுக்கே அநாகரீகமாகத் தெரியவில்லை. அதனை எண்ண அருவருப்பாக இருக்கிறது. மாற்றம் வராவிட்டால் - துலையப்போகிறது நம் இனம் என்று வேறு குறிப்பிட்டிருக்கிறீர்கள். மாற்றம் என்று எதனை நீங்கள் கருதுகிறீர்கள்? அதனை நீங்கள் குறிப்பிடவில்லை. அதனைக் குறிப்பிடத் தவறிவிட்டீர்களா அல்லது தவிர்த்துக் கொண்டீர்களா? இதற்கு விளக்கமளிப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன்.
உங்கள் வேண்டுகோளுக்கிணங்க மக்கள் சுமந்திரனுக்கு வாக்களித்து அவர் பதவிக்கு வந்தபின் - உங்கள் பாஷையில் சொல்லப் போனால் - "கூரையேறிக் கோழி பிடிக்கத் தெரியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போன" கதையாக மாறிவிட்டால் - அதற்கு யார் பொறுப்பு? மீண்டும் அடுத்த தேர்தல் காலம் வரும்போது தற்போது எழுதியதைப்போல ஏதாவது சமாளித்து எழுதுவீர்கள். அப்பொழுதும் தமது வீழ்ச்சியைத் தாமே கொண்டாடிக் கொண்டிருக்கும் நம்மக்களையும், தம் சொந்த மக்களையே ஏமாற்றிப் பிழைக்க நினைக்கும் தலைவர்களையும் காணச் சகிக்கமுடியாத எரிச்சல் உண்டாகிறது. இப்படியுமா ஒரு இனம் முட்டாள்த் தனத்தோடு இயங்கும்? அருவருப்பாக இருக்கிறது. மாற்றம் வராவிட்டால் - துலையப்போகிறது நம் இனம் என்று ஏதாவது புதிய சொற்களைப் புகுத்தி எழுதித் தப்பித்துக் கொள்ளுவீர்களா?. ஆனால் அப்போது இருக்கும் மக்கள் பட்டறிவோடு இருப்பார்கள். உங்களை நம்புவார்களா என்பது சந்தேகமே!
தமிழ் சமூகத்துக்கு நன்மை செய்யாவிட்டாலும் - நீங்கள் தற்போது எண்ணுவதைப் போல பொருத்தமற்றவர் முன்னாள் முதலமைச்சர் என்று வைத்துக்கொண்டு பேசலாம். என்னைப் பொறுத்தவரை நான் இன்னும் அந்த முடிவுக்கு வரவில்லை - இது போன்ற பொருத்தமற்றவரைப் பரிந்துரைக்காது இருந்திருக்கலாம் அல்லவா? பிழை செய்துவிட்டோம் என்ற அங்கலாய்ப்பில் பேசுவதாகவும் எடுத்துக் கொள்ளலாமா? அப்படியாயின் ஒரு பொருத்தமற்ற ஒருவரைப் பரிந்துரைத்து நீங்கள் தமிழ் சமூகத்துக்குச் செய்த நஷ்டம் இருக்கிறதே... பல கோடி என்றதை மறக்க வேண்டாம். கடன் கொடுக்கும்போது பொறுப்பு நின்றவரையும் அந்தக் கடனை அறவிடமுடியாதபோது அவனைச் சட்டம் தண்டிக்கத்தான் செய்கிறது. எனவே முதலமைச்சர் ஆற்றாத வினைகளுக்கும் பொறுப்பு நீங்களே!
அப்போது எவரையோ திருப்திப்படுத்த அந்த சிபார்சைச் செய்தீர்கள் என்று எண்ணலாமா? அல்லது அப்போது வேறு ஒரு நிகழ்சி நிரலில் நீங்கள் இயங்கினீர்கள் என்றும் எடுத்துக் கொள்ளலாமா?
அதே பாணியிலேயே யாரோயோ... எவரையோ திருப்திப்படுத்த . அதே பிழையைச் செய்ய, தற்போது உடன்பட்டிருக்கிறீர்கள் போலத் தெரிகிறது...
திடீரெனக் காவி உடை அணிந்த ஒரு மனிதர், சமயப்பகை வளர்த்து சுமந்திரனை அதற்குள் இழுத்து விடப்பார்க்கிறார். திருக்கேதீச்சரத்தில் நடந்த சைவ கிறிஸ்தவ முரண்பாட்டில் சைவர்கள் பக்கமாய் நின்று திருக்கேதீச்சரத்தின் சார்பாக வழக்காடும் வக்கீலாக, சுமந்திரன் செயற்படுவதை இவர் மறந்துபோனது. ஏனோ? அத்தனை பேரும் பொய்யர்கள்.அருவருப்பாக இருக்கிறது.
மாற்றம் வராவிட்டால் - துலையப்போகிறது நம் இனம் என்று வேறு எழுதி இருக்கிறீர்கள்.
திருக்கேதீஸ்வர வளைவு விடயத்தில் சுமந்திரனின் பங்கு "பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டிவிட்ட கதை" என்று மக்கள் பேசுவது உங்கள் காதை எட்டுவதற்குச் சந்தர்பம் இல்லை என்று எண்ணுகிறேன். கன்னியாவிலும் இதே கதைதான் நடந்ததென்று உங்களுக்குத் தெரியாதா? காவி உடை அணிந்த மனிதர் சுமந்திரனைப்போலத் திடீரென அரசியலுக்குள் வந்தவரல்லர்.
சுமந்திரனைப்போல தமிழ் தேசிய வரலாறு தெரியாதவருமல்லர். அவர் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர். அது மட்டுமல்ல அவர் ஊடகச் சந்திப்பை நடத்தி மத மாற்றம் தொடர்பாகப் பல குற்றச்சாட்டுகளை சுமந்திரன் மேல் சுமத்தியிருக்கிறார். முடிந்தால் தன் மீது வழக்குத் தொடரலாம் என்றும் சவால் விட்டிருக்கிறார். வழமைபோல இப்படியான விடயங்களில் மான நஷ்டம் கோரி வழக்கைத் தாக்கல் செய்யும் சுமந்திரன் அந்தக் காவி வேட்டிக்காரர் தொடர்பிலும் வழக்குத் தொடரலாமே? அவரது ஊடகச் சந்திப்பில் "தனது மானம் நஷ்டப்பட வில்லை." என்று சுமந்திரன் நினைக்கிறாரோ தெரியவில்லை. ஒரு மனிதனின் ஒரு பக்கத்தையும், அவர் நடவடிக்கைகளையும் மட்டும் பார்த்துக் கொண்டு அவர் பற்றி விமர்சிப்பதையும், கருத்துத் தெரிவிப்பதையும் நிறுத்துங்கள். சந்தர்பம் கிடைத்தால் அந்தக் காவி வேட்டிக்காரரோடு இது பற்றி ஆழமாகப் பேசுங்கள். யார் கள்வர் என்றும், பொய்யர் என்றும் உங்களுக்குப் புரியும், கம்பரே!அதன் பின் நிலைக் கண்ணாடியின் முன் நின்று காறி உமிழ்ந்து அந்தக் கண்ணாடிமீது துப்பிப் பாருங்கள் . உங்களை எண்ண உங்களுக்கே அருவருப்பாக இருக்கலாம் !!.
சென்றமுறை கட்சி வேட்பாளர் தெரிவில் தமிழரசுக் கட்சித் தலைவருக்குத் தெரியாமலே பல முறைகேடுகள் நடதிருப்பதைத் தமிழரசுக் கட்சி பெண்கள் அமைப்புச் சுட்டிக்காட்டிருக்கிறது. தமிழரசுக் கட்சிக்குள் தகுதியானவர்கள் இல்லை என்று பொருள்பட புதியவர்கள் தலைநகரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுத் தேசியப் பட்டியலில் இடமளிக்கப்பட்டு கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தியவர் சுமந்திரன்தான் என்று அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். கட்சித் தலைவர் மாவையும் இது பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்று கைவிரித்திருக்கிறார். உண்மையில் கட்சி நலனில், அதன் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர் என்றால் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அதற்குப் பரிகாரம் தந்து எம்மை எல்லாம் ஒருங்கிணைத்துச் செயற்பட்டிருக்க வேண்டுமே என அந்த மகளிர் அமைப்பு உறுப்பினர்கள் சொல்லிக் கவலைப்பட்டனர்.
அடுத்து முன்னாள் முதலமைச்சர், "அதைச் செய்வேன், இதைச் செய்வேன்" என்று,தனது திருநீறையும், தாடியையும், முன்னாள் பதவியையும் காட்டி மயக்கம் செய்கிறார். படித்த மனிதரான இவர் ஏதாவது உருப்படியாய்ச் செய்வார் எனும் நம்பிக்கையில்,மாகாண முதலமைச்சர் பதவியைத் தூக்கி,இனத்திற்காக எப்பணியும் செய்யாத இவரது கையில் கூட்டமைப்புக் கொடுத்தது. அப் பதவியை வைத்து அவர் சாதித்தது எதனை? - என்று வேறு கேட்கிறீர்கள்?
நீங்களும் திருநீறையும், குடுமியையும், காவி உடையையும் காட்டித்தானே இலக்கியத்தை வியாபாரமாக்குகிறீர்கள் என்று நான் சொல்வில்லை, மக்கள் பேசிக் கொள்ளுகிறார்கள். விளக்கில் ஒரு திரிக்கு ஒரு இலட்சம் வாங்கியவர் என்ற பெருமையும் உங்களுக்கு உண்டு என்று இதனையும் மக்கள்தான் பேசிக் கொள்ளுகிறார்கள்.
படித்த மனிதரான இவர் ஏதாவது உருப்படியாய்ச் செய்வார் எனும் நம்பிக்கையில் . என்பதற்கு நீங்கள் எழுதியதிலேயே பதிலும் உண்டு .. எஞ்சியிருந்த ஒற்றுமையால் பாராளுமன்றத்தில் அதிகூடிய இருக்கைகளைப் பெற்றும், கூட்டமைப்பால் அதிகம் ஒன்றும் சாதிக்க முடியவில்லைத்தான்! அதை அவர்களின் இயலாமை என்று முற்றுமுழுதாய்ச் சொல்லிவிட முடியாது.அது சூழ்நிலையால் வந்த இயலாமை . என்ற கூட்டமைப்புக்கு வக்காலத்து வாங்க நீங்கள் எழுதிய எழுத்துக்களையே மேற்சொன்ன வற்றிற்கு விடையாக எடுத்துக் கொள்ளுங்கள் கம்பரே!
இத்தனை விகாரப்பட்டதாக உங்கள் எழுத்துக்கள் வெளிப்படுவதற்கு உங்கள் அகமும் அழுக்காக இருக்கிறதுதான் காரணம் என்பேன். பாரமற்ற இதயத்தோடு, ஒரு நடுநிலை இலக்கியவாதியாக நின்று கொண்டு உலகத்தைப் பாருங்கள்.
உன்னதங்கள் மட்டும் உங்கள் கண்களுக்குத் தெரியும்.அப்போ நியாயத்தைப் பேசுவீர்கள். பனைமரம் போன்று கற்பகதருவாக உயர்ந்து நின்று பயனளிப்பீர்கள்.
வாழ்த்துகள், கம்பரே!
(கம்பவாரிதியின் இது தொடர்பான கட்டுரை முழுவதையும் படிக்க **http://uharam.com/news/** இணையத் தளத்துக்குச் செல்லுங்கள்)

# உலகை ஆளுமா சீனா?

## 2049ஆம் ஆண்டே இலக்கு !

## ஐ.நா சபையையும் வளைத்துப் போட்டுக்கொண்டு..

எழுத்துருவாக்கம் : ப. ராஜ்குலன்



இலங்கை சீனாவுடன் அதிக நெருக்கமான உறவைப் பேணிவருகிறது. பாகிஸ்தானும் அதே போன்று செயற்பட்டு வருகிறது. சீனா தொடர்பாக அலசுவதற்கு முன்னதாக, முதலாளி என்பதற்கு சுருக்கமாக ஓர் விளக்கத்தைச் சொல்வதானால், எமக்குப் பணமும் கொடுத்து அவர்கள் சொல்வதைப் பின்பற்றச் சொன்னால் அல்லது அவருக்கு நாம் விசுவாசமாக நடந்துகொள்வோமேயானால் அவரை முதலாளி எனக்கொள்ளலாம். இந்த முதலாளி எனும் பதம் சீனாவிற்கு நன்றாகப் பொருந்தும். உலகைக் கட்டுப்படுத்தும் அமைப்புக்களைச் சீனா கட்டுப்படுத்துகிறது என்பதை உங்களால் மறுக்க முடியுமா?

கடந்த கட்டுரைகளில் அமெரிக்காவும், அமெரிக்காவின் மொன்சாண்டோ உள்ளிட்ட சில நிறுவனங்களும் உலகைத் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக முன்னர் எழுதி இருக்கிறீர்களே? என்ற கேள்வி உங்களுக்குள் எழலாம்.! உலகில் மாற்றங்கள் வலு வேகமாக நடைபெற்று வருகின்றன. எனவே ஒவ்வொரு நிமிடமும் உலக அரசியலில் ஏற்படக்கூடிய மாற்றத்தை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். ஏனெனில் இந்த உலகைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க நினைப்பவர்கள், ஒரு நாடோ அல்லது அமைப்போ என்றதற்கப்பால், அதீத பணபலம் படைத்தவர்களை எலைட் குரூப் (Elite Group) என்று அழைப்பார்கள். அதாவது உயரடுக்கு வர்க்கத்தினர்.

இன்றைய காலகட்டத்தில் எந்த நாட்டில் அதிகமாகப் பணம் புழக்கத்தில் ,ருக்கிறது என்று கேட்டால், உடனே சீனா தான் என்று பதில் சொல்லிவிடலாம். சீனாதான் அதிகமாக எல்லோருக்குமே கடன் கொடுக்கிறார்கள். எல்லாருக்குமே நல்லது செய்வதாக வாரி வழங்குகிறார்கள். இப்படி வள்ளல் போன்று தன்னை உருவகப்படுத்திக் கொள்ளும் சீனாவால், ஏன் உலகின் முதலாளியாக மாற முடியாது?

சீனாவின் இந்தக் கணக்கு இன்று நேற்றல்ல, முப்பது வருடங்களுக்கு முன்பாகவே போடப்பட்டுவிட்டது. இருந்தபோதும், கடந்த 2018ஆம் ஆண்டு சுமார் 2500 பேர் அடங்கிய கூட்டத்துக்கு மத்தியில் பெரிய பெரிய பணக்காரர்கள், பெருநிறுவன முதலாளிகள், அந்த நாட்டின் முக்கியமான தலைவர்கள், இராணுவத் தளபதிகள் என எல்லாருமே ஒன்றுகூடியிருக்கும், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியமான விழாவின் போது சீனாவின் அதிபர் மிகப்பெரிய ஓர் உரை ஆற்றினார். சுமார் 3 மணித்தியாலம் 20 நிமிடங்கள் வரை இந்த உரை நீள்கிறது. அடுத்து வரப்போகும் முப்பது வருடங்களில் சீனா என்னென்ன சாதிக்கும்! எப்படிச் சாதிக்கும்? ஏன் சாதிக்க வேண்டும்? என்பதை அக்குவேறு ஆணிவேறாகப் புட்டுப் புட்டு வைக்கிறார் அவர். அதில் அவர் சொன்ன விடயங்கள் எல்லாமே இப்போது நடந்துகொண்டிருக்கிறது. அவர் சொன்னதில் முக்கியமான சில விடயங்கள் 2049 என்பதை மையப்படுத்தித் தான், அதாவது 2018 இல் இருந்து 2049 இந்த முப்பது வருடங்களில் சீனாதான் முதல்தர நாடாக இருக்கவேண்டும். எல்லா நாட்டையும் கட்டுப்படுத்தக் கூடிய ஒரு சக்தியாக இருக்க வேண்டும். சீனாதான் விண்வெளிப் படையில் முக்கியமான நாடாக இருக்க வேண்டும். ஏற்றுமதி வர்த்தகத்தில் உலக நாடுகளோடு ஒப்பிடும்போது முதல் இடத்தில் இருக்க வேண்டும். இப்படியாகப் பலவிதமான அம்சங்களை அடிக்கி வைக்கிறார் சீன அதிபர். அந்த அரங்கத்தில் இருக்கும் 2,500 நபர்களும் இவருடைய பேச்சைக் கண் கொட்டாமல் பார்த்து ரசித்தார்கள். சீனாவின் வளர்ச்சி எப்படி இருக்கப்போகிறது என்பதனை அவர் பேச்சின் மூலம் படமாகவே காட்டியிருக்கிறார்.






உலக சுகாதார நிறுவனம் ஓர் மிக முக்கியமான அமைப்பாகும். இன்றைய கொரோனா இடர்காலத்தில் உலக சுகாதார நிறுவனம் சொல்வதை நாம் கேட்கும் நிலையில் உள்ளோம். அவர்கள் ஓர் முதலாளி போல, என்ன சொல்கிறார்களோ அதை நாம் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். உலக சுகாதார நிறுவனத்துக்கு இதுவரை காலமும் அமெரிக்காவே முதலாளி போன்று இருந்தது. ஆனால், கொரோனா பேரிடர் காலப் பகுதியில் சீனாவுக்கு ஆதரவாகச் செயற்பட்டதாகச் சொல்லி உலக சுகாதார நிறுவனத்துக்கான நிதியுதவியை அமெரிக்கா மட்டுப்படுத்திக் கொண்டது.

இந்தச் சந்தர்ப்பத்தைச் சீனா தனக்கு சாதகமாக்கிக் கொண்டது. உலக சுகாதார நிறுவனத்திற்குச் சீனா மேலதிகமாக 30 மில்லியன் டொலர் தருவதாக உறுதியளித்தது. 50 மில்லியன் வேண்டுமானாலும் தருவதாகச் சொன்னார்கள். கடந்த இரண்டு மாதகாலப் பகுதிக்குள் உலக சுகாதார நிறுவனம் ஓர் உலக வரைபடத்தை வெளியிட்டது. அதில் இந்தியாவின் பல பகுதிகள், அதாவது லடாக், ஜம்மு காஷ்மீர், உள்ளிட்ட பகுதிகளைச் சீனாவின் நிலப்பகுதிகளாக குறித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நேரத்தில் மிகவும் முக்கியமான தொரு விடயத்தையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். ஐ.நா சபையை உலகறியும்..இந்த ஐ.நா சபையின் கீழ் பதினைந்து 15 கிளை அமைப்புகள் இருக்கின்றன. உலக சுகாதார நிறுவனம் உள்ளிட்டவை. அவற்றில் ஒன்று யுனெஸ்கோ. இது தான் நம் பாரம்பரிய இடங்களை, கோயில்களை, புராதனச் சின்னமாக அறிவித்து, பெரிய அங்கீகாரம் கொடுக்கும் ஓர் அமைப்பு. எல்லாமே ஐநாவின் கீழ்தான் இயங்கி வருகின்றன. உலக சுகாதார நிறுவனம் இப்படித் தப்பான வரைபடத்தை வெளியிட்டுள்ளார்கள் என்றும், நாங்கள் ஐநாவிடம் முறையிடப் போகிறோம் என்று ஒரு விடயத்தை இந்திய அரசாங்கம் சொல்லும் போதுதான், அதனை யார் கட்டுப்பாட்டுக்குள் வைத்து இயக்குகிறார்கள் என்ற தேடுதலைத் தொடங்கியபோதுதான் பெரிய விஷயங்கள் கண்ணில் பட்டது..

ஐ.நா விற்கு 15 கிளை அமைப்புகள் இருக்கிறது. 15 கிளை அமைப்புகளில் அமெரிக்கா ஒரே ஒரு அமைப்புக்கு மட்டும் தான் தலைமை தாங்குகிறது.



சீன அதிபர் உரை ஆற்றிய கேட்போர் கூடம்






சீனா கிட்டத்தட்ட நான்கிற்கும் மேற்பட்ட அமைப்புகளில் தலைமை தாங்குகிறது. இந்த நான்கு அமைப்புகள் மிக முக்கியமான அமைப்புகள் என்று சொல்லலாம். இந்த 4 அமைப்புகளுக்கும் சீனா தலைமை தாங்குகிறது என்னும் செய்தியைப் படித்தவுடன், சீனாவினுடைய அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் என்னவாக இருக்கும் என்னும் கேள்வி எழுந்தது. அடுத்த 50 வருடத்தில் சீனா செய்யப்போகும் சாகசங்கள் எனப் பார்க்கும் போது, 6 யுத்தங்களை நடத்த அழுத்தத்தை கொடுப்பார்கள் எனப் பல ஊடகங்கள், செய்தி நிறுவனங்கள் மற்றும் சீனாவை சேர்ந்த அதிகாரிகள் சிலர் சொல்லியிருக்கிறார்கள். அதில் குறிப்பாக 2020 இல் இருந்து 2025 இற்குள் தாய்வானுக்கு எதிராகச் சீனா மிகப்பெரிய யுத்தத்தை நடத்தும். அது தாய்வானைத் தன் வசப்படுத்திக் கொள்ளும். அதன் பின் 2025 பிறகுதான் தென்சீனக் கடலில் சீனாவின் வளர்ச்சி அபரிமிதமாக இருக்கப் போகிறது. அடுத்த யுத்தம் ஜப்பானுக்கு எதிராக இருக்கலாம். அதன் பிறகு, ஆறாவதாக அதாவது 2050 - 2060 இந்த காலப்பகுதிக்குள் சீனா - ரஷ்யாவிற்கு எதிரான ஓர் யுத்தத்தை முன்னெடுக்கும் என அதில் கூறப்பட்டுள்ளது. ஒரு கம்யூனிச நாடு வேறொரு கம்யூனிச நாட்டை எதிர்க்குமா? என்று கேட்டால், சீனா ஒரு கம்யூனிச நாடா? கம்யூனிச நாடு என்கிற போர்வையில் இருக்கும் ஒரு நாடு. அவ்வளவுதான்!



சீனாவின் திட்டங்கள் எல்லாமே கச்சிதமாகவே போடப்பட்டிருக்கிறது. 2049 பட்டை மற்றும் பாதை முன் முயற்சித் (Belt & Road initiative) திட்டம் என்பது எல்லா நாடுகளிலும் பரந்து விரிந்து இருக்க வேண்டும் என்னும் ஓர் கோரிக்கையை ஐநா வின் சார்பாகச் சீனா வைத்திருக்கிறது. அதெப்படி ஐ.நா சார்பாகச் சீனா வைக்க முடியும்? இந்த ஒரு கேள்விக்கான பதில் அஜெண்டா 21 (Agenda 21). ஐ.நா சபையால் உருவாக்கப்பட்ட திட்டம். 2030 இற்குள் எல்லோருக்கும் நல்ல வாழ்க்கை கொடுக்க வேண்டும். எப்படி நூறு ஒட்டகங்களுக்கு தண்ணீர் இல்லை என்று சொல்லிப் பத்தாயிரம் ஒட்டகங்களை கொன்றார்களோ? (அவுஸ்திரேலியா வில் நடந்த கொடூரம்) அதே மாதிரி 100 மனிதர்களுக்கு நல்ல சாப்பாடு கிடைக்கும் என்றால் 1000 மனிதர்களைக் கொன்று விட்டால் பரவாயில்லை எனும் ஓர் சிந்தனையை விதைக்கும் ஓர் விடயம் தான், ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals Of the United Nations) எனும் விடயம்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகள் என்பதை பட்டை மற்றும் பாதை முன்முயற்சி வழியாக சீனா எப்பொழுதும் ஆதரிக்கும் எனும் ஓர் வாக்குறுதியை கொடுத்து வருகிறது. ஒரு கட்டத்தில் யுனஸ்கோவிற்கான



நிதியுதவியை அமெரிக்கா நிறுத்தியது. உடனடியாக அடுத்த நாளே யுனஸ்கோவிற்குச் சீனா தனது ஆதரவுக் கரத்தை நீட்டியது. அதன் மூலம் யுனஸ்கோவிற்கான முதலாளி என்னும் இடத்திற்குச் அதன் ஆதரவுடன் சீனா வருகிறது. உலக சுகாதார நிறுவனத்திற்கான நிதியையும் சீனாவே வழங்குகிறது.

ஆதலால், சீனா என்ன சொல்கிறதோ அதனைத்தான் உலக சுகாதார நிறுவனம் செய்யும், கேட்கும், இதே போன்று சீனாவின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் ஐ.நாவின் கிளை நிறுவங்களாவன:
உணவு மற்றும் விவசாயத்திற்கான அமைப்பு (Food and Agriculture Organization),
உலகத் தொலைத் தொடர்பாடல் சங்கம் (International Telecommunication Union), தொழில்துறை மேம்பாட்டு அமைப்பு (United Nation Industrial Development Organization) மற்றும் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு (International Civil Aviation Organization). உலக சுகாதார நிறுவனமும் சீனாவின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. போலியாகத்தான் இந்தியாவுக்கு உலக சுகாதார நிறுவனத்திற்கான தலைமை பொறுப்பை கொடுக்க போகிறார்கள். ஆனால், சீனாவின் சொல்படிதான் அங்கே எல்லாமே நடக்கப்போகிறது. சீனாவும் ,ந்த ஐநா சபையின் உடைய 15 அமைப்புகளும் 25 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு ,ருக்கிறார்கள். ,வை எல்லாமே பெரிய பெரிய அமைப்புகள்.

சீனா, மெல்லமெல்ல இந்த உலகை ஆளும் ஒரு அமைப்பை அதனுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிறது. சீனா என்ன சொல்கிறதோ அதை மட்டும் செய்தால் போதும் என்ற நிலையில் ஐநாவின் தற்போது அமைப்புக்கள் உள்ளன.

இப்படியாக 2049 இல் சீனா மிகப் பெரிய சக்தியாக உருவெடுத்து நிற்கும் என்று ஆருடம் சொல் கிறார்கள்..

இதைத் தடுப்பதற்காக தான் பல நாடுகள் செயல்படுகின்றன. அது அமெரிக்காவாக இருக்கட்டும்.




இல்லாவிட்டால் ஐரோப்பிய நாடுகள் ஆக இருக்கட்டும். ஆனால் ஒரு கட்டத்துக்கு மேல் இவர்களால் இந்த வளர்ச்சியை தடுக்க முடியுமா? என்கிற கேள்வி இப்போது நம் மனதில் எழுகிறது.

இப்போதுதான் உலக நாடுகள் சீனாவை ஒன்று சேர்ந்து எதிர்ப்பதற்கான மிக முக்கியமான புள்ளி கொரோனா வைரஸ் மூலம்




வந்து நிற்கிறது என்று சொல்லலாம். அந்தப் புள்ளியைச் சரியாகப் பயன் படுத்திக் கொண்டார்களேயானால், சீனாவைப் பிற நாடுகள் வீழ்த்தி விடலாம்.

இல்லையெனில் 2049 இல் சீனா தான் மிக முக்கியமான ஒரு வல்லரசாக இருக்கப் போகிறது.

இதே வேளையில் ஐ.நா சபைக்கான நிதிப் பங்களிப்பில் சீனா மூன்றாவது இடத்தில் இருந்து இரண்டாவது இடத்திற்கு முன்னேறிவிட்டது. ஐ.நா சபைக்கு மற்றும் அதன் கிளை அமைப்புக்களுக்குத் தேவையான நிதிவழங்கலில் கடந்த பத்து வருடங் களில் 5 மடங்கு அதிகரித்துள்ளது. ஒன்று உலக நாடுகளைத் தான் கட்டுப்படுத்த வேண்டும் அல்லது அதனுடைய ஆட்சியின் கீழ் கொண்டு வரவேண்டும் என்னும் ஒரே ஒரு எண்ணம்தான்.


மிக முக்கியமான கேள்வி : ஏன் இலங்கை சீனாவுடன் ரொம்ப பெரிய நட்புறவை பாராட்டுகிறது? சோழியன் குடுமி சும்மா ஆடுமா? மகிந்த ராஜபக்ச மற்றும் அவர்சார் அரசபடைகள் மீது மிகப்பெரிய இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு, பல நாடுகளாலும் முன்வைக்கப்பட்டது.

இதற்கான சர்வதேச விசாரணைக் கான முன்னெடுப்புக்களை, ஐ.நா சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு நடத்துகிறது அல்லது நடத்த எத்தனிக்கிறது. இந்த மனித உரிமை அமைப்பும் சீனாவின் கட்டுப்பாட்டில்தான் இயங்குகிறது. இதற்கு அதிக விளக்கம் தேவையில்லை.

ஒரு வரி போதும்.. இலங்கை ஏன் சீனாவின் காலைப் பிடிக்கிறது?

# காற்று வாக்கிலே....

எல்லைமீறிய பௌத்த மதவாதியாகவும், சிங்கள இனவாதியாகவும் தன்னை அடையாளப்படுத்தி அவ்வப்போது சிறுபான்மை இனத்தவரைச் சீண்டி எரிச்சலூட்டும் வகையிலான கருத்துக்களை வெளியிட்டு வரும் எல்லாவல மெத்தானந்த தேரர் திருக்கோணேஸ்வரம் கோவில் குறித்தும், இராவணன் குறித்தும் அதிமேதாவித் தனமான முறையில் கூறிய கருத்துக்கள் கடந்த வாரத்தில் தமிழ், சிங்கள ஊடகங்களில் பேசு பொருளானமை குறிப்பிடத்தக்கது.
ஜனாதிபதியால் கிழக்குச் செயலணி என்ற அமைப்பு உருவாக்கப்பட்ட போதே அதன் உள்நோக்கம் குறித்து ஏராளமான சந்தேகங்கள் பல தரப்பினரிடமிருந்தும் எழுப்பப்பட்டன. அச் சந்தேகங்களை உறுதி செய்யுமாப் போன்று எல்லாவல மெத்தானந்த தேரர் போன்றோர் திடீர் திடீரென வெளியிட்டு வரும் கருத்துக்கள் நாட்டின் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கச் சூழலை நாசம் செய்யும் உள்நோக்கம் கொண்டவை என்பதில் ஐயமில்லை.
அவரது கோணேசர் மற்றும் நல்லூர் கோவில்கள் குறித்த கருத்துக்கள் அவரது தனிப்பட்ட கருத்துக்கள் என்றும் தன்னால் உருவாக்கப்பட்ட செயலணியின் கருத்துக்களல்ல என்றும் ஜனாதிபதி தெரிவித்திருப்பது ஒரு சமாளிப்பு நடவடிக்கையாகவே நோக்க வேண்டியுள்ளது. ஒரு செயலணியின் முக்கிய உறுப்பினர். அவர் அங்கம் வகிக்கும் செயலணியின் கௌரவத்தைக் குறைக்கும் வகையில், இன நல்லுறவைச் சிதைக்கும் வகையில் கருத்துக்களை முன்வைப்பது அவரது பண்பற்ற தன்மையை வெளிப்படுத்துவதாகவே அமையும். அப்பேற்பட்ட தன்மை கொண்டவர் ஒரு நல்ல நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதாக அரசால் கூறிக்கொள்ளப்படும் செயலணிக்கு பெருத்தமான உறுப்பினரா? என்பது குறித்து ஜனாதிபதி சிந்திக்க வேண்டும். மாறாக அது அவரது தனிப்பட்ட கருத்து எனக் கூறிச் சமாளிக்க முயல்வது பொறுப்புள்ள செயற்பாடாகாது.



அயோக்கியர்கள் ஆன்மீகவாதிகளாகவும் ஆன்மீகவாதிகள் அயோக்கியர்களாகவும் மாறுவது நாட்டிற்கு நல்லதல்ல. அறத்தின் வழி நடக்க வேண்டியவர்கள் இனங்களுக்களிடையேயான நல்லுறவை அறுக்கும் வழியை கடைப்பிடிப்பது அவர்கள் அணியும் காவியுடைக்கு களங்கம் ஏற்படுத்துவதாகவே அமையும்.

முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பௌத்த சிங்கள இனவாதிகளின் எதேச்சதிகாரப் போக்குகள் நாட்டின் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராக எல்லை மீறிப் போய்க் கொண்டிருப்பது இந்த நாட்டின் எதிர்காலம் எத்தகைய அமைதியின்மையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதை எச்சரிக்கையுடன் அச்சுறுத்துவதாகவே அமைந்துள்ளது. குறிப்பாகச் சில பௌத்தமத அடிப்படைவாதிகள் நாட்டை அதல பாதாளத்தை நோக்கி நகர்த்தும் பணியையே தமது தர்ம கைங்கரியமாக கருதிச் செயற்படுகிறார்களோ என்ற சந்தேகம் எழவே செய்கிறது.
சிறுபான்மை இனத்தவரை இழிவு படுத்துதல் மூலமோ அவர்களது தொன்மை வரலாற்று உரிமையை மறுப்பதன் மூலமோ, அவர்களின் சுயநிர்ணய வாழ்வுரிமையை நிராகரிப்பதன் மூலமோ சிங்கள பௌத்த சமூகத்தவர்க்கு பெருமையையும், கௌரவத்தையும் ஏற்படுத்தலாம். என அவர்கள் நம்புவார்களேயானால் அவர்களை விடவும் பரிதாபத்திற்குரியவர்கள் வேறு எவரும் இருக்கவே முடியாது.
புத்தத்தையும், தர்மத்தையும், சங்கத்தையும் முழுமையாகச் சரணடைந்தவர்களே பௌத்த துறவிகள். இன்றோ சில பௌத்த தேரர்கள் இவற்றிற்கு அப்பால் சென்று ஆணவத்தையும், அதிகாரத்தையும், அரசியலையும் சரணடைந்தவர்களாக புத்த பகவானின் போதனைகளை கிடப்பில் போட்டுவிட்டு கண்மூடித்தனமாக இனங்களுக்கிடையே மோதலையும், வெறுப்புணர்வையும் ஏற்படுத்தும் வெறும் காவியுடைதாரிகளாகத் தம்மை அடையாளப்படுத்த முனைகிறார்கள்.
பௌத்தானந்த தேரர்,ஞானசார தேரர், சத்தாதிஸ்ஸ தேரர், அதுரெலிய ரத்ன தேரர் என்று இந்த பட்டியலில் தம்மை இணைத்துக் கொண்டோர் பட்டியல் நீளவே செய்கிறது.
சிறுபான்மை இனத்தவர்களுக்கு உரிமையானதென இந்த மண்ணில் எதுவுமில்லை - பாரம்பரியம், பண்பாடு, தனித்துவமான மொழி, மதசார் வரலாற்றுத் தொன்மங்கள் என எதுவுமில்லை. அவர்களுக்கு இந்த நாட்டின் மூச்சுக்காற்றை சுவாசிக்கும் உரிமையை விட்டுக்கொடுத்ததே மிக அதிகம் என்ற தொனிப்பட இவர்கள் பேசும் பேச்சுக்களும் விடும் அறிக்கைகளும் பௌத்த தார்மீக பண்புகளை அவமதிக்கும் தன்மை கொண்டவை என்பதை வரலாறு பதிவு செய்து கொண்டே இருக்கிறது.



அவ்வப்போது ஆட்சியாளருக்கு எச்சரிக்கை விடும் தொனியில் கருத்துக்களை (வெறும் அறிக்கையாக மட்டும்...) வெளியிட்டு அசத்தி அரசியலில் தமிழ் மக்களுடனான தனது இருப்பை மற்றவர்களுக்கு நினைவூட்டிக் கொள்வதில் சம்பந்தன் ஐயா வெகு சமர்த்தர். இது அவரது அண்மைய அறிவிப்பு " இலங்கை அரசின் சம்மதத்துடன் ஐ.நா.சபையில் நிறைவேற்றப்பட்ட அரசியல், குடியியல் உரிமைகளின் அடிப்படையிலும், பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளின் அடிப்படையிலும் ஒரு மக்கள் குழாமிற்கு உள்ளக சுயநிர்ணய உரித்துள்ளது. இவற்றை நிறைவேற்ற வேண்டியது இலங்கை அரசின் கடமை- நாட்டின் கடமையும் கூட... இவை மறுக்கப்படுகின்ற போது விளைவுகள் பாதகமாக அமையலாம்." - இதனை அரசுக்கான ஒரு அறிவுறுத்தல் எச்சரிக்கையாகக் கூட கருதலாம்.
ஆனால் சர்வதேச சமூகத்தால் வரையறை செய்யப்பட்ட மேற்படி ஜனநாயக உரிமைகள் குறித்து வலியுறுத்தும் சம்பந்தன் ஐயா போருக்குப் பின்னரான இந்த ஒரு தசாப்த காலத்தில் ஆட்சியில் இருந்த அரசுகளின் ஊடாகத் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க எத்தகைய முயற்சிகளை அல்லது அழுத்தங்களைச் சர்வதேச சமூகத்தினூடாக அதாவது ஐ.நா சபையூடாக மேற்கொண்டார் என்ற கேள்விக்கு விடை உறுதிபடக் கூறுமளவிற்கு எதுவுமேயில்லை.
வெறும் அறிக்கைகளும் - அறிவுறுத்தல்களும் இலங்கை அரசை எதுவும் செய்துவிடாது என்பது நன்றாகத் தெரிந்தும் எமது மக்களின் பிரச்சினைகள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் மற்றும் சர்வதேச நாடுகளினூடாக மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளுக்காகக் கிடைத்த வாய்ப்புகள் எதனையும் பயன்படுத்த வில்லையே
மாறாக இன ஒடுக்குமுறையைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்த அரசுக்கு முண்டு கொடுத்துப் பாதுகாக்கும் கைங்கரியத்தையே தொடர்ந்து செய்து தமிழ் மக்களை ஏமாற்றியே வந்துள்ளார். ஏன் இப்போதும் கூட அடுத்து அமையப்போகும் அரசுக்கு மூன்றிலிரண்டு பங்கு பலம் சேர்க்க எந்த வகையில் உதவலாம் என்பது குறித்த சிந்தனையுடனேயே இருப்பது வெளிப்படையான விடயமே !



சரணாகதி மற்றும் சலுகை அரசியலை இலக்கு வைத்துக் கொண்டு மக்களின் உரிமை அரசியல் குறித்து பேசுவது மக்கள் விரோத அரசியலாகவே இருக்கும்....

தமிழ் அரசியல்வாதிகளிடையே வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவரான சி.வி.கே. சிவஞானம் அவர்கள் பரவலான விமர்சனத்திற்கு உள்ளாகும் ஒருவர். நிர்வாக சேவை அதிகாரியாக நீண்ட காலம் பொறுப்பான பதவிகளில் பணியாற்றிய அனுபவம் அரசியலில் அவருக்கு எந்த அளவில் வெற்றி பெற உதவியது என்ற கேள்விக்கான விடை அவருக்கு மட்டுமே தெரியும்.
அரசியல் தளத்தில் அவரது இருப்பு என்பது அவ்வப்போது சூழலுக்கு ஏற்ப இருப்பிடங்களை மாற்றியே வந்த போதும் ஏதோ ஒரு இடத்தில் - அதாவதுகட்சியில் தனக்கான இருக்கையொன்றை தொடர்ந்து ஏதோவொரு வகையில் தக்க வைத்தே வந்துள்ளார். அது ஒருபுறம் கிடக்கட்டும்.
தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு அதனுள் தனது தொடர் இருப்பை வெளிப்படுத்தும் வகையில் அவ்வப்போது எதைப் பற்றியென்றாலும் தனது கருத்தை அவருக்கேயான குரலில் கூறிவிடுவார் சி.வி.கே. கடந்த வாரத்தில் அவர் ஒரு புதுமையான தேர்தல் பிரசாரக் கருத்தை வெளியிட்டுள்ளார். "இந்தியாவின் தலையீட்டைக் கோர எங்களைப் பலமாக்க வேண்டும்." இதுதான் அவரின் அற்புதமான கண்டுபிடிப்பு கடந்த வாரத்தில் அவரின் கட்சித் தலைவர் சம்பந்தர் இந்தியப் பிரதமர் மோடியின் ஆதரவுக் கூட்டமைப்புக்கு தான் என்று குரலெழுப்பி இருந்தார். அவரின் நகைச்சுவை அலை ஓய முன் இவரது அலை எழுந்துள்ளது. இந்தியாவை நமது பிரச்சினைக்குள் தலையீடு செய்ய தூண்டக் கூட்டமைப்பு பலமாக வேண்டுமாம்!

சி.வி.கே ஐயா இந்தியப்படை அனுபவங்களை மறந்திருக்க மாட்டார் என்று எண்ணுகிறோம். அப்போது! அவர் இந்திய இராணுவ நிர்வாகத்தின் கீழ் ஒரு செல்வாக்குள்ள மனிதராக விளங்கினார் என்பது தெரிந்த விடயம். இந்தியப் படைக் காலக் கசப்பான அனுபவங்களையும் வலி நிறைந்த அச்சம் மிகுந்த வாழ்வும் அவருக்கல்ல... மக்களுக்கு நன்கு தெரியும். இந்தியத் தலையீடு எதையெல்லாம் கொண்டுவரும் என்பது நன்கு தெரிந்தும்... மீண்டும் இந்தியத் தலையீட்டைக் கோரக் கூட்டமைப்பைப் பலப்படுத்தக் கோருகிறார் என்றால்..! சிவஞான மொழியில் புதைந்துள்ள சுயநல அரசியலும், இந்திய விசுவாசமும் புரிகிறதல்லவா? - பாவம் தமிழ் மக்கள்...?



கல்கி

அந்தநாள் ஞாபகம்..

நமது இலங்கைக் கடிதம்....
- 17. 12. 1953 கல்கி -



# எது வகுப்புவாதம்?

கொழும்பு, டிசம்பர் மீ 12 உ,

சுமார் முப்பது வருடங்களுக்கு அதிகமாகச் சிங்களத் தலைவர்களுக்கு விசுவாசமாகவும், பிறந்த பொன் நாட்டுக்குச் சிறப்பாகவும் சேவை செய்த தம்மைப் பார்த்து வகுப்புவாதியென்றும், இன உணர்ச்சிகளைக் கிளப்பி விடுவதாகவும் புகார் செய்த வகுப்புவாதிகளுக்குக் கைத்தொழில் வீடமைப்பு இலாகா மந்திரி சேர் கந்தையா வைத்தியநாதன் பதில் கொடுத்திருந்திருக்கிறார். இவ்வாரம் அவர் நிகழ்த்திய பிரசங்கம் மிக முக்கியமானது.

சாதாரணமாக இரண்டு சங்கங்கள் ஒன்று சேர்ந்து ஒரு காரியத்தைச் செய்வதென்றால் அதிசயம். பல்வேறு சமய,கலாசார சமூகத் துறைகளில் இயங்கும் தமிழர்களின் முப்பது சங்கங்கள் ஒன்று சேர்ந்து கொழும்பு நகர மண்டபத்தில் சேர் கந்தையாவுக்கு ஒரு வரவேற்பு உபசாரம் நடத்திய பொழுது முன்னாள் பிரதமர் டட்லி சேனாநாயகா, பல வெளிநாட்டு ஸ்தானீகர்கள், நீதிபதிகள், பார்லிமெண்ட் மெம்பர்கள், ஒவ்வொரு சமயத்தையும், வகுப்பையும் சேர்ந்த பிரபலஸ்தர்கள் முதலான அவ்வளவு பேர்களும் திரண்டு வந்து சேர் கந்தையாவைக் கௌரவித்தது தமிழ் மக்கள் அனைவருக்குமே பெருமை தரும் வைபவமாயிருந்தது. சேர் கந்தையாவிடம்தான் மக்களுக்கு எவ்வளவு அபிமானம்!

இவ்வளவு காலமும் அரசாங்க சேவையில் வாய் மூடி மௌனியாயிருந்த சேர் கந்தையா அன்று அடை மழை பொழிவதைப் போலப் பொழிந்து கொட்டியதைக் கேட்டு அத்தனை பேர்களும் ஆச்சரியக் கடலில் மூழ்கிப் போனார்கள். மாபெரும் சிங்களத் தலைவர்களுக்கெல்லாம் பக்க பலமாகவும், அந்தரங்க ஆலோசகராகவும் இருந்ததை சேர் கந்தையா சுட்டிக்காட்டி "தமிழன் வாயைத் திறந்தால் வகுப்புவாதம், தமிழரின் பண்பாட்டைக் குறிப்பிட்டால் வகுப்புவாதம்! இப்படிச் சொல்லித் தமிழன் வாய் திறக்க வொட்டாமல் ஒடுக்குவதாயிருந்தால் அது ஒருபோதும் நடவாது" என்று எச்சரித்தார் சேர் கந்தையா.

"எது ஐயா வகுப்புவாதம்! நமது அரசியல் திட்டமும் ஜனநாயகமும் வழங்கும் உரிமைகளை ஒவ்வொருவரும் பெறவேண்டுமென்று கூறுவதா வகுப்புவாதம்! ஒடுக்கப்பட்ட மக்களை அஞ்சாமல் நிமிர்ந்து நின்று "உன் உரிமைகளைக் கேள்" என்று சொல்லுவதா வகுப்புவாதம்! ஒருவர் குறிப்பிட்ட ஒரு வகுப்பைச் சேர்ந்தவரென்பதற்காக அவருடைய உரிமைகளைப் பறிக்க முயற்சிப்பது வகுப்புவாதம். ஒருவர் வகுப்பார் மற்ற வகுப்பினருக்கு இல்லாத உரிமைகளையும் சலுகைகளையும் பெற முயற்சிப்பது வகுப்புவாதம். ஒருவர் குறிப்பிட்ட ஒரு வகுப்பைச் சேர்ந்தவரென்பதற்காக அவருடைய புகழையும் கீர்த்தியையும் பாழ்படுத்த முயற்சிப்பது வகுப்புவாதம்! இதைவிட்டு மனம் போனபடி ஒரு சிலர் வகுப்புவாதப் புகார்களை அள்ளி வீசுவது அவர்களது ஞான சூன்யத்தையே அம்பலப் படுத்துகிறது".

இவ்விதம் சேர் கந்தையா கொட்டி முழங்கிய பொழுது சபையில் ஒரு குண்டூசி கீழே விழுந்தால் கணீரென்று சப்தம் கேட்கும். அவ்வளவு கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு ஏதோ ஒரு புது உலகத்தில் சஞ்சரிப்பதைப் போலத் தோன்றியிருக்க வேண்டும். இப்படிப் பேசிய மனிதர் தமக்குத் தமிழர்களின் தலைவனாயிருக்க வேண்டுமென்ற ஆசையில்லை யென்றும் தலைமைப் பதவிக்குரிய போட்டியிலிருந்து தம்மை விடுவித்து விட வேண்டுமென்றும் கூறினார். எப்படி இருக்கிறது கதை! இது அவர் இஷ்டமா அல்லது தமிழ் மக்களின் இஷ்டமா? வேண்டாமென்பவர்களைச் சும்மா விட்டுவிடுவது தமிழர்களின் வழக்கமில்லை. அதிலும் தமிழ் மக்களின் சோதனை மிக்க இக்காலத்தில் சேர் கந்தையாவைப் போன்ற ஒரு சிறந்த அறிவாளியை அவருடைய இஷ்டம் போல ஒதுங்கி நிற்க யார் விடுவார்கள்?

இந்தியர் பிரச்சினையிலும் சேர் கந்தையாவுக்கு மனமாற்றம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. மேற்படி கூட்டத்தில் ஸ்ரீ.கே.பி. ஹரன் பேசிய பொழுது இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையே நல்லுறவை ஏற்படுத்த அடுத்து நடக்கப் போகும் புது டில்லி பிரதமர்கள் சம்பாஷணையில் சேர் கந்தையா தீவிர முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

டில்லி சம்பாஷணைகளைப் பற்றிப் பிரஸ்தாபிக்கும் பொழுது இந்தியர்களுக்குப் பிரஜாவுரிமை மறுக்கச் சில பிற்போக்கு கண்டியத் தலைவர்கள் ஒரு புதிய காரணத்தைச் சொல்ல இப்பொழுது கிளம்பியிருப்பதையும் குறிப்பிட வேண்டும். இந்தியத் தமிழர்களுக்கு ஓட்டுரிமையளித்தால் அவர்களும் யாழ்ப்பாணத் தமிழர்களும் ஒரு ஐக்கிய முன்னணியில் சேர்ந்து அரசியல் அதிகாரத்தைச் சிங்களவர்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்டு விடுவார்களாம். இதற்காகத் தற்போதைய பிரஜாவுரிமைச் சட்டத்தை ரத்து செய்து விட்டு இன்னும் கடுமையான புதிய சட்டத்தை இயற்ற வேண்டுமென்று பிரதம மந்திரியிடம் கண்டியத் தலைவர்கள் கோரியதாயும், ஆனால் அவர்களுடைய அநீதியான போக்கைப் பிரதமர் ஆதரிக்கத் தயாராயில்லையென்றும் தெரிய வருகிறது.

தீவிர சிங்களவாதிகள் இலங்கையைத் தங்களுடைய பாட்டன் வீட்டுச் சொத்துமாதிரி நினைத்துப் பேசும் பொழுது தமிழ் மக்கள் கவலையடைவதில் நியாயமில்லாம லென்ன? இந்தியர்களை நாடு கடத்த நினைப்பதும் பிரஜாவுரிமை மறுப்பதும் தமிழர்களை ஒடுக்கும் முயற்சியென்றும் ஒரு இந்தியர் கூட இலங்கையிலிருந்து நாடுகடத்தப்படுவதைத் தாங்கள் ஆதரிக்க முடியாதென்றும் தமிழரசுக் கட்சித் தலைவர் ஸ்ரீ எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அவ்வறிக்கையில் இலங்கையிலிருக்கும் இந்தியர்களை இந்தியாவுக்குத் திருப்பி வருமாறு அழைக்க இந்திய அரசாங்கத்துக்கு உரிமை கிடையாதென்பதையும் வலியுறுத்தியிருக்கிறார். புது டில்லியில் இரு தேசப் பிரதமர்களும் சந்தித்துப் பேசும் சமயத்தில் இலங்கை இந்திய காங்கிரஸ/ம் அங்கு ஒரு தூது கோஷ்டியை அனுப்பி வைக்க உத்தேசித்து, இது பற்றி இம்மாதம் இருபத்தாறாம் தேதி இறுதியான முடிவு செய்யவிருக்கிறது. இலங்கை இந்திய காங்கிரஸின் சம்மதத்தின் மீதே எவ்வித உடன்பாடும் செய்யப்பட வேண்டுமென்றும், காங்கிரஸைக் கேளாமல் இலங்கை இந்தியர்களின் தலைவிதியை இரு அரசாங்கங்களுக்குமாகச் சேர்ந்து பைசல் செய்ய அவர்கள் அஃறிணைப் பொருள்களல்ல வென்றும் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ தொண்டமான் இவ்வாரம் ஒரு கூட்டத்தில் வலியுறுத்தினார்.

- ரஜனி -

**ஈழத்தமிழ் இலக்கியப் பரப்பில் தனித்துவ ஆளுமையுடன்தடம்பதித்த செ. யோகநாதன் சிறுகதை, குறுநாவல், நாவல்,கவிதை, கட்டுரை. சிறுவர் இலக்கியம் எனச் சகல இலக்கிய வடிவங்களிலும்,நிரந்தர அடையாளத்தை ஏற்படுத்தியவர். மானுட நேயம் அவரது படைப்புகளின் அடிநாதம். துனித்துவமிக்க எழுத்து நடை இவரது படைப்புகளுக்குக் கம்பீரம் வழங்கும். ஆமரராகிவிட்டஇவரது இந்தச் சிறுகதை காலத்தால் முந்தியது, காலத்தைக் கடந்தும் உயிர்த் திருப்பது.**

# நிறங்கள்

- செ. யோகநாதன் -

பச்சை இலைகளிலே தூங்கிக்
கிடந்த மலர்கள் இதழ் விரித்து மகரந்தத்தை
சிந்திச் சிரிக்கக் காலை மலர்கிறது.
தளிர்கள் செங்கொழுந்துகளாய் எரிய
மாமரம் அமைதியில் கனவு காண்கிறது.
அதன் கபில நிறக் கரங்களில் கட்டப்பட்ட
ஊஞ்சலிலே ஒரு குழந்தை
ஆடிக்கொண்டிருக்கிறது.
மெல்லிய தென்றலின் போக்கிலே சில
பழுப்பு இலைகள் மேலும் கீழுமாகத் தாவிப்
புழுதியில் படியும் போது எனக்கு மனதிற்குள்
வேதனை கொப்பளிக்கிறது. மெல்லிய
கண்ணீர்க் கீற்றுகள் என்னையறியாமலே
கன்னங்களில் கோடிடுகின்றன. நினைவு
ரேகைகள் ஆழப்பதிந்த மனதில் இரத்தம்
பீறிடுகின்றது.
ஊஞ்சலில் ஒரு குழந்தை! ஊஞ்சல்
ஆடுகின்றது. நான் பின்னாலேயே
நிற்கின்றேன். என் நெஞ்சம் அவளோடு
எவ்வித்தாவி வருகின்றது. இப்பொழுது தான்,
அவள்– என்னுடைய மகள் உடம்பு
தேறியிருக்கிறாள். ஆனாலும் அவள்
முன்போல மணமலராயிராமல், நிறத்தின்
சாயமிழந்த கடதாசி மலராகவே இருக்கிறாள்.
அவள் எவ்வளவிற்கு மாறிவிட்டாள்.
அவளுக்குள் எவ்வளவு நிறங்கள்?
மனம் அவளுடைய நினைவுகளைக் கவளம்
கவளமாக உண்ணுகின்றது.
அடுத்த வீடு பூட்டியிருக்கின்றது. எங்கள்
வீட்டின் கதவு திறந்திருந்தாலும் இதயத்தின்
கதவு மூடுண்டு புலம்புகின்றது. நாங்கள்
மரப்பாவைகள் ஆகிவிட்டோம்.
அவள் ஒரு மலரைப் பறித்து
வைத்திருக்கிறாள். அது ஒரு சிவப்பு நிற
மலர். அதைக் கன்னங்களோடு
அணைத்துக்கொண்டு அவள்
அழுகின்றாளா? அவளது கண்கள் வெறித்து
உதடுகள் முணுமுணுக்கின்றன. அதுவேதான்
அவள் இதயம் சொரியும் கண்ணீரா?

(2)

அழகிய மலர்கள், மலர்கள்தான் விழிகள்.
காலடி எடுத்துச் சுவடு பதிக்கும்
இடமெல்லாம் களிப்பின் சுவடாகவே
பதிகின்றது. மெல்ல மெல்ல வெண் ஒளிக்
கீற்றின் வடிவம் செவ்விதழ்களிடையே
அரும்பி அசைய, பிஞ்சுக் கரங்கள்
மேலெழுந்து அர்த்தமற்ற சூனியத்தைத்
துளாவுகின்றன.
நீருக்குள் ஆழ இறங்கி நீர்ப்பூக்களைப்
பறிக்க முயலும் நுண்மை உணர்வுகள்
அதன் பிஞ்சு விரல்களின் அசைவில்
உழல்கின்றன.
இருளைக் கிழிக்கலாமா?
அதற்கு அது இருளாகவே தெரியவில்லை.
மெல்லிய பவளத்துண்டுகள் பசையற்று
வரண்டு நெஞ்சின் புலம்பலை ஒலி வடிவில்
சிந்துகின்றன.
“எச்சுமி வா.... வாச்சீ” பிறகு ஒரு அனுங்கல்.
“ இஞ்சேருங்கோ... மாமி இருக்கோ...
எச்சுமியைக் காட்டுங்கோ...
தெரியல்லையே... உசத்தி... இன்னம் உசத்தி...
ஆ... சிரி“டி எச்சுமி...”
துருத்தி போல நெடுமூச்செறியும் இதயம்.
எதையோ தேடிப் பறப்பதற்கு பூஞ்சிறகுகள்
தேடுகின்றன.
முடிவு மனத்துளக்கம். மூளியான
எண்ணங்கள்.
பிறகு இருள், அழுகை, விக்கல், “எச்சுமி
என்னை விட்டிட்டோ... எச்சுமி...”
புலம்பல்கள் நீள இதயங்கள் அழுகின்றன.
நான் சென்று அவளைத் தூக்குகிறேன்.

(03)

அது ஒரு நினைவு. நினைவுகள் அவளையே
நிழல்களாகித் தொடர்கின்றன. சிவப்பு
மலர்கள் இதழ் திறக்க மஞ்சள் மகரந்தம்
உதிர்வது போலவே நினைவுப் பூக்களும்
நெஞ்சம் அலற உதிர்கின்றன.
ஒரு வஸந்தகாலம்.
அடுத்த வீட்டில் ஒரே மகிழ்ச்சியில் குரல்கள்.
பக்கத்து வீட்டுக்காரருக்கு குழந்தை
பிறந்துவிட்டது.
“பக்கத்து மாமிவீட்டை என்னாச்சு?” பெரிய
கிழவியைப் போல நாடிக்கு ஒரு கையையும்
இடுப்பிற்கு மற்றொரு கையையும்
வைத்துக்கொண்டு என் மகள், என்னைப்
பார்த்துக் கேட்கிறாள். கண்கள் எங்கோ
ஆழத்தைக் காணும் துடிப்பிலே சுடர்கின்றன.
நான் அவளையே பார்க்கிறேன். சுடரின்
சுடராய், ஒளியின் ஒளியாய் அவளின்
கண்கள் கனிவினை உமிழ, அந்தப்



பார்வையிலே நான் நனைந்து கொண்டே
சொல்கிறேன். “பக்கத்து மாமி வீட்டை
தங்கச்சி பிறந்திருக்காம்”
“ஓ.... அப்ப சோக்கே!”
கனிவின் கண்கள் வியப்பால் கனிகின்றன.
எக்காளம் இடும் நெஞ்சத்திற்கு புதிய செய்தி
ரசத் துளிகளாகின்றன. பாத கிண்கிணி
எழும்பும் ஒலிகள் என் நெஞ்சிற்குள்
இனிமையை அழுத்தி மெழுகுகின்றன.
இப்படி, பல மாதங்கள் பூக்களாய்
உதிர்கின்றன. எங்கள் வீட்டிற்கும் அடுத்த
வீட்டிற்கும் எல்லையாக மூன்றடி உயரத்தில்
ஒரு சின்ன மதில். அந்த மதிலின் மேல்
பூச்சாடிகள், செழுமையின் உரத்தால்
அச்சாடிகளில் பசிய பின்னணியில்
ரோஜாமலர்கள் செம்முகங்காட்டிச் சிரிக்கும்.
அவள் எந்தநேரமும் அடுத்த வீட்டிற்குப்
போய்விடுவாள். அவளை நாங்கள்
ஒருவருடனும் சேரவிடுவதில்லை. அவள்
எங்கள் தெய்வம், உயிர். அந்த உயிர்
இன்னொரு உயிரோடு ஒட்டி உறவாடவே
அனுமதித்தோம். எந்த நேரமும் தனியே
விளையாடிய என்னுடைய மகளை– அந்த
அரும்பு தன்னுடைய பிஞ்சுச் சிரிப்பால் –
பிஞ்சு முகத்தில் பற்றிக் கொண்டது.
குட்டி “எச்சுமி” அதுதான் அவள் அந்த
அரும்பிற்கு இட்ட பெயர். செம்மை முரசுக்கு
பிஞ்சு விரலைப் பதித்து, கண்கள் மலர்,
எச்சுமி, என் குழந்தை இராஜாத்தியுடன்
என்னவெல்லாமோ பேசுவாள். காலையும்,
கைகளையும் ஆட்டிக் கொண்டு
பொன்மேனியின் சதைகள் புத்தொளி பெற
எச்சுமி, இராஜாத்தியை மணிக்கண்களால்
இமை கொட்டாது பார்த்துக்
கொண்டேயிருப்பாள். வெள்ளை
வெளேரேன்ற கண்திரையுள் கறுப்பு
நிறமணிகள். இராஜாத்தி இதழ்களை,
ஆவலில் மலர்த்துகின்றாள்.
“எச்சுமி, நீ இந்தளோ... அங்கச்சி...” கைகள்
பருமன் காட்ட நீளும், அதே வேளையில்
கண்களும் உதடுகளும் அகல விரியும். பெரிய
வேடிக்கையைச் சொல்லிவிட்டதாக
நினைத்துக் கொண்டு இராஜாத்தி சிரிப்பாள்.
எச்சுமி தூங்கும் பொழுதும் இராஜாத்தி
பக்கத்தில் இருப்பாள். தூக்கத்திலே எச்சுமி
சிரிப்பாள். இராஜாத்திக்கு அம்மா முன்பே
சொல்லியிருந்தாள். “இராஜி சாமி உன்னை
நித்திரையிலை அடிக்க நீ அழுவாய்....
அப்படித்தான் எல்லா அங்கச்சிக்கும்...”
இராஜாத்திக்கு அதைக் கேட்டால் ஒரே
சிரிப்புச் சிரிப்பாகவே வரும். ஆனால் எச்சுமி
முகத்தைச் சுழித்துக்கொண்டு வீரிடும்பொழுது
அவள் சுவாமியோடு “கண்ணைக்
கட்டிக்கோவம்!”

(04)

குழந்தை உலகத்திற்கு தனியாய்
வருகின்றது. மலரான அது
மார்போடணைக்கும் மலரின் ஸ்பரிசத்தால்
இதயமெங்கும் மகிழ்வுச் சலங்கையொலிக்க
உலகில் நீண்ட பாதையைக் காணுகின்றது.
எங்கள் மலரின் இதழ்கள் ஒருநாள்
படபடக்க படுக்கையில் தொய்ந்தது.
வானத்தில் தலைகாட்டும் நிலவை ஜன்னல்
வழியாகப் பார்த்துக் கொண்டே அதன்
கண்கள் அயர்வால் மூடுண்டன.
நான் கண்களைத் துக்கத்தால் நிறைத்து
இதயத்தின் குமுறலோடு இருளிடையே
வெதும்புகிறேன். என் மனைவியின்
மெல்லிய விம்மல் அணுக்கதிர்களாய் என்
நெஞ்சினுள் புகுந்து கனலை மூட்டுகின்றன.
சிறு சலனத்தை தாங்கமுடியாத நெஞ்சங்கள்
இருளறைக்குள் வெந்து துவள்கின்றன.
அவளும் அழுகின்றாள். நானும்
அழுகின்றேன்.
இன்னொரு குரல், “எச்சுமி.... என்ரை குட்டி....
அச்சா... நீ... அச்சா”
என் இதயம் கிழிகின்றது.நெஞ்சை அழுக்கிக்
கொண்டு நிலவைப் பார்த்த படி
விசும்புகின்றேன். என் மனைவி, என்
காலடியில் இருந்து தேம்புகின்றாள்.
அவள் எங்கள் மலர், ஒரே மலர் கண்ணீரின்
துளம்பலோடு அந்தக் கனவு கலைய
இராஜாத்தி எழுந்திருந்து சிணுங்குகின்றாள்.
“இராஜி... என்னம்மா...”
என் மனைவிதான் இராஜியைத்
தேற்றுகின்றாள். நான் நானாயில்லாது
அழுகின்ற பொழுது அந்த உதிரும்
மலருக்குத் தென்றலாக முடியுமா? இருளை
எரித்துக் கொண்டு விளக்கு மின்னுகின்றது.
“அம்மா...” அதே கண்கள். கனிவின்
உயிர்ப்பில் கனிந்த கண்களின் கெஞ்சல்.
நாலு விழிகள் மலரை மொய்க்கின்றன.
மலரின் விழிகளில் தயக்கம்.
உயிர்ப்பின் சுடரான பார்வை.
“அம்மா... எச்சுமியை நான் பார்க்கோனும்”.
எங்களுக்குள் பிரளயம். குருத்தெலும்புகள்
எரிகின்றன.
“ஐயோ தெய்வமே!”
அந்தக் குழந்தையின் கண்களிலே மின்னும்
ஏக்கத்தின் கணைகளை நாங்கள் எப்படித்
தாங்குவோம்? தவிதவித்த அதன்
பார்வையை – அதன் தெய்வக் குரலை–
அதன் சுடரின் உயிர்ப்பை எப்படி எங்களால்
ஏற்கமுடியும்?
நாங்கள் பெரு வெள்ளத்துள் அகப்பட்டு
நீர்ச்சுழிகளால் அலைக்கப்படுகின்றோம்.
மருட்சியின் நிழல் அவள் கண்களிலே, என்
இதயத்தை நோக்கி யாரோ கவண் கட்டி
எறிந்து....
நான் துன்பத்திலே உறைந்து, துன்பமற்ற
மலரை வாரியெடுத்தேன். இன்பமும்
துன்பமும் என் கண்களில் நிறமிட்டன.
அவள் சிரித்த முகத்தின் காந்தியில் நா அழ,
அவள் சிரிக்க, நான் சிரிக்க அவள்
சிணுங்கினாள்.
அறப்போகும் நூலின் கடைசி இழையாக
அவளுக்கு அவள் தெரியவில்லை. இள
அறுகம்புல்லை மேயும் கன்றின்
களிமயக்கில் எச்சுமியை அவள்
நோக்குகின்றாள்.
அரும்பின் அருகில் மலர்.
எல்லோரும் கண்ணீரில் நனைகிறோம்.
எச்சுமியை அவள் பார்த்துக்
கொண்டேயிருக்கின்றாள்.
அவள் இன்பமானாள்.

(5)

“எங்கை... இஞ்சேருங்கோ... மாமி இருங்கோ...
எச்சுமியைக் காட்டுங்கோ...
தெரியவில்லையே... உசத்தி... இன்னம்
உசத்தி... ஆ... அப்பிடித்தான் எச்சுமி
சாப்பிட்டியா... டீ... எச்சுமி அச்சா...”
இதே குரல் எங்கள் மூன்றடி மதிலின்
அருகில் கேட்கிறது. நோயில் விழுந்த மலர்
அந்த மூன்றடி மதிலின் அருகே தன்
உயிர்ப்பின் ஒளியை ஒலியாக்கி
அழைக்கின்றது. பக்கத்து வீட்டின் பசிய
கரத்தில் காலைக் கையை ஆட்டிக் கொண்டு
சிரிக்கும் அரும்பைப் பார்த்தது. பிறகுதான்
இராஜிக்கு மருந்தோ... சாப்பாடோ...

மலர் தனிமையில் சிரிக்கும், அழும்,
கதைக்கும்.
தினமும் மதிலின் கரையில்தான் அதன்
உயிரும் கண்களும் மலரும்.
ஒருநாள், மதிற்பூச்செடியில் ரோஜா
மலர்ந்திருந்தது, நல்ல செம்மை.
இந்திரகோபப் பூச்சியைப் போன்ற இதழடுக்கு.
"எச்சுமி.... இஞ்சை... அச்சா" மதிலின் மேலே
அரும்பு ஒளிர மலர் மகிழ்ந்து
குலுங்குகின்றது. பிறகு ரோஜா மலரையும்
எச்சுமியையும் பார்க்கின்றது. கண்களைச்
சுருக்குகின்றது. சிரிக்கின்றது, மெல்லிய
கனவோ?
"எச்சுமி... எனக்கு சேப்புச் சட்டை அச்சா...
அச்சா.."
அரும்பை ஏந்திய தாயின் கண்கள் பனிக்க
நான் இறும்புதெய்துகின்றேன்.
என்னுடைய குழந்தையோடும் பழகவிடாது
கட்டுப்படுத்தினேன். அதனால் முடிக்கும் அதன்
வார்த்தைகள் மீண்டும் நெஞ்சுக்குள்ளேயே
துவண்டு கருகின. அதனால்தான் எச்சுமியை
இராஜாத்தியால் பிரிந்திருக்க முடியவில்லை.
யன்னலோரம், வெளியே செல்லும்
சிறுவர்களைப் பார்த்தபடியே இராஜி
ஏங்கினால் என்ன? சேரியின் கெட்ட சகவாசம்
அவளுக்கு வேண்டாம். என்னுடைய மலர்,
என் மனைவியினுடைய மலர், அவள்
புழுதியில் படியக் கூடாதவள்.
மதிலின் ஓரத்தில் இராஜி நின்றாள்.
"இஞ்சேருங்கோ..."
பிறகு குரல் இல்லை.
தயக்கமே ஒலிக்கின்றது. "மாமி..."
"என்னம்மா..."
மதிற்கரையில், உருளும் தாய்மைக்குரல்,
"மாமி... எங்கடை எச்சுமியை என்ரை
கையிலை ஒருக்கா தாறீங்களா....? மாமி...
என்னாலை எச்சியிட்டை வரேலா... கால்
நோவுது கைநோவுது... வயிறு எரியுது...
நானும் எச்சுமியைப் பார்த்து... நானு
சொல்றன் தாறியளா?"
அவள் விக்குகின்றாள்.
தன் துடிப்பை, தன் வலிப்பை அது தன்
உயிர்ப்பிற்கு ஒளியாகும் ஒன்றிக்கே
சொல்லத் துடிக்கின்றது அது அழுகின்றது.
அவளுடைய பார்வை மதிலுக்கு கீழாக
இறங்காது குத்திடுகின்றது.
எங்கள் நெஞ்சிற்குள் கொள்ளி நெருப்பு
செருகப்பட்ட துடிப்பு.
(06)
கொதிக்கும் அந்தச் சின்னமடியில், விரல்களை
முரசிற்குள் துளாவிக் கொண்டு கிடக்கிறாள்
எச்சுமி. இராஜி சிரிக்கின்றாள். ஷ"எச்சுமிக்கு
சோப்புச் சட்டை சோக்கு... எச்சுமிக்கு கறுப்புப்
பொட்டு அச்சா. எச்சுமியின் சொத்தையிலை
கறுப்புப் பொட்டு எச்சுமி நெனக்கு உடம்பு
நோவு... நீ சோமாயிரு... நீ சோமாயிரு. எச்சுமி
உனக்கு பாடட்டோ"
கைகள் அவளை வருட, குரல் எங்கள்
நெஞ்சை வருடுகின்றது.
எச்சுமி சிரிக்கிறாள்.
இராஜி அவளைக் கொஞ்சுகிறாள்.
ஓராண்டுகாலம் இணைந்த அன்பிலே அந்தப்
பிஞ்சுகள் களித்த களிப்பிலே, உடலையும்
உள்ளத்தையும் மறந்த லயிப்பிலே நாங்கள்
தூசிலும் தூசாகி நிற்கின்றோம்.
ஒருநாள் புயல் வந்துவிட்டது. பக்கத்து
வீட்டுக்காரருக்கு வேலை மாற்றம். அன்றே
போக வேண்டும்.
இராஜி அதை அறிந்துவிட்டாள்.
பாதகிண்கினி அலறியது. தாராக்குஞ்சைப்
போல, அவள் தத்துப் பித்திக்கொண்டு
அடுத்தவீட்டிற்கு ஓடினாள்.
நானும் அவள் பின்னால் ஓடினேன்.
"எச்சுமி என்னோட்டை வாடீ" இராஜி
எச்சுமியை வாரி அள்ளினாள்.
எச்சுமி வீரிட்டலறினாள்.
தைத்துள்ள முள்ளை எடுக்கும் மெதுமை
இராஜாத்தியின் கரங்களிலே, உதித்தெழுத்த
நிலவுபோல முகம் ஜ்வலிக்கின்றது.
"எச்சுமி... எச்சுமி... என்னோட்டை வாம்மா...
என்னட்டை சோப்பூ... சோப்புக் கல்லு...
சோப்பு இனிப்பு"
குரல் மெலிவடைகின்றது. மனம்
இமைக்கவில்லை.
ஓடிய வேகக் களைப்பில் இராஜாத்தி
விதிர்விதிர்க்கிறாள்.
வேர்வை, அவள் உடலெங்கும் பொங்கியது.
எச்சுமி அவளைப் பார்த்துக் காலைக் கையை
ஆட்டிச் சிரித்தாள். உடனே இராஜி குதித்தாள்.
"எச்சி... எச்சுமி என்னோடை வாறா..."
கிழிந்த வார்த்தைகள் வெளிவர முன் அவள்
மயங்கிவிட்டாள். நான் அவளைத்
தூக்கிக்கொண்டு ஓடினேன்.
என் கண்களுக்குள் எத்தனை நிறங்கள்?
சிவப்பு.வெள்ளை.நீலம்.கறுப்பு.
ஐயோ! கறுப்பா! கறுப்பென்றால்?
திரும்பி வரும்பொழுது அடுத்த வீடு
பூட்டியிருந்தது.
பாத கிண்கிணிகள் நெஞ்சிற்குள்ளேயே
இழைந்து ஒலிக்கின்றன.
(07)
நடு இரவு. எங்கிருந்தோ மெல்லிய விசும்பல்.
"எச்சுமி... இதோ... உசத்தி... தெரியவில்லையே
இன்னோம் உசத்தி... அச்சா... இந்தா சோப்புச்
சட்டை.... சோப்புக் கல்லு... சோப்பு இனிப்பு...
வாடீ... என்கூட ஓடியாந்துடு..."
நான் துள்ளி எழுந்தேன்.
விளக்குகள் மின்னவில்லை.
இராஜி? யாரோ என் மண்டையில்
இரும்புலக்கையால் அடித்தாற்போல் நான்
பதறினேன். நெஞ்சிற்குள் ஆயிரமாயிரம்
விஷச் சுரங்கள்.
"இராஜி... இராஜி..."
அவளின் படுக்கை வெறுமையில் கிடந்தது.
என்னுடைய கண்கள் இருளைத் துளாவ–
மதில் ஓரத்திலே இரண்டு கற்கள்– அழிவு
கற்கள் கிடந்தன.
அதன் மேல் கால்களை வைத்து இராஜி
மதிலில் ஏறி...
"ஐயோ... அம்மா..." நெஞ்சமும் வீடும்
கிடுகிடுத்தன.
"எச்சுமி ஓடியா...?" அவள் அலறினாள், பின்
விழுந்... நான் கூவிக்கொண்டு அலறினேன்.
திண்ணிய இருளில் ஒளித் தலைகள்
தோன்றின. நான் நெய் பூசிய தரையில்
சறுக்கியவன் போல தலைகீழாய்ச்
சுழல்கிறேன். உலகமே ஏக்காளமிடுகிறது.
சிறகுகள் எரிந்த நாற்றம்.
(08)
என் மகள் இராஜி இதோ கிடக்கின்றாள்...
தன் உயிரின் சுடருக்கு அவள் கொண்டுசென்ற
சிவப்பு இனிப்பு... சிவப்புச் சட்டை.... சிவப்புக்
கல்லு... சிவப்புப் பூக்கள்....
என் நெஞ்சில் ஒன்றுமில்லை. மூண்டுகிடந்து
எரிந்த தீயின் இறுதிச் சுடரும் சோதியுள்
சோதியானது...
"அச்சா... அச்சா... எச்சுமி என்னோடை வாறா?"
இராஜி.
நீ என்ன
நிறம்?சிவப்பா?வெள்ளையா?நீலமா?
கறுப்பா...?
"இல்லை மகளே! கறுப்பென்றால் மரணமடி!
நீ... நீ சாந்தியடி.... சாந்திக்கு என்ன நிறம்?
வெள்ளையா? பச்சையா?
எண்ணமுடியாத தூரம் அவள். என்னிடம்
தான் இல்லை என்ற தவிப்பில் அவள்
கண்களை மூடிக்கொண்டு கிடக்கிறாள். முன்பு
அவள் பொய் நித்திரை கொள்ளும் போது
நான் அவளுடைய காதுக்குள் தும்பு விட்டுக்
"கிக்கிளு" மூட்டுவேன்!
இனி!
மதிலில் இரு கரங்களிடையே ஒரு அரும்பு...
மதில் ஓரத்திலே...வெறுமை... வெறுமை...

ஆடி 1962




இந்தியாவிலை இருந்து எந்திரன் 1, எந்திரன் 2 எண்டு ரஜனியின்ரை படம் வந்தமாதிரி இப்ப கொரோனாவும் வரத் தொடங்கிவிட்டுதாம். முதலாவது வந்து கொஞ்சம் ஆறுவம் எண்டு பெருமூச்சுவிட முன்னம், இரண்டாவது தரமும் நோய் வரத்தொடங்கிவிட்டுதெண்டு பேப்பர், றேடியோ, ரீவி எல்லாத்தையும் சொல்லத் தொடங்கிவிட்டினம். சனம் பயத்திலை திரியிதுகள்.

போன முறை மாதிரி வந்திடுமோ எண்ட பயத்திலை கொஞ்சச் சனம் சில்லறைக் கடையளைத் தடவத் தொடங்கிவிட்டினம். சாமான்களை வாங்கிப் பதுக்க வேணும் எண்டு சில்லறைக் கடைக்காரர் இரண்டு பேர் நிண்டு கதைச்சதைக் கண்டனான். போன ஊரடங்கிலை திடீர் திடீர் எண்டு பல கடையளைத் திறந்தவை எல்லே! இனி நாடு வழமைக்குத் திரும்பிவிட்டுது எண்டு அரசாங்கம் அறிவிச்சதால பலர் கடையளை மூடிப்போட்டினம். அதிலை எங்கடை தங்கமணி அக்காவும் ஒராள். இண்டைக்குக் காலமை தளபாடங்களை இழுத்துப்போட்டு தூசு தட்டுறதைப் பாத்தன். திரும்பவும் தட்டு முட்டுச் சாமான்களை வாங்கிப் போட்டுத் தன்ரை திடீர் கடையைத் துறக்கப் போறாவாம். இனி கோரோனா 2 எண்ட கொண்டாட்டம் துவங்கப் போகுதாம்.

இரண்டு மூண்டு மாதமாப் பள்ளிக் கூடம் போகாமல் நிண்டதாலை பிள்ளையள் எல்லாத்தின்ரை ஒழுக்கம் கெட்டுப்போச்சுதெண்டு அன்னம்மா ஒரே ஒப்பாரி. நேரவழிக்குச் சாப்பாடு இல்லையாம். ஒரே விளையாட்டுத் தானாம். வளவு மூலையிலை நிக்கிற புளியிலை கட்டின ஊஞ்சலிலை ஏறினால் பாடுபட்டுத்தான் இறக்கிக் கொண்டுவர வேண்டிக் கிடக்குதாம். எல்லாம் தலை கீழாப் போச்செண்டு சொன்னதுக்குப் பிறகுதான் தெரியும் எல்லாவீட்டிலையும் உதுதான் பிழைப்பெண்டு. ஆனால் கொரோன காலத்திலை கொஞ்சம் விசியம் விளங்கினவையின்ரை வீடுகளிலை புத்திசாலித்தனமா பிள்ளையளைக் கையாண்டிட்டினம். பல பிள்ளையள் வாசிக்கத் துவங்கிவிட்டினம்.

சில வீடுகளிலை குடும்பமா இருந்து கரம், செஸ் விளையாடுறதையும் கண்டனான். பக்குவப்பட்ட பிளையள் , பக்குவப்படுகிற வயசிலை உள்ள பிள்ளையள் உள்ள வீடுகளிலை ஒரு மாதிரிச் சமையலைப் பழக்கிப் போட்டினம். அது பெரிய காரியம் எண்டு நினைக்கிறன். அது ஒருவகையிலை நல்லதெண்டுதான் சொல்லவேணும். இப்ப இருக்கிற சூழலிலை கண்டபடி கடையிலை வாங்கித் தின்னேலாதெல்லே! அதாலை அவைக்கு விருப்பமானதைச் செய்து சாப்பிடலாம். மூண்டுமாசமா வீட்டிலை நிண்டதாலை தனியத் தேத்தண்ணி போடப் பழகிவிட்டினம். முட்டைபொரிச்சுத் தின்னினம். அதாலை விடிஞ்சாப் பொழுதுபட்டால் குசினிக்கை ஒரே அமளிதான்.இனிமேல் இப்பிடிச் சுகாதாரக் கேடுகள் அடிக்கடி வந்தால் கடை கண்ணியளிலை வேண்டித் தின்னேலாது. இயலுமானவரை வீடுகளிலை சமைக்கிறதுதான் சுகாதாரம். அப்ப சமையலைப் பிள்ளையளுக்கு பழக்கின பெற்றாரைப் புத்திசாலியள் எண்டுதான் சொல்லுவன்.

சில பிள்ளையள் வேலியிலை நிக்கிற கதியாலிலை குழை ஒடிச்சு ஆடு, மாட்டுக்குப் போடுறதையும் பாத்தான். அதை வெறும் குழை ஒடிச்சுப் போடுறதாப் பாக்கேலாது. வீட்டுக் கோடியிலைக் கட்டிக் கிடக்கிற ஆடு, மாடுகளைக் கூடப் பாக்க நேரமில்லாமல்தான் பிள்ளையள் இதுவரை ஒழித் திரிஞ்சவை. இப்ப கொரோன வந்ததாலை வீட்டுக்கை முடங்க வேண்டி வந்திட்டுதெல்லே. அவைக்கும் பொழுது போக வேணும் எண்டதாலை அவை வீட்டு வேலையளிலையும் வந்து உதவி செய்யினம். அப்பிடி வந்து உதவி செய்யிறதாலை அவைக்கு வீட்டுப் பிரச்சினைகள் தெரியவருகிது. பெற்றார் படுகிற கஷ்ட, நஷ்டத்தை ரேடியாகப் பாக்ககிறதுக்குரிய சந்தர்ப்பம் கிட்டி இருக்கேல்லை. வழமையா வீட்டிலை தொடர்ந்து நிக்கிறதுக்குரிய சந்தர்ப்பம் அவைக்கு முன்னம் கிடைக்கேல்லை. அப்பிடி நிண்டாலும் உறவுகளிலை இருந்தும், சிநேகிதங்களுமா ஆக்கள் வந்துபோவினம். ஒராளை ஒராள் ஆற அமர இருந்து கதைச்சுப் பேச நேரம் வராது. இப்ப கொரோனவாலை கண்டபடி வெளியாலை போகவும் ஏலாது.மற்றவையும் கண்டபடி வரேலாது. அதாலை வீட்டுக்கை முடங்கிக் கிடக்க வேண்டி வந்திட்டுது. ஆரம்பத்திலை கொஞ்ச நாளா எல்லாரும் விசர் பிடிச்ச மாதிரித்தான் இருந்தினம். பிறகு கொஞ்சம் கொஞ்சமா அந்தச் சூழலைப் பழகின பிறகு எல்லாம் சரியாப் போட்டுது. இப்ப பாக்கப் போனால் இன்னுமொருதரம் இப்பிடியான இடக்கு முடக்கு வந்தால் எப்பிடி அதை எதிர்கொள்ளுறது? அதைச் சமாளிக்கிறது எப்பிடி? எண்டு படிச்சிட்டினம். என்னைப் பொறுத்தவரை அது ஒரு பெரிய காரியத்தைக் கொரோனா செய்திருக்கிதெல்லே! நோய்க் கிருமி எண்டாலும் அது செய்த காரியம் பெரிசெல்லே?

பிறகு கொஞ்ச நாளா ரெலிபோனுக்குள்ளாலை படிப்பிக்கத் துவங்கிவிட்டினம். எங்களுக்கு ரெலிபோனுக்குள்ளாலை கதைக்கத்தான் தெரியும். இப்பத்தேப் பிள்ளையளுக்குப் படிக்கவும் தெரியிது. முந்தி ரெலிபோனைக் கேட்டால் தாய், தேப்பன் அவையின்ரை கையிலை அதைக் குடுக்காயினம். கேட்டால் அதாலை பிள்ளையள் கெட்டுப் போயிடுவினம் எண்டு சொல்லிச்சினம்.இப்ப அதுகளுக் கெண்டு ரெலிபோன் ஒண்டை வாங்கிக் குடுக்க வேணும் எண்ட நிலை வந்திட்டுது. பள்ளிக் கூடம் துவங்கின உடனை படிப்புத் துவங்கிவிட்டுது எண்டு பெற்றார் சந்தோஷப்பட்டவை. அவை எல்லாரும் இப்ப என்ன செய்யறதெண்டு தெரியாமல் தடு மாறினம். திரும்பவும் கொரோனவாம். இரண்டாவது அலை எண்டு கனக்க வெருட்டினம். தற்செயலாப் பள்ளிக் கூடத்தைப் பூட்ட வேண்டி வந்தால்.. எண்டு பலர் யோசிக்கினம்.

நான் நினைக்கேல்லை முந்தினமாதிரி எல்லாத்தையும் ஒரே யடியாப் பூட்டு வினம் எண்டு. நோயோடை வாழப் பழக வேண்டித்தான் வரும் எண்டு சனம் கதைக்கிது. அதென்ன நோயோடு வாழுறதெண்டது? ஒரு பக்கம் நோயிருக்கும். மற்றப் பக்கம் நாங்கள் சீவிச்சுக் கொண்டு போகவேண்டியதுதான் எண்டு நினைக்கிறன். எதுக்கும் டொக்டரைக் கண்டால் கேக்க வேணும் "அதென்ன நோயோடு வாழ்தல் எண்டால்..?" சின்னத்துரை விழுவான் சொல்லுறான் "இதுவரைகாலமும் கட்டின மனுசியோடை வாழ்ந்தாச்சாம். ஒருக்கா கொரோனாவோடையும் வாழ்ந்து பாப்பம் எண்டு..!

## பட்டியல் நீளுகின்றன..

மோட்சத்தின் கதவுகள்
திறக்கவும்
எல்லையிடவும்
பெரும் வல்லமையுடன்
எழுந்தருளியுள்ளோம்

கிரீடங்களில் இரத்த வாடை
எரிந்த இரவுகளை
மறைக்க
இருள் அப்பிய
முகங்களோடு
புனித தத்துவங்கள்
பேசப்படுகின்றன


காலங்கள் கருவுற்று
சிதைந்து போக
தேசத்தின் காலடிகள்
களவாடப்பட்டும்
சிதைக்கப்பட்டும்
போதி மரங்களாக
துளிர் விட்டு
எழுகின்றன

சிலுவை மரங்களிலும்
யேசுநாதர்கள்
இங்கு இல்லை
புனித அடையாளங்களும்
சிரச்சேதம்
செய்யப்பட்டுள்ளன
இனியும் அதிசயங்கள்
நடக்கலாம் என
காத்திருப்போர் பட்டியல்
நீளுகின்றன.

- டானியல் சௌந்திரன்

# கடந்த கால நிகழ்வுகள்


30.08.1981




ஸ்ரீ லங்காவில் தமிழர்களுக்கு எதிரான வன்முறை உச்சத்துக்குப் போனது.

08.02.1987


'தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் ராணுவ நடவடிக்கைகள் கவலை தருகிறது...'
- ப.சிதம்பரம்



இந்தியாவைப் பற்றி என்னதான் நினைக்கிறார்கள் என்பது புரியாத அளவுக்கு ஸ்ரீலங்கா அரசின் அலட்டலும், இந்தியாவை அலட்சியப்படுத்துவதும் அதிகரித்தது!


ஆனந்த விகடன்

சமரச முயற்சி 07.07.1957




02.07.1989

வாங்குகிற வேலையெல்லாம் வாங்கிவிட்டு, புலிகளுடன் மோதவிட்டு, கூடவே 'இந்திய சமாதானப் படை வெளியேற வேண்டும்' என்றார் ஸ்ரீலங்கா அதிபர் பிரேமதாசா!




விகடன் பிரசுரம்










இவ் இணைய வார இதழ் : இல. 151, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள நோர்சி மீடியா பணிமனையில் தயாராகி
12.07.2020 அன்று வெளியிடப்பட்டது.